
# கல்கி

KALKI 17.10.1971 40 காசு





# My My!
## My choice for the MAN

Century's *Cosy-Cot* COTTON SHIRTING with rich woollen feel

CENTURY for 100% cotton textiles

CENTURIZED PRESHRUNK FABRIC


THE **CENTURY** SPG. & MFG. CO. LTD., BOMBAY 25 DD

For Fashion Fabrics choose *Century Shirtings!*

NPS-CM 15

# விஜிபி

## மக்களின் வாழ்க்கைத் தரத்தை புரட்சிகரமான மாற்றத்துடன் சிறப்பிக்க உதவுகிறார்கள்



விஜிபி யின் கலபத்தவணைத் திட்டத்தின் மூலம் வாழ்க்கைக்குத் தேவையான பல பொருட்களை, சிக்கனமாக, வசதியாக வாங்கலாம். குறைந்த வருவாயிலும் நிறைந்த வாழ்வை பெறுங்கள்

**வி. ஜி. பன்னீர்தாஸ் & கோ**

விஜிபி பில்டிங்கஸ்
சைதாப்பேட்டை, சென்னை-15 போன் : 442333
தி. நகர், சென்னை-17 போன் : 440246
சத்தன் பஜார், சென்னை-3 போன் : 33214
விக்டரி ஹவுஸ், 7, மவுண்ட்ரோடு சென்னை-2. போன் : 81212

**வி. ஜி. பன்னீர்தாஸ் & கோ**

விஜிபி சதுக்கம், சைதாப்பேட்டை, சென்னை-15

சென்னை, செங்கல்பட்டு, வட ஆர்காடு, தென் ஆர்காடு மாவட்டங்களில் வசிப்பவர்கள் இந்த கூப்பனை பூர்த்தி செய்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பினால், எங்கள் பிரதிநிதி தங்களிடம் வந்து எமது கலபத் தவணை திட்டத்தின் மூலம் பொருள்கள் வாங்க உதவுவார்.

பெயர் ________________

முகவரி ________________

VGP விஜிபி தரமான பொருட்களின் இந்தியாவின் மிகப்பெரிய விற்பனையாளர்கள்


BSA, murphy, VGP, Godrej, RIVEX, USHA, Hercules, HMT, CAMY, NIPPON, TIMESTAR, ALLWYN, Record, Sunset, Vijay, Raleigh, Merritt, Mecca, BSA

NAS-212

விஜிபி புதிய ஷோரூம் விக்டரி ஹவுஸ், 7, மவுண்ட்ரோடு, சென்னை-2 போன் : 81212

இன்னுமொரு குழந்தையைப் பெறுவதற்குமுன் சற்று

# யோசியுங்கள்




இக்குழந்தையை நன்றாக படிக்க வைக்க வேண்டாமா? உங்கள் விருப்பப்படி, குழந்தைக்கு வசதிகள் அனைத்தும் அளிக்க வேண்டாமா? இன்னொரு குழந்தையை உடனே பெற்றால், இதெல்லாம் முடியுமா? சிரமம் தான். அடுத்த குழந்தை உடனே வேண்டாம் என்று நீங்கள் கருதுவது இயற்கைதானே.

நீங்கள் மட்டுமல்ல; உலகெங்கிலும் தம்பதிகள் இவ்விதம்தான் கருதுகிறார்கள். வளமுடன் வளர்க்க வசதிகள் பெருகும் வரை, அவர்கள் இன்னொரு குழந்தையைப் பெறுவதில்லை. நீங்களும் 'நிரோத்' உபயோகித்து குழந்தை பெறுவதைத் தள்ளிப்போடலாம். அனைவரும் விரும்பி ஏற்கும் ரப்பர் கருத்தடைச் சாதனம் நிரோத்; இது ஆண்களுக்கானது. தலைமுறை தலைமுறையாக உபயோகத்தில் இருந்துவரும் சிறந்த, எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத். நீங்களும் நிரோத் உபயோகியுங்கள்.

நிரோத் எங்கும் கிடைக்கிறது. அரசாங்க ஆதரவு விலை 15 பைசாவுக்கு 3




இன்னொரு குழந்தையை வளர்க்க வசதி பெறும் வரை
உபயோகியுங்கள்

## நிரோத்

லட்சக்கணக்கான பேர் விரும்பி ஏற்கும் எளிய, பாதுகாப்பான கருத்தடைச் சாதனம் நிரோத்.


பலசரக்குக் கடைகள், மருந்தகங்கள், வெற்றிலைபாக்குக்கடைகள் இங்கெல்லாம் நிரோத் விற்பனையாகிறது


மகிழ்ச்சி துள்ளும்
வளமான வாழ்வு
கிராமங்களிலே...
ராக்ஃபோர்ட் டால்மியா சிமெண்ட்
உறுதியான எதிர்காலத்திற்கு எழுப்பப்படும்
இன்றைய கட்டடம்.
டால்மியா சிமெண்ட் (பாரத்) லிட்.
பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் தொழிற்சாலை
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
தலைமை அலுவலகம்: 4, சிந்தியா ஹவுஸ், புது டெல்லி 1.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
சிமெண்ட் டிஸ்ட்ரிப்யூடர்ஸ் லிட்.
டால்மியாபுரம், (தமிழ்நாடு).



திருவாங்கூர் ரேயான்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தின் காரியதரிசி ஸ்ரீ V. சுப்பிரமணியன் அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **ஜெயபாலன்,** B.Tech.க்கும், ஸ்ரீ R. நாராயண சுவாமி அவர்கள் குமாரத்தி சௌ. **அம்பிகா** B. Com.க்கும் எர்ணாகுளத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



# கல்கி பொருளடக்கம்

விரோதிக்ருது புரட்டாசி 31, (17-10-1971)



"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.


சந்தா விவரம்:

| | ஒருவருடம் | ஆறுமாதம் |
|---|---|---|
| இந்தியா | ரூ. 20-00 | ரூ. 10-00 |
| இலங்கை (இலங்கைநாணயம்) | ரூ. 21-00 | ரூ. 10-50 |
| இதர நாடுகள் | ரூ. 45-00 | ரூ. 22-50 |

கல்கி

மலர் 31
இதழ் 12



# நான் சொல்வதைக் கேளுங்கள்

## ராஜாஜி

கோயிலும் வேண்டாம், கடவுளும் வேண்டாம், எல்லாம் பொய், பகுத்தறிவு போதும் வாழ்க்கை நலனுக்கு - இது பெரியார் ஈரோடு நாயக்கர் கொள்கை. மக்களுக்கு உள்ள அறிவு மிகக் குறைவு. அதற்கும் சத்துருவாக இருப்பது மது பானம். கட்குடியும் சாராயப் பழக்கமும் பகுத்தறிவைக் கொல்லும் பகையாகும். கோயிலும் கடவுளும் பகுத்தறிவும் எல்லாம் போய் மிச்சம் ஒன்றும் இராது. கள்ளிலும் சாராயத்திலும் மற்றும் பல போதைப் பொருள்களிலுமுள்ள மது விஷம் வயிற்றுக்குச் செலுத்தின உடனே மூளைக்கு ஏறுகிறது. அறிவுக்கு ஸ்தானம் மூளை. அந்த மூளையின் தொழிலைக் கெடுக்கும் பகையாகும் மது விஷம். மூளை தான் பகுத்தறிவுக்குக் காப்பு நிலையம். அந்தக் காப்பு நிலையத்தை அழித்துவிடும் விஷத்தை அருந்தாதீர். குரங்கு நெசவுத் தறியைப் பாழாக்கிவிடுவது போலாகும் மதுபானம். குரங்கு வர வர வளர்ந்து பெருங்கேடு உண்டாக்கும். நூலைச் சிக்கலாக்கிக் கெடுத்தபின் துணி நெய்ய இயலாது.

குடியைக் கெடுக்கும் கட்குடி. சர்வ நாசம் உண்டாக்கும், சாராயத்தை அருந்துதல். ரத்தகோசம், வாயுகோசங்கள், பித்த கோசம் எல்லாம் வர வர அழியும்.

அன்பார்ந்த குழந்தைகளுக்குச் சொல்லுகிறேன்: கள்ளு, சாராயக் கடைப் பக்கம் கண்ணைச் செலுத்தாதீர்கள், நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளும் சுதந்திரம் நமக்கு உண்டு. யார் எந்த மதுக்கடை வைத்தாலும் அவற்றின் கிட்டே நெருங்காதீர்.

ரப்பர் முத்திரைச் சட்டத்தை எதிர்த்து நீதிஸ்தலத்தில் ரிட் மனு தாக்கலாகியிருக்கிறது. அது வேறு விஷயம். சட்ட சபையில் வாதிக்காமல் செய்யப்பட்ட அந்தச் சட்டம் நியாயமா, செல்லுமா என்பதை நீதிஸ்தலத்தில் விசாரிப்பார்கள். அது அரசியல் மூலப்பட்டய விவாதம். அதைப் பற்றி நீதிபதிகள் தீர்ப்பு அளிப்பார்கள். உங்கள் பகுத்தறிவை நீங்கள் காப்பாற்றிக்கொள்வது உங்களுடைய உரிமை. அதை யாரும் பறிமுதல் செய்யவில்லை. அதைப் பற்றி விவாதமும் இல்லை. நண்பர்களின் துர்புத்திக்கும் விளையாட்டுக்கும் ஆளாகாதீர்கள். பாம்போடு விளையாடாதீர்கள்.

சீதாலக்ஷ்மியைத் திருடித் தூக்கிப் போய்க்கொண்டிருந்த அரக்கனை முதுமைக் கழுகு ஜடாயு எதிர்த்த ராமாயணக் கதையைப் படித்துத் தைரியம் கொள்ளுங்கள். உற்சாகமும் மனோதிடமும் உள்ள வீரனுக்கு ஆயுதம் வேண்டியதில்லை. விவேகமே சம்பத்து. அதைத் திருடும் கள்ளனண்டை போகாதீர். வழிப்பறிக் கடைக்காரனண்டை நெருங்காதீர்!

# ராஜாஜியின் கருத்துக்கள்

## ருவின் உள்நோக்கம்

இந்திய — ருஷிய உடன்படிக்கை சீனத்துக்கு விரோதமானதல்ல என்று சொல்லப்படுவதைத் தாம் நம்பத் தயார் என்று சூ-என்-லாய் கூறியிருக்கிறார். இந்திய — ருஷிய உடன்படிக்கையைப் பலவீனப்படுத்த வேண்டும் என்பதே சீனத்தின் எண்ணம். இந்தியா பலமடைந்துவிடக் கூடாது என்ற கருத்துக்கு இசைவாகவே சூ-என்-லாய் இப்படிச் சொல்லியிருக்கிறார். இதை முன்னேற்றப் பாதையில் ஓர் அடி எடுத்து வைத்ததாகக் கூறி நமது பிரதம மந்திரி வரவேற்றிருக்கிறார். இந்த வரவேற்பு இந்தியாவின் 'கூட்டுச் சேராமை' என்ற பிரமைக் கொள்கையைக் காப்பாற்றிவிட்டது! அதோடு இந்திய-ருஷிய உடன்படிக்கையைப் பலவீனப்படுத்தியும் விட்டது.

இந்தியாவுக்குள்ளேயே சீன எல்லையை ஒட்டிச் சூவுக்கு ஆதரவாகத் தேச விரோதக் கம்யூனிஸ சக்திகள் பலத்துடன் செயல்படுவதை மறக்கலாகாது.

## சாதுரியமும் சரித்திரப் பெருமையும்

சாதுரியசாலியாவது வேறு. பெரிய மனிதராக ஆவது வேறு. சாதுரியத்தின் மூலம் தன் அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ளலாம். ஆனால் தேசத்தின் பொருளாதாரத்தையோ, ஒழுக்கத்தையோ அபிவிருத்தி செய்ய இந்தச் சாதுரியம் பயன்படாது. தேசத்தில் கபீட்சத்தையும் தர்மத்தையும் நிலைப்படுத்தினவர்களைத்தான் பெரியவர், மகாபுருஷர் என்று சரித்திரம் கூறும். இந்தப் பெருமைக்குப் பாத்திரமாகாமல், சாதுரியத்தினால் அடைகிற மகிழ்ச்சி தாற்காலிகமானதே. கடைசியில் வெற்றுச் சாதுரியம் துன்பத்திலேயே முடியும்.

## நிபுணர் எச்சரிக்கை

சர்க்கார் துறையின் செலவுகள் வளர்ந்து வருவதால் பண சப்ளை ஏகத்தாறுகப் பெருகியிருப்பது ஒரு கடினமான பிரச்னையை உண்டாக்கியுள்ளது என்று ரிஸர்வ் பாங்கியின் டைரக்டர் குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ''பண சப்ளையையும் வருமான உயர்வின் உண்மையான மதிப்பையும் அறிவுக்குப் பொருந்திய வகையில் சமப்படுத்தினாலொழிய விலைவாசி உயர்வைச் சமாளிக்க முடியாமல் கைமீறிப் போய்விடும்'' என்று டைரக்டர்கள் கூறியதாக பம்பாய்ச் செய்தி (அக். 6) கூறுகிறது.

ரிஸர்வ் பாங்கு டைரக்டர் குழுவினர் தங்கள் கடமையைச் செய்து விட்டார்கள்.

சர்க்காரின் கட்டாய உத்தரவுகள் மூலம் விலைகளைக் கட்டுப்படுத்தி வைப்பது கள்ளச் சந்தையை விஸ்தரிப்பதிலேயே முடியும்; இதனால் செயற்கையான பண்டத் தட்டுப்பாடும் சிருஷ்டிக்கப்படும். மூல காரணங்களைக் கண்டுபிடித்துச் செப்பனிட வேண்டுமேயன்றி, விளைவுகளை நேரடியாக மாற்ற முற்படலாகாது.

## மனநிறைவு எங்கே?

செல்வச் செழிப்பு வேறு; மகிழ்ச்சி வேறு. செல்வச் செழிப்பைத் தேடி அடைந்தால்

---

### ஸ்ரீ காசி விசாலாட்சி கும்பாபிஷேகம்


சிவத்தலங்களுள் தனிப்புகழ் கொண்டு விளங்கும் காசிமாம்பதியில் விசுவேசுவரர் கோயிலில் நீண்டகாலமாக நமது தருமச் செல்வர்களான நகரத்தார் சமூகத்துக்குச் சிறப்புரிமைகள் இருப்பது குறிப்பிட வேண்டிய விஷயம். அங்கு நகரத்தார், சத்திரம் கட்டியும் நந்தவனம், பசுமடம் முதலியன நடத்தியும் வருகின்றனர். காசி ஆலயத்திலே நகரத்தார் கட்டளையாகத் திருவனந்தலும் உச்சிக் காலமும் அர்த்தஜாம பூஜையும் செம்மையாக நாள்தோறும் நடைபெற்று வருகின்றன.


காசி விசுவநாதரோடு கோயில் கொண்டிருக்கும் இறைவி விசாலாட்சியைக் காஞ்சி காமாட்சியுடனும், மதுரை மீனாட்சியுடனும் ஒருங்கு வைத்துப் போற்றுவது மரபு. விசாலாட்சி கோயிலில் விசேஷமான பூஜை உரிமைகளை நகரத்தார் பெற்று நூறு ஆண்டுகள் ஆகின்றன. 1893ல் கல்கத்தா நகரத்தார்கள் ஒரு லட்சம் ரூபாய்ச் செலவில் கருங்கல் திருப்பணியாக விசாலாட்சி கோயிலைப் புதுப்பித்தார்கள். 1908ல் விசாலாட்சி அம்மனுக்குத் தங்கத்தில் விக்கிரகமும் வெள்ளித் திருவாசியும் செய்து வைத்துக் கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறார்கள்.

தற்போது மீண்டும் இக்கோயிலில் இன்றியமையாது செய்ய வேண்டிய திருப்பணிகளைச் செய்தும், விசாலாட்சி அம்மன் திருவுருவத்தைப் புதிதாக அமைத்தும் கும்பாபிஷேகம் வைக்கப்பட்டிருக்கிறது. இப்பெரும் விழா ஐப்பசித் திங்கள் 15ம் நாள் (1—11—71) திங்கட்கிழமை காலை ஏழு மணிக்குமேல் ஏழரை மணிக்குள் வாரணாசி (காசி)யில் நடைபெறுகிறது. தானதர்மத்தில் சிறந்த நமது நாட்டுக்கோட்டை பெருமக்கள் காசி ஆலயத்தில் ஈடுபாடு கொண்டு, கும்பாபிஷேகம் செய்வது நமக்குத் தனிப் பெருமையாகும். சௌகரியப்பட்டவர்கள் கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளலாம். குடமுழுக்குப் பெறும் அம்பிகை உலகைத் தன் அருள் முழுக்கில் ஆட்படுத்துவாளாக!

மகிழ்ச்சி பெற்றுவிட முடியும் என்பதில்லை. மாறாக, செல்வத் தேட்டத்திலேயே ஒரு தேசம் தீவிரமாக ஈடுபட்டால், அதனால் ஏற்படும் தீமைகள் மக்களின் மகிழ்ச்சியைத் துரத்தியடிக்கத் தொடங்கும். பிறருக்குத் தீமை விளைவிக்காத வகையில் அவரவரும் சுதந்திரமாகச் சுயேச்சைப்படி வாழ்வதில்தான் மகிழ்ச்சி இருக்கிறது. இந்த உண்மையை ருஷியக் கம்யூனிஸ்டுகள் உணரத் தொடங்கி விட்டனர். அம்மக்கள் மௌனமாகவே, உள்ளுக்குள் வெளிர்ந்திருப்பதால் ருஷிய சர்க்காரும் பல அம்சங்களில் தன் சர்வாதிகாரக் கொள்கையை மாற்றிக் கொண்டிருக்கிறது. மறுபுறம் உண்மை ஜனநாயகங்களிலோ மக்கள் பிறருக்குத் தீமை செய்யாமல் தடுப்பதோடு சர்க்கார் நின்றுவிடக் கூடாது. மக்கள் நலனுக்கான அடித்தளத்தை அமைத்துத் தரும் பொறுப்பையும் சர்க்காரே மேற்கொள்ள வேண்டும் என்ற உணர்வு பிறந்திருக்கிறது. இவ்வாறு ஜனநாயகமும் கம்யூனிஸமும் ஒன்றாகவே ஆகி வருகின்றன. இது இயற்கை விதிகளை அநுசரித்து ஏற்பட்டுள்ள நிலை. எனவே இதைத் தவிர்க்க முடியாது.

ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது. அடிமை நிலையில் உள்ள மக்கள் எத்தனை சௌகரியங்களை அநுபவித்தாலும் மகிழ்ச்சியாக இருப்பது சாத்தியமே இல்லை. தங்களது அரசாங்கம் எவ்வளவு சக்தி பெற்றிருப்பினும் சரி, மக்களைக் குழப்புவதற்காக அது எத்தனை படாடோபங்கள் செய்தாலும் சரி, சுதந்திரமில்லாத பிரஜைகள் மனநிறைவு காண முடியாது.




## பாக் படை எடுக்காதிருந்திருந்தால்...

இருபத்திநாலு ஆண்டுகளுக்கு முன் காச்மீரத்தின் மீது பாகிஸ்தான் ராணுவ ஆக்கிரமிப்புச் செய்ததால்தான், அந்நாட்டு மன்னர் இந்தியாவுடன் தம் ராஜ்யத்தை இணைத்தார். அவ்வாறு பாகிஸ்தான் செய்யாதிருந்திருந்தால் இப்போது நேபாளம், பூடான், ஸிக்கிம் ஆகிய ராஜ்யங்களின் மன்னர்கள் சுதந்திரமாக ஆட்சி புரிவது போலவே காச்மீர மன்னரும் அரசு நடத்தி வந்திருப்பார். காச்மீரம் யாரைச் சேர்ந்தது என்பது குறித்து இரு நாடுகளிடை போட்டிப் பாத்தியதை உரிமைகளும் எழுந்திரா. அதாவது, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சில்லறைப் பிரச்னைகளே இருந்திருக்கும். அவற்றை எளிதாகத் தீர்த்துக் கொண்டிருக்கலாம். பாகிஸ்தானும் இந்தியாவும் நேசநாடுகளாக இருந்திருக்கும். எத்தனையோ சிக்கல்களிலிருந்து இரு நாடுகளுமே காப்பாற்றப்பட்டிருக்கும்.

காச்மீர மன்னர் இந்தியாவோடு ராஜ்யத்தை இணைத்தபோது, அந்த நாடு யாரோடு இணையவேண்டும் என்பது பற்றி உரிய சமயத்தில் பொதுஜன வாக்கெடுப்பு நடத்துவதாகப் பாரத சர்க்கார் உறுதிமொழி தந்தது. இப்போதும் கூட, அதன்படி காச்மீரத்தில் வாக்கெடுப்பு நடத்திப் பிரச்னையைத் தீர்த்துவிட்டால், அதன்பின் இந்தியா - பாகிஸ்தான் இரண்டுக்குமே விடிவு காலம் பிறப்பதில் நம்பிக்கை கொள்ளலாம்.

### தேசபக்தர் மறைவு

சமீபத்தில் காலஞ்சென்ற திரு கேளப்பன் தலைசிறந்த தேசபக்தர்களில் ஒருவர். சுதந்திரப் போராட்டத்தின் தலைசிறந்த வீரர்களில் அவர் ஒருவர். இன்று மலபாரில் நல்லதாகக் காணப்படும் பல அம்சங்களுக்குக் கேளப்பனின் கடும் உழைப்பும், கட்டுப்பாடும், தூய நடத்தையுமே காரணம் எனக் கூறலாம்.

ஆதியில் கேரளத்தைப் பற்றி நான் அறிந்தது கேளப்பன் மூலமாகத்தான். காந்திய வானில் அவர் ஒரு சுடர் நட்சத்திரம். பழைய மகா மனிதர்கள் ஒவ்வொருவராக மறைவதைக் காணும்போது, உண்மையான தலைமையில் ஏற்பட்டுள்ள காலி இடத்தை எப்படிப் பூர்த்தி செய்யப் போகிறோம் என்று மலைப்பாக இருக்கிறது.

# என்ன சேதி?

### வாழ்த்துகிறோம்

தென்னிந்தியத் தொழில் வர்த்தகச் சங்கத்தின் நடப்பு ஆண்டு (1971–72)க்குத் தலைவராக குமாரராஜா திரு எம்.ஏ.எம். ராமசாமி இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். 1970–71ம் ஆண்டில் இவர் தலைவராக இருந்தபோதுதான் தென் இந்தியத் தொழில் வர்த்தகச் சங்கம் தனது வைர விழாவை மிகச் சிறப்பான முறையில் கொண்டாடிற்று. வர்த்தகச் சமூகத்தினர் திரு எம். ஏ. எம். ராமசாமியிடம் வைத்திருக்கும் அளவற்ற மதிப்புக்கும் நம்பிக்கைக்கும் அவரே இந்த ஆண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சான்றாகும். திரு. எம். ஏ. எம். ராமசாமி விளையாட்டுக் கலைகளின் போஷகரும்கூட. தமது அருமைச் சகோதரர் காலஞ்சென்ற குமாரராஜா முத்தையா அவர்களது நினைவில் ஒரு தங்கக் கோப்பையை அவர் இந்தியாவில் தலைசிறந்த விளையாட்டுக் கலைஞர்களுக்கு வருஷா வருஷம் வழங்க முன்வந்திருக்கிறார். முதல் தங்கக் கோப்பை மேற்கிந்தியத் தீவு, இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிகளை வென்று புகழ்பரப்பிய இந்திய கோஷ்டியின் தலைசிறந்த ஆட்டக்காரரான காவஸ்கருக்குக் கிட்டியிருக்கிறது.

திரு எம். ஏ. எம். ராமசாமியின் பதவிக் காலம் தென்னிந்தியத் தொழில் துறைக்குப் பொற்காலமாகத் திகழப் பிரார்த்திக்கிறோம்.



### தேதி மாற்றம்

கல்கி 29–8–1971 இதழில் 'அபிராமி அந்தாதிப் போட்டிப் பரிசு' விவரங்கள் வெளியாகியுள்ளன. விஜய தசமியன்று நடக்க விருந்த இந்தப் போட்டி அக்டோபர் 31ந் தேதிக்குத் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விவரங்களை, 'பொறுப்பாளர், காமகோட்டம் அபிராமி அந்தாதிக் குழு, 51, பட்டமங்கலத் தெரு, மாயூரம், தஞ்சை மாவட்டம்' என்ற முகவரிக்கு எழுதிப் பெறலாம்.




மனதிற்குகந்த
தூய வெண்மையைப் பெற
ஓ ஓ பி
நீலம்
ஓ ஓ பி நீலம் உடனடியாக முற்றிலும் கரைந்துவிடும் வெள்ளைத் துணிகள் ஒரே சீராக பால்போல் பளிச்சிடுகின்றன. உங்கள் சட்டைகள், புடவைகள், பெட்ஷீட்டுகள் மற்ற துணிகள் எதையும் வெள்ளை வெளேர் என்று ஆக்க மிகவும் சிக்கனமான வழி இது. நீலப்புள்ளி விழாது. மஞ்சள் திட்டு தெரியாது.
ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவுத் தயாரிப்பு இந்தியாவின் மிக நவீன அல்டிராமரைன் தொழிற்சாலையில் உருவானது
தயாரிப்பாளர்:
அல்டிராமரைன் & பிக்மென்ட்ஸ்
லிமிடெட், அம்பத்தூர், சென்னை 53
OOB
BLUE
BEST ULTRAMARINE
ULTRAMARINE & PIGMENTS LTD.
UPL/66-66

# வேறு எந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் பெறுங்கள்

உபயோகித்துப் பாருங்கள்! லிப்டன் ரூபி டஸ்ட் வேறெந்தத் தூள் தேயிலையையும் விட அதிகக் கோப்பைகள் தேநீர் தருகிறது.

அது மட்டுமல்ல! ரூபி டஸ்ட் தேயிலையைக் கொண்டு நிறம், மணம், குணம் நிறைந்த ருசி மிகுந்த பானத்தை உடனடியாகப் பெறலாம்.

எனவே லிப்டன் ரூபி டஸ்ட் "தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்" என்பதில் அதிசயம் ஏதுவும் இல்லை.



# லிப்டன் ரூபி டஸ்ட்

தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்




LIPTON

லிப்டன் என்றாலே நல்ல டீ

பாக்கிங் செய்த தேயிலை மட்டுமே புதிதாகவும், மணத்துடனும் திகழ்கிறது

LRDC-8 TAM



# பசுபதி

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்



**ப**ரமேச்வரனுக்குப் பசுபதி என்று ஒரு பெயர். இங்கு பசு என்று சொல்வது அவருடைய வாகனமான ரிஷபத்தையோ, காவலாளியான நந்தியையோ அல்ல. பசு என்பது நாம்தான். ஜீவர்களெல்லாம் பசுக்கள். அவர்களுக்கு யஜமானனாக இருக்கும் ஈச்வரனே பசுபதி.

தழையைக் கண்ட இடமெல்லாம் ஓடுகிற பசுவைப்போல், இந்திரிய சௌக்கியத்தைத் தேடி ஓடிக் கொண்டேயிருக்கிறோம் நாம். பசுவின் சொந்தக்காரன் அதைக் கட்டிப் போடுவதுபோல் பசுபதியான ஈச்வரன் நம்மைக் கட்டிப் போட்டிருக்கிறான்.

'எங்கே கட்டியிருக்கிறான், கண்ணுக்குக் கட்டு எதுவும் தெரியவில்லையே' என்று தோன்றும். ஆனாலும் நம்மை அறியாமலே இந்தக் கட்டைப் பற்றி நாம் அவ்வப்போது பேசுகிறோம். ஒரு காரியத்துக்காக நாம் எத்தனையோ முயற்சி செய்கிறோம்; அப்படியும் அது பலிதமாகவில்லை : இச்சமயத்தில், 'முடிந்ததெல்லாம் செய்தேன்; ஆனால் கர்ம பந்தம் யாரை விட்டது? காரியம் ஜயிக்கவில்லை' என்று சமாதானம் சொல்லிக் கொள்கிறோம். 'பந்தம்' என்பதுதான் 'கட்டு'. நம்முடைய பூர்வ கர்மாவினால் நம்மைக் கட்டியிருக்கிறார் பசுபதி.

கயிற்றால் கட்டப்பட்ட பசுவுக்கு, அந்தக் கட்டின் மீது கோபம்தான் வரும். ஆனால் கட்டை அவிழ்த்துவிட்டால் என்ன ஆகிறது? அது அசலான் தோட்டத்தில் மேய்கிறது. அவன் அதை வெளு வெளு என்று வெளுத்துக் கட்டுகிறான். பட்டியில் கொண்டு போய் அடைக்கிறான். அப்போதுதான் பசுவுக்குத் தன்னைக் கட்டிப் போட்டிருந்தது எவ்வளவு நல்லது என்று தெரிகிறது.

இப்படியேதான் கர்மக் கட்டைப் பற்றி நமக்குக் கோபம் வருகிறது. ஈச்வரன் இப்படி ஒரு கட்டைப் போடாவிட்டால், நமக்குத் தோல்வி, துக்கம் இதெல்லாம் ஏற்படாது. தோல்வியும் துக்கமும் வருவதால்தான் நாம் இப்போது 'நமக்கு இவ்வளவுதான் பொசிப்பு' என்கிற புத்தியைப் பெற்று, இருக்கிற மட்டும் திருப்தியுடன், நிம்மதியுடன் வாழக் கொஞ்சமாவது முயலுகிறோம். இவை இல்லாவிட்டால் நம்முடைய ஆசைக்கும், நாம் போடுகிற 'ப்ளானு'க்கும் முடிவே இராது. இத்தனை பலமான கட்டு இருக்கும்போதே, நம்மில் ஒவ்வொரு தனிமனுஷனின் ஆசைக்கும் இந்த சிருஷ்டி முழுவதையும் ஆஹுதி பண்ணினாலும் போதாமலிருக்கிறது. நம் ஆசை அவ்வளவையும் காரியத்தில் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யாதபடி கர்மம் நம்மைக் கட்டிப் போட்டிருக்கிறதோ, நாம் பிழைத்தோமோ!

பசுவைக் கட்டிப் போடாவிட்டால் அது பயிரையும் பாழாக்குகிறது; தானும் அடிபடுகிறது. அதுபோல் கர்மாவால் ஈச்வரன் நம்மைக் கட்டிப் போடாவிட்டால் நம்மையும் கெடுத்துக் கொண்டு லோகத்தையும் கெடுத்து விடுவோம் — இப்போதே கெடுக்கிறோம். துர்பலத்திலேயே இவ்வளவு கெடுத்தால், ஸ்வேச்சை சக்தி இருக்கும்போது எவ்வளவு கெடுப்போம்? கயிறு போட்டுக் கட்டுவதால்தான் ஏதோ ஒரு சமயத்திலாவது பசுவுக்குக் கட்டுத்தறியிடம் வந்து படுக்க முடிகிறது. கர்மம் கட்டுவதால்தான் நாமும் எப்போதாவது அதற்கு மூலமான ஈச்வரனிடம் சித்தத்தைப் படுக்க வைக்கிறோம். இல்லாவிட்டால் பகவானை அடியோடு மறந்து, இப்படியே சம்ஸாரத்தில்தான் உழன்று கொண்டிருப்போம்.

நம்முடைய க்ஷேமத்துக்காகவும், நாமே நமக்கு அதிக உபத்திரவத்தை உண்டாக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காகவும் பகவான் நம்மைக் கட்டிப் போட்டிருக்கிறார். 'எப்பொழுது அவிழ்த்து விடுவீர்?' என்று அவரைக் கேட்டால், 'ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யாமல், அதனால் உனக்கும் தீங்கு உண்டாக்கிக் கொள்ளாமல் இருக்கிற பக்குவம் வந்தால் அவிழ்த்துவிடுவேன்' என்கிறார்.

குழந்தை விஷமம் செய்தால் கட்டிப் போடுகிறோம். நம்மிடம் 'ஆசை' என்ற விஷமம் இருப்பதால் நம்மைப் பசுபதி கட்டிப் போட்டிருக்கிறார். குழந்தைக்கு விஷமப் புத்தி போய்விட்டால் அப்புறம் கட்டமாட்டோம். நமக்கு ஆசை போய்விட்டால் ஈச்வரனும் நம்மை அவிழ்த்துவிடுவார். ஆசையினால்தான் பலருக்குப் பலவித கஷ்டங்களை உண்டாக்கி, நாமும் கஷ்டப்படுகிறோம். அது போய்விட்டால் பிறருக்கு நம்மால் கஷ்டம் இல்லை; அப்போது கட்டும் இல்லை.

கட்டு போய்விட்டது என்பதால் அசலான் தோட்டத்தில் மேயமாட்டோம். ஏனென்றால், அசலான் தோட்டத்தில் மேயாத புத்தி நமக்கு வந்தபோதுதான் பசுபதி கட்டையே எடுக்கிறார். கட்டு போனபின் நாம் கட்டப்பட்ட நிலையிலிருந்து உயர்ந்து கட்டியவனின் நிலைக்கே போய்விடுவோம். கட்டு இருக்கிற வரையில் நாம் வேறு, ஸ்வாமி வேறு என்று பூஜிக்கிறோம். கட்டு போய்விட்டால் நாமே அவன் என்று தெரிந்துகொள்வோம். அப்புறம் பூஜையே வேண்டாம்.

ஒரு நிலை வரையில் ஜீவன் பசு என்று சுருதியும் சொல்கிறது. அது எந்த நிலை?

**தேவதாம் அன்யாம் உபாஸதே**

என்று சொல்லியிருக்கிறது. இதற்குப் பொதுவாக 'இஷ்ட தேவதையை விட்டுவிட்டு அதற்கு அன்னியமான தேவதையை உபாஸிக்கிறவன் பசு' என்று பொருள் சொல்வார்கள். அது தவறு. 'தான் பூஜிக்கிற தேவதை தனக்கு அன்னியமானது என்று நினைத்து எவன் பூஜை செய்கிறானோ அவன் பசு' என்பதே

சரியான அர்த்தம். இப்படிப் பேத புத்தி இருக்கிற வரையில் கர்மா உண்டு. கர்மா உள்ள வரையில் கட்டும் உண்டு.

பேத புத்தி போய்விட்டதாக நாம் பிரமை கொள்ளக் கூடாது, பாசாங்கு பண்ணக் கூடாது. உண்மையாகவே பேத புத்தியைப் போக்கிக் கொள்ள வேண்டும். அப்படிப் போக்காத வரையில் சாஸ்திரோக்தமான கர்மங்களைச் செய்யத்தான் வேண்டும்.

'ஸ்வாமிகள் என்ன இப்படிச் சொல்கிறார்? இத்தனை நாழி கர்மா இருந்தால் கட்டும் உண்டு என்று சொன்னார். இப்போது இவரே பூரண ஞானம் வருகிற வரை சாஸ்திரம் விதிக்கிற கர்மத்தைச் செய்யத்தான் வேண்டும் என்கிறாரே! அந்தக் கர்மம் மட்டும் கட்டிப் போடாதா?' என்று உங்களுக்குத் தோன்றும்.

இதற்குப் பதில்: ஆசை வாய்ப்பட்டுச் செய்கிற கர்மங்களின் கட்டை அவிழ்ப்பதற்குச் சாஸ்திரம் விதிக்கிற தர்ம காரியங்களின் கட்டு உதவி செய்கிறது. அதெப்படி ஒரு கட்டு இன்னொரு கட்டை அவிழ்க்க உதவும் என்று கேட்கலாம். ஒரு திருஷ்டாந்தம் சொல்கிறேன்: ஒருத்தன் விறகுகளைக் கட்டிக் கொண்டு வருகிறான். மணிமுடிச்சாகக் கட்டிவிட்டான். கயிற்றை அவிழ்க்க முடியவில்லை. அப்போது என்ன செய்வார்கள் தெரியுமா? அந்தப் பழைய கட்டுக்குப் பக்கத்திலேயே அதைவிட இறுக்கமாக மற்றொரு கயிற்றைச் சுற்றி நெருக்குவார்கள். இந்த இரண்டாவது கயிற்றை முடிச்சுப் போட மாட்டார்கள். அப்படியே கெட்டியாக விறகுகளைச் சுற்றிப் பிடித்துக் கொள்வார்கள். இந்த நெரிசலில் பழைய மணி முடிச்சுக் கட்டு கொஞ்சம் கொஞ்சமாகத் 'தொள தொள' என்று நெகிழ்ந்து கொடுக்கும். அதை அப்படியே அலாக்காக விறகுச் சுமையிலிருந்து கழற்றிவிடுவார்கள். பிறகு, புதிதாக இறுக்கிப் பிடித்துக் கொண்ட கயிற்றையும் விட்டு விடுவார்கள். ஆக, புதிய கட்டு பழைய கட்டை அவிழ்க்க உதவிவிட்டது!

சாஸ்திரம் சொல்கிற தர்ம காரியங்களின் கட்டு, இரண்டாவது கயிறு போன்றது. அது முடிச்சுப் போட்டுக் கட்டுவது அல்ல. கட்டுகிற மாதிரி இருக்கும். சாஸ்திர விதிகள் ரொம்பவும் கறாராக, கண்டிப்பாகக் கட்டுப்படுத்துகிற மாதிரிதான் இருக்கும். ஆனால் இந்திரியங்கள் போடுகிற ஆசைக் கட்டை எடுத்து, கடைசியில் பூர்ண நிம்மதி, சௌக்கியம், விடுதலை பெற வேண்டுமானால் இந்தக் கட்டு இருந்தேயாக வேண்டும்.

ஆசைக் கட்டு போனபின் சாஸ்திர கட்டும் போய்விடும். ஆனால் முதலில் அது போவதற்காக இந்த இரண்டாவது கட்டை நாமாகப் போட்டுக் கொள்ள வேண்டும். தார்மிகமான மநுஷ்ய காரியம், தேவ காரியம், பூஜை, யக்ஞம், பரோபகாரம், ஜீவாத்ம கைங்கரியம் எல்லாம் பண்ண வேண்டும். ஆசை போனபின் இந்தத் தெய்வ காரியங்கள் வைதிக காரியங்கள் எல்லாம்கூட நின்று விடும். அப்போது தேவதைகளுக்கெல்லாம் அப்படிப்பட்ட சாதகனிடம் கோபம் வருமாம். (தேவதைகள் வேறு, தெய்வம் வேறு—இதைப் பிறகு விளக்குகிறேன்.) * மனிதன் வைதிக காரியம் செய்தால்தான் தேவதைகளுக்கு ஆஹுதி கிடைக்கும். இல்லாவிட்டால் அவர்கள் பட்டினிதான். எனவே, இவன் கர்மாவை விட்டால் அவர்களுக்குக் கோபம் வரும். மாடு கறவை நின்றுவிட்டால் அப்புறம் அது பிரயோஜனம் இல்லை அல்லவா? மனிதனின் கர்மம் நின்றுவிட்டால் அப்புறம் தேவதைகளுக்கு அவனால் பிரயோஜனம் இல்லை. இது காரணமாகத்தான் புராணங்களில், பல ரிஷிகள் பிரம்ம ஞானத்தை அடையத் தபஸ் செய்தபோது தேவதைகள் பிரதிபந்தகம் (இடையூறு) விளைவித்ததாகப் பார்க்கிறோம். இதனால்தான் ஸம்ஸ்கிருதத்தில், அசட்டுக்கும் அஞ்ஞானிக்கும் 'தேவானாம்பிரியன்' என்றே ஒரு பெயர் ஏற்பட்டிருக்கிறது. 'தேவானாம்பிரியன்' என்றால் தேவதைகளுக்கு இஷ்டமானவன் என்று அர்த்தம். அது ஏதோ புகழ்ச் சொல் என்று தோன்றும். ஆனால் உண்மையில், எவன் தேவதைகளைத் திருப்தி செய்கிற நிலைக்கு மேற்பட்ட ஞானத்தை ஒரு நாளும் தேடிப் போகாமல், கர்மத்திலேயே உழலுகிற அசடோ, அவனே 'தேவானாம்பிரியன்'.

பழைய காலத்தில் ஞானம் வந்தவர்களும் கூட சாஸ்திர கர்மாவை விடத் தயங்கினார்கள். நாமோ, சிறிதுகூடத் தயக்கமில்லாமல், ஹாய்யாக சகல சாஸ்திர தர்மங்களையும் கர்மங்களையும் விட்டுவிட்டோம். ஆனால் ஞானியாகத்தான் ஆகவில்லை.

ஞானியில்லை என்றால் தேவானாம்பிரியர்களாகவாவது இருக்கிறோமா, அதுவும் இல்லை. தேவதைகளுக்குத் திருப்தி தருகிற வைதிக கர்மங்களை விட்டுவிட்டபின் அவர்களுக்கு எப்படிப் பிரியமானவர்கள் ஆவோம்? நாம் 'நரகவாஸினாம்பிரிய'ர்களாகவே இருக்கிறோம். நரகத்திலிருப்பவர்கள், நமக்குத் துணையாக இவர்களும் வரப் போகிறார்கள் என்று நம்மைப் பற்றிப் பிரியமாக எண்ணுகிற ஸ்திதியில்தான் இருக்கிறோம்.

துஷ்டர்களாக இருப்பதைவிட அசடுகளாக ஆவது சிலாக்கியம். முதலில் தேவானாம்பிரியர்களாக ஆகவேண்டும். அப்புறம் பசுபதி கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டை அவிழ்த்து விடுவார். அப்புறம் தேவதைகளின் பிரியத்தையும், அப்பிரியத்தையும் பொருட்படுத்தாத ஞானிகளாக ஆகலாம். அப்போது பசு (ஜீவன்) - பாசம் (கயிறு) - பதி (ஈசுவரன்) என்கிற மூன்றில் பசுவும் பாசமும் போய், பதி மட்டுமே இருக்கும்.

சைவ சித்தாந்தத்தில் பசு—பதி — பாசம் என்பதுதான் ஆதிசங்கர பகவத்பாதர்களின் அத்வைத வேதாந்தத்தில் ஜீவன் — பிரம்மம்— மாயை என்று சொல்லப்படுகிறது. ஆதி ஆசாரியாளும் பசு — பாசம் என்கிற பதங்களையே **ஸௌந்தர்ய லஹரி** ஸ்லோகம் ஒன்றில் பிரயோகித்திருக்கிறார்.

**சிரம் ஜீவந்நேவ க்ஷபித பசு பாச வ்யதிகர:**
**பராநந்தாபிக்யம் ரஸயதி ரஸம் த்வத் பஜனவான்**

அம்பிகே, உன்னை எவன் பஜிக்கிறானோ அவன் பசு, பாசம் என்கிறவற்றின் சேர்க்கையால் உண்டாகிற விபரீதத்தைப் போக்கிக்கொண்டு, சதா காலமும் பரமானந்தம் என்ற ரஸத்தையே ருசித்துக் கொண்டிருக்கிறான்.

---

* அடுத்த 'கல்கி' இதழில் இந்த விளக்கம் வெளியாகும்.


நீங்கள்...
தன்னம்பிக்கையுடன்,
உங்களுக்கே உரிய தனிப்
புதுமைத் தோற்றத்துடன் திகழ
ஹகோபா
எம்பிராய்டர்ட் துணிவகைகள்



# அம்மா

ரா. கணபதி

## 2. "அதோ என் அகத்துக்காரர்!"

மன்னுயிர் புவனம் ஏனை மற்றுள பொருளுக்
கெல்லாம்
அன்னையாய் உதவிநாளும் அவற்றினை வளர்த்து
நிற்பாள்
தன்னையும் வளர்ப்பார் உண்டோ? வளர்ந்தது
சழக்கே! அந்தக்
கன்னிதன் அருளின் நீர்மை காட்டினள் போலும்
அன்றே

(கந்தபுராணம் - பார்வதிப் படலம்)

சியாமசுந்தரிக்கு சீமந்த புத்திரி பிறந்த தினத்தில் பல விசேஷங்கள் உண்டு. அது மாதங்களில் சிறந்தது என மாதவனே சொன்ன மார்கழி மாதம். அதைத் தேவர்களின் வைகறைப் பொழுது எனச் சொல்வார்கள். சூரியன் வடக்கு நோக்கிப் பயணம் தொடங்கும் நாளை தேவர்கள் துயில் கலைந்து எழுகிற தினம் என்பார்கள். மகரசங்க்ரமணம் — சங்க்ராந்தி — அல்லது பொங்கல் பண்டிகை என்பது அன்று தான். இப்போது நம் பஞ்சாங்கக் கணக்குப்படி ஜனவரி மத்தியில் சங்கிரமணம் வந்தாலும், உண்மையில் வான நூல் கணக்குப்படி டிசம்பர் 22ந் தேதியே சூரியன் தனது வடக்கு நோக்கிய பயணத்தைத் தொடங்கி விடுகிறான். நவீன மனப்பான்மை கொண்ட ஸ்வாமி விவேகாநந்தர் பழைய பஞ்சாங்கப்படி சங்க்ராந்தியன்று பிறந்தார். பழைமையே வடிவெடுத்த அம்மா, நவீனக் கணக்குப்படி மகராயணமாகிய டிசம்பர் 22ந் தேதியன்று உதித்தாள். தேவர்கள் துயில் கலைந்து, அருள் செய்வதற்காக விழிப்புப் பெறும் நாளில் பொருத்தமுடன் பிறப்புக் கொண்டாள்.

பூமத்ய ரேகைக்கு வடக்கே உள்ள தேசங்களில் வெகு நீண்ட இரவுப் பொழுது முடிகிற தினம் அதுவே. எத்துணைப் பொருத்தம்!

தேவர்களின் உதயகாலமாயினும் நம் உலகில் அவள் பிறந்தது இரவு விரிகிற சமயத்திலேதான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிராம்ம முகூர்த்தம் எனப்படும் வைகறையில் அவதரித்தார். வெளி உலகுக்குப் பிரகாசமான உண்மைகளைக் காட்ட வந்தவர் பலபலவென விடியத் தொடங்கும் வேளையில் பிறந்தார். உள்ளுக்குள்ளேயே அமிழ்ந்து அடங்கும் உண்மைகளைக் காட்டுவதற்காக வாழ்ந்த அம்மா, இயற்கையன்னை வெளிச்சங்களை உள்ளே வாங்கிக் கொண்டு இருள் படுதாவை விரித்துக் கொள்ளும்போது ஜனனம் கொண்டாள். இரவோடு இரவாகக் கலந்து சியாமசுந்தரியின் மணி வயிற்றில் பிரவேசித்தவள், அதே அந்தி மயக்கத்தில் உலகில் வெளி வந்தாள்.

நம் சீமையில் சுக்ரவார சாயரட்சையை எவ்வளவு மங்களமாகக் கொள்கிறோமோ, அதுபோல் குருவார மாலை வேளையை வங்காளத்தில் போற்றுவர். சக்தி வழிபாட்டில் ஈடுபட்ட

தாந்திரிகர்களும், பொதுமக்களும் புனித மார்கழியில், வியாழன் அந்தி முடிவில் சிம்மவாஹினி ஆலயத்துக்குக் கூட்டமாகச் சென்று பிரார்த்தனை செலுத்தி விட்டு திரும்புகையில், சியாமசுந்தரி பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

"அம்மாவையே உரிச்சு வைச்சிருக்கு" என்று சொல்லி ஊர்ப் பெண்கள் ஆனந்தப்பட்டனர்.

அம்மா, அம்மாவைப் போலன்றி எப்படி இருப்பாள் ?

குழந்தைக்கு நாமகரணம் செய்ய வேண்டிய நாள் வந்தது. ஜோதிடர் ஜாதக ரீதியில் பெயரைக் கணித்தார். "டாகூர்மணி" என்று பெயரிடச் சொன்னார்.

டாகூர் என்றால் இறைவன் என்று பொருள். இறைவனின் மனத்தில் மன்னுகிற, மின்னுகிற ரத்தினமான தேவியே 'டாகூர் மணி'. ஸ்ரீ பரமஹம்ஸ ராமகிருஷ்ணரை இன்றும் வடநாட்டில் அத்யந்த பக்தர்கள் 'டாகூர்', 'டாகூர்' என்றே சொல்கிறார்கள். நம் கதையின் நாயகி பிறந்த பொழுது பொருத்தமாக அமைந்தது போலவே, பெயரும் பொருத்தமாக அமைந்து விட்டது.

அந்தக் குடும்பத்தில் இரண்டு பெயர்கள் வைக்கிற வழக்கம் உண்டு. அதன்படி, 'க்ஷேமங்கரி' என்று இன்னொரு பெயர் வைத்தார்கள். க்ஷேமத்தையே செய்பவள் என்று அர்த்தம். க்ஷாமம் மூடிய நாட்டில் அம்மாவைப் போல க்ஷேமம் செய்தவர் யாருண்டு?

மூன்றாவதாக இன்னொரு பெயரும் முளைத்தது. அதுவே நிலைத்து நின்றது. குழந்தையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் சியாமசுந்தரியின் சித்தி. பேறு பார்ப்பதற்காகவோ அல்லது குழந்தை பிறந்த சுபச் செய்தி விசாரிப்பதற்காகவோ வந்தவர்களில் அந்தக் கிழவியும் ஒருத்தி.

அவள் கண்களில் கண்ணீர் பெருகி வந்தது. சியாமசுந்தரியைப் பார்த்துக் கரகரத்த குரலில், "அந்தக் 'கடன்



காரி' மாதிரியே இருக்கு. அவ பெயரையே வைத்துக் கூப்பிடறாயா?'' என்று கேட்டாள்.

சமீபத்தில்தான் சித்தி அருமைப் பெண் சாரதாமணியை இழந்திருந்தாள். புத்திரசோகத்துடன் சித்தி கேட்டுக் கொண்டதை சியாமசுந்தரியால் மறுக்க முடியவில்லை.

மறைந்துபோன தனது ஒன்றுவிட்ட சகோதரியான சாரதாமணியின் பெயரையும் குழந்தைக்குச் சூட்டினாள் சியாமசுந்தரி.

ஆகா, 'சாரதா' என்ற நாமத்துக்கு உள்ள பெருமையைத்தான் என்னென்பது ?

'சாரதா' என்ற நாமத்தில் ஆதி சங்கராசாரியர்களுக்கு ஒரு தனி ஈடுபாடு. சிருங்ககிரியில் சாரதா பீடத்தை ஸ்தாபித்தார். காமகோடி பீடத்தை அதிஷ்டித்து அவர் காஞ்சியில் ஸ்தாபித்த மடத்துக்கு சாரதா மடம் என்றே பெயரிட்டார்.

உருவமும் பெயருமற்ற பிரம்மமே ஜீவன் என அறிவதற்கு உபாயமாக ஞான மார்க்கத்தை வகுத்த ஆதி சங்கரர், அந்தப் பிரம்மம் பல உருவில், பல பெயரில் எடுத்துக் கொண்ட தெய்வ வடிவங்கள் அனைத்தையும் கிரமப்படி வழிபடும் முறைகளைத் தொகுத்து, 'பிரபஞ்சஸாரம்' என்ற உத்தம நூலை அருளியிருக்கிறார். அந்த நூலில் முதல் சுலோகமாக கலைவாணித் துதியை அளிக்கிறார். அங்கு கலைவாணியை 'சாரதா' என்றே பெயரிட்டு அழைக்கிறார்.

"சாரதா தேவி நமது சித்தத்தின் அழுக்கை எல்லாம் நீக்கி அதைப் பரிசுத்தமாக்குவாளாக!'' என்கிறார்.

விதநுது பரிசுத்திம் சேதஸ சாரதா வ :

என்ற ஆசாரிய வாக்கைத் தூய அன்னையின் அடியார்கள் மந்திரம் போலவே ஜபிக்கலாம் !

ஸ்தூல உலகம், கர்ம பலன் இவற்றை நீக்கும் பிரம்ம வித்யாரூபிணிதான் 'சாரதா' என்று இதற்கு விரிவுரை கூறுகிறார் பகவத்பாதரின் சீடரான ஸ்ரீ பத்மபாதாசாரியர்கள்.

குளிர்ந்த சரத்காலத்தில் ஆராதனை பெற்று, குளிர அருள் வழங்கும் அம்பாளை 'சாரதை' என்பார்கள்.

வங்கத்தில் 'ஸாரதா' என்றே சொல்கிறார்கள். ஸாரமான ஆத்ம ஞானத்தின் நாயகியான சரஸ்வதி தேவியே ஸாரதா என்று விளக்குகிறார்கள்.

* * *

தலைச்சன் குழந்தையானபடியால் ராமசந்திர முகர்ஜியும், சியாமசுந்தரியும் சாரதையை வெகு செல்லமாக வளர்த்தனர். குழந்தையைப் பற்றி அவர்களுக்கு முன்கூட்டியே தெய்விகமான சூசகங்கள் இருந்தனவே, அப்படிப்பட்ட தெய்வக் குழந்தையை அவர்களால் சகஜமாக வளர்க்க முடிந்ததா என்ற கேள்வி எழலாம்.

சகஜமாகவே வளர்த்தார்கள். இது பராசக்தியின் பெரிய மாயைகளில் ஒன்று. ஸ்காந்த புராணத்தில் பார்வதியின் குழந்தைப் பருவ வருணனையில் இது அழகாகக் கூறப்படுகிறது.

பார்வதி ஆவிர்பவித்தபோது அவள் சாட்சாத் பரப்பிரம்ம சக்தியே என்று ஹிமவானுக்கும், அவனது மனைவியான மேனைக்கும் தெரியும். ஆனாலும் அவர்கள் அவளை வாத்ஸல்யத்துடன், வாஞ்சையுடன் 'இவள் தங்களுடைய பெண்' என்ற நெருக்கமான எண்ணத்துடனேயே வளர்த்தனராம்.

'தன்னைக் குறித்து அவர்களுக்கு உண்டான மெய்யான அறிவை அம்பாளே போக்கிவிட்டாள். இந்த மாயையால் ஞானமிழந்த பெற்றோர் அவளைத் தங்கள் குழந்தைதானுக்கும் என்றே எண்ணி வாத்ஸல்யத்துடன் வளர்த்தனர்' என்கிறார் ரிஷி.

மாயையைப் போக்கி ஞானத்தைத் தரவே உலகுக்கு வந்தவள், தன்னைப் பற்றிய ஞானத்தைப் பெற்றோரிடமிருந்து போக்கி, அவர்களுக்கு ஒரு மாயத்தை உண்டாக்குவதைத்தான் முதல் லீலையாகச் செய்தாள்!

மண்ணுண்ட வாயில் ஈரேழு புவனத்தையும் யசோதைக்குக் காட்டிய கோவிந்தனும், உடனுக்குடனே அந்தத் தெய்விகத்தை அவளது சித்தத்திலிருந்து மறைத்து, அவளிடம் கெஞ்சலையும், கொஞ்சலையும், ஏன், திட்டும் அடியும் கூடப் பெற்றதைப் பாகவதம் கூறுகிறது.

தெய்வம் அவதாரம் எடுக்கும்போது மனிதரோடு மனிதராக வாழவே விரும்புகிறது. தன்னைக் கண்டு பயந்து

பக்தி செய்தால் அதற்குத் திருப்தி உண்டாவதில்லை. தன்னை அன்பு உள்ளங்கள் அணுகிக் கொஞ்சிச் செல்லம் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறது. அவர்களது பயபக்தியை மாயையால் மறைத்து வாஞ்சையாக மாற்றுகிறது.

தெய்வத்துக்கும் இப்படி ஓர் ஆசை உண்டு என்பது சரிதானா? அல்லது நெருங்கி அன்பு செய்வதன் இன்பத்தை எளிய அடியார்கள் அநுபவிக்க வேண்டும் என்றே தன் தெய்விகத்தை மூடி மறைத்துக் கொள்ளுமோ என்னவோ? அந்த அடியார்களை அது அடியோடு ஏமாற்றி விடுவதில்லை. அவ்வப்போது தன் தெய்விகத்தைக் காட்டிவிடுகிறது; உடனுக்குடன் மூடி மறைக்கிறது.

க்ஷேமங்கரி என்று குழந்தைக்குப் பெயரிட்டது அப்போதைக்கப்போதே அந்தக் கிராமத்தின் விஷயத்தில் மெய்யாயிற்று. அந்த வருடப் பொங்கலின்போது எதிர்பாராத அறுவடை கிடைத்திருந்தது. அதன் பின்பே ஜயராம்பாடியின் செழிப்பு ஓங்கலாயிற்று. பச்சை நிறைந்த கிராமத்தில் பச்சைக் கிளியாக வளர்ந்தாள் குழந்தை. ஆம், அவள் மிழற்றும் மழலை கிளிக் குஞ்சின் குரலாகவே இருந்தது.

ராமகிருஷ்ணர், விவேகாநந்தர், சாரதை மூவருக்குமே சாரீர மாதுரியம் பொது அம்சமாக இருந்தது.

ஓம் கர்ண பீயூஷ ஸல்லாபாயை நம:

என்பது அம்மாவின் அஷ்டோத்தரத்தில் ஒரு நாமம். 'காதுக்கு அமுதான இனிய குரல் படைத்தவள்' என்று பொருள்.

ஆனால் கிளிக் குஞ்சின் பரபரப்பும் துருதுருப்பும் இவளிடம் இம்மியும் இல்லை. குழந்தைப் பருவத்துக்கு ஒவ்வாத விசித்திரமான அமைதியும் நிம்மதியும் அவளிடம் குடிகொண்டிருந்தன.

வீட்டிலோ அமைதியும் நிம்மதியும் குலைகிற அளவுக்கு வறுமை வலுத்தது.

கிராமத்தில் செழிப்பாயினும், வீட்டில் தரித்திரம் தாண்டவமாடிற்று. நிறைந்த உள்ளமும், குறைந்த செல்வமும் கொண்ட குடியாக இருந்தது அது.

நெல் வருவாய் போதாமல், பருத்தியும் பயிரிட்டார் ராமசந்திரர். ஊராரின் மதிப்பைப் பெற்றிருந்த அந்த இல்லத் தலைவி சியாமசுந்தரியே பருத்தித் தோட்டத்துக்குச் சென்று காய்கள் பறிக்கும் நிலை ஏற்பட்டது.

குழந்தையைத் தூக்கிக் கொண்டு போவாள். நிழலில் மகளைப் படுக்க வைத்துவிட்டுக் காய் பறிக்கத் தொடங்குவாள்.

விழித்துக் கொண்ட சாரதா, அம்மா என்ன செய்கிறாள் என்று கவனமாகப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

மூன்று வயசாகும்போதே அம்மாவுக்கு உதவுவதற்காகத் தானும் கிளம்பி விட்டாள். சின்னஞ் சிறு சிவப்பு முன்னங் கால்கள் மேலும் சிவக்க, எம்பி எம்பிப் பருத்திக் காய்களை அவளும் சேகரிப்பாள்.

வீட்டுக்குப் போனதும் சியாமசுந்தரி பஞ்செடுத்துத் தக்ளியில் நூல் நூற்று, பூணூலாக்குவாள். பூணூலை நாலு வீட்டில் கொடுத்துத் தட்சிணை பெறுமளவுக்கு ஏழைமை மிகுந்திருந்தது.

குழந்தையும் தக்ளியை வைத்துக் கொண்டு நூற்பதற்கு முயலுவாள். இல்லாத சிரமமும் படுவாள். காலக்கிரமத்தில் பிஞ்சுப் பருவத்திலேயே பஞ்சு நூற்கத் தெரிந்து கொண்டுவிட்டாள்.


தெய்வ சாரதையின் கையில் நூல் (சுவடி) உண்டு; குழந்தை சாரதையின் கையிலும் நூல் இருந்தது. அது அறிவின் அடையாளம், இது உழைப்பின் அடையாளம். இந்த உழைப்பிலிருந்து பிறக்கிற பூணூல் பக்திக்கு அடையாளம்.

சாரதாமணியின் வாழ்க்கைத் தத்துவம் முழுதும் இதில் அடங்கிவிட்டது.

பயனெண்ணாமல் உழைக்கச் சொன்னார்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னார்

என்பதுதான் அந்தத் தத்துவம். அவள் வாழ்நாள் முழுவதும் அதைத்தான் செய்தாள். பாலப் பருவத்திலிருந்து தொடங்கி உழைப்போ உழைப்போ அப்படி ஓர் உழைப்பு உழைத்தாள். எஞ்சிய நேரம் முழுதும் பக்திதான்.

நவராத்திரி கொலுவில், பிரபஞ்ச வஸ்துக்கள் அனைத்துக்கும் பொம்மை செய்து வைத்து மகிழ்கிறோம். பராசக்தி



சென்னைக்கடுத்த மணலியில் பெட்ரோலியம் சுத்திகரிப்புத் தொழிலை அனுசரித்து வேகமாக நிறுவப்பட்டு வரும் பல ரசாயனத் தொழிற்சாலைகளில் முக்கியமான நாக்பால் - அம்பாடி பெட்ரோ - கெமிகல் தொழிற்சாலை சென்ற செப்டம்பர் 18ம் தேதி தமிழ்நாடு மாநில கவர்னர் திரு கே. கே. ஷா அவர்கள் தலைமையில், முதல் அமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களால் கோலாகலமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. சுமார் ஐந்து கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு, அமெரிக்காவில் இத் துறையில் மிகப் பிரபலமடைந்துள்ள விட்கோ கெமிகல் கார்ப்பரேஷனின் தொழில் நுட்பக் கூட்டுறவுடன் அமைக்கப்பட்ட இத் தொழிற்சாலை கண்ணைக் கவரும் விதத்தில் 55 ஏக்கர் நிலப்பரப்பில் கம்பீரமாக ஓங்கி நிற்கிறது.

இந்த நிறுவனத்தின் உயர் நிர்வாகஸ்தர்கள் பிரபல தொழிலதிபர்களான ஸர் ஏ. ராமஸ்வாமி முதலியார், திரு ஏ. எம். எம். அருணாசலம், திரு எஸ். ஆர். நாக்பால், திரு வி. டி. சௌகுல் போன்றவர்கள் கண்ணும் கருத்துமாகத் தொழிலை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுள்ளனர்.

---

தந்திருக்கிற பிரபஞ்சம் முழுவதையுமே பொம்மையாக ரசிக்கிறது குழந்தை.

> சந்திரன் என்றொரு பொம்மை - அதில்
> தண்ணமுதம் போல் ஒளி பரந்தொழுகும்

அல்லவா? அம்புலி 'பொம்மை' சாருவுக்கு மிகவும் பிடிக்கும். அது போலவே வெளுப்பாக ஆக ஆசைப்படுவாள். வெளுப்பு என்றால் வெறும் உடம்பின் வெளுப்பு அல்ல !

ஆமோதர் நதிக் கரைக்குச் சென்று அந்த நதிப் பொம்மை நளினமாக ஓடுவதை ரசிப்பாள்.

> கறவுகள் மீன்வகைகள் - எனத்
> தோழர்கள் பலவும் இங்(கு) எனக்களித்தாள்

என்று மீனினங்களோடு மகிழுவாள்.

> ஞால முற்றிலும் நிறைந்தே - மிக
> நயந்தரு பொம்மைகள் எனக்கெனவே

சிம்மவாஹினி தந்திருப்பதாகக் கருதி ஆனந்தமாக வளர்ந்தாள். அம்பாள் தரும் அழகிய பிரபஞ்ச பொம்மை போதாமல், தானே பொம்மை செய்தும் விளையாடினாள். 'அம்மா அப்பா' விளையாட்டு விளையாடுவாள். அவள்தான் எப்போதும் அம்மா. குழந்தைக்குள்ளேயே 'அம்மா ஆசை' குமுறிக் கொண்டிருந்தது போலும். சம வயதுக் குழந்தைகளிடையே ஓர் அம்மாவின் கௌரவத்துடன் அவள் தனித்து நின்றாள். அவள் விஷமம் செய்த நாளே கிடையாது. விஷமம் செய்கிற மற்றக் குழந்தைகளுக்கும் புத்தி சொல்வாள். விளையாட்டில் சண்டை வந்துவிட்டால் அவள் அப்போதே சமாதானம் செய்துவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பாள்.

அம்மா அப்பா விளையாட்டைவிட, பூஜை விளையாட்டுத்தான் அவளுக்கு மிகவும் பிடித்தது. களிமண்ணை 'அமுக்கு திமுக்கு' என்று பிசைந்து தானே பொம்மையாக்கி விடுவாள். ராமகிருஷ்ணருக்குக் குழந்தைப் பருவத்திலேயே அற்புதமாகப் பொம்மை செய்யும் ஆற்றலிருந்ததும் இங்கு நினைவு வருகிறது.

'இது லக்ஷ்மி', 'இது காளி' என்று தன் பொம்மைகளுக்குப் பெயர் வைத்துப் பூஜை ஆரம்பித்துவிடுவாள். ஏகமாகப் புஷ்பங்களையும், வில்வ பத்திரங்களையும் பறித்து வந்து தனது புஷ்பக் கரத்தால் தூவுவாள்.

'ஜகத்தாத்ரி' என்ற பெயரில் காளிக்கு நடைபெற்ற பூஜை ஒன்றின் போது குழந்தை அப்படியே கண்களை மூடிக் கொண்டு தன்மயமாக அமர்ந்து விட்டாள்.

ஹல்தேபுகுர் என்ற கிராமத்தைச் சேர்ந்த ராமஹ்ருதயர் என்ற பெரியவர் குழந்தை சாரதையை இந்த நிலையில் கண்டு அதிசயித்தார். வெகு நீண்ட நேரமாகியும் சாரதையின் சாரஸ தளம் போன்ற இமைகள் இறந்தபாடில்லை. மண்ணினால் செய்த பொம்மையின் முன்னால் பால்கோவாவினால் செய்த பொம்மையாக அவள் அமர்ந்து விட்டாள். திடீரென்று, 'எது காளி, எது ராமசந்திர முகர்ஜியின் பெண்?' என்ற ஐயப்பாடே ராமஹ்ருதயருக்கு உண்டாகிவிட்டது.

உடம்பில் ஓர் உதறல் எடுத்தது.

அச்சத்துடன் அங்கிருந்து நழுவி விட்டார்.

* * *

சியாமசுந்தரியின் பிறந்தகம் இருந்த 'ஷியாட்' எனப்படும் ஷிஹாருக்கு ஒரு முறை குழந்தை சாரதை சென்றிருந்தபோது, ஹ்ருதயராம் முகர்ஜியின் வீட்டில் நாமசங்கீர்த்தனம் நடந்தது. பெரியவர்களோடு குழந்தையும் அதற்குச் சென்றாள்.

சங்கீர்த்தனம் முடிந்தபின் அங்கு வந்திருந்தவர்கள் யாவரும் அந்த அழகுக் குழந்தையை, சமர்த்துக் குழந்தையை மாற்றி மாற்றி எடுத்துக் கொஞ்சினார்கள்.

கிழவி ஒருத்தி சாரதையை மடியில் அமர்த்திக் கொண்டு, ''என்ன அதிசயக் குழந்தையடி அம்மா இது! தடிமாடு மாதிரி வயசாகிற நமக்கே பஜனையில் கொஞ்ச நாழிக்கு மேலே பொருந்தி இருக்க முடியல்லே. இந்தப் பச்சைக் குழந்தை என்னமா சங்கீர்த்தனத்திலேயே மனசைக் கொடுத்துண்டு உட்கார்ந்திருந்தது?'' என்று சிலாகித்து விட்டு, சாரதையிடம் செல்லமாக, ''ஏண்டீ சிறுக்கி, பஜனை கேட்கிற பாட்டியா நீ! பஜனை பார்க்கத்தான் வந்தியா, இல்லே, உன் அகமுடையான் இங்கே வந்திருக்கானான்னு துப்புத் துலக்க வந்தியா? சொல்லுடீ, திருட்டுக் கள்ளி!'' என்றாள்.

கிராமாந்தரக் கிழவிகளுக்கே உரிய முறையில் கேலி செய்தாள்.

அங்கே ஒரே சிரிப்பு ஆரவாரம் எழுந்தது.

சாரதை பட்டு முகத்தை அந்தப் பாட்டியின் தோளிலே புதைத்துக் கொண்டது.

''என்னடீ, வெட்கம்! ஆத்துக்காரரைப் பார்த்துட்டியா? அடியே.... அடியே..... நான் சமர்த்துப் பாட்டியோன்னோ, எனக்கும் உன் அகத்துக்காரரைக் காட்டுவாயாம்! இங்கே வந்திருக்கிற இத்தனை பேருலே எந்த மகராஜன் எங்க சாரு கையைப் புடிக்கப் போறான்னு தெரிஞ்சுக்கிறேன்'' என்று கிழவி குழைந்தாள்.

சாரதை சட்டென்று கிழவியின் தோளிலிருந்து முகத்தை எடுத்துக் கொண்டாள். தன்னுடைய இரண்டு 'துக்குணியூண்டு'க் கைகளையும் தூக்கி, விரல்களைக் கோத்துக் கொண்டு, ஆள் காட்டி விரல்களை மட்டும் நீட்டி, ''அதோ, என் அகத்துக்காரர்!'' என்று காட்டினாள்.

அவள் காட்டிய திசையில் எல்லாப் பெண்களின் கவனமும் சென்றது.


கும்மாளி சடேரென்று ஓய்ந்தது.

'இத்தனை குட்டிகையான சாரு போயும் போயும் இந்தப் பைத்திய கதாயியையா புருஷனாகக் காட்டவேண்டும்?' என்ற எண்ணம் அவர்கள் மனத்தில் எழுந்தது.

சாருவோ வைத்த விழி வாங்காமல் அந்தப் 'பைத்திய' கதாயியையே பார்த்துக் கொண்டிருந்தது.

யார் அந்தப் பைத்திய கதாயி?

(தொடரும்)



பெண்கள் என்றாலே
குறிப்பிட்ட சில
நாட்களில் அசௌ
கரியமும் வேதனையும்
இருக்கக்கூடும்.
ஸாரிடான் அவற்றி
லிருந்து விடுதலை
அளித்து அவர்களைப்
புத்துணர்வோடும்
மகிழ்வோடும்
இருக்கச் செய்கிறது.
ஸாரிடான்

# இவர் பாராட்டுக்குரியவர்

'ஸ்டேட் பாங்கி'லே பணியாற்றும் திரு சுந்தரம் அவர்களிடம் ஐந்து நிமிடங்கள் பேசினாலே போதும், பல அரிய செய்திகளை அறிந்து கொள்ளலாம். ஏற்கனவே ஐந்தாறு பட்டங்கள் பெற்றுப் பல்வேறு துறைகளில் சிறப்புகள் பெற்றிருக்கும் இவரது ஆசை குறைந்தது இருபது தகுதிகளாவது(Qualifications) பெற வேண்டும் என்பது.

திரு சுந்தரம் அண்மையில் காலஞ்சென்ற தமிழ்ப் பேரறிஞர் பாலூர் கண்ணப்ப முதலியார் அவர்களின் மணிவிழாவினை ஆன்றோரும், சான்றோரும் வியக்கும் வகையில் நடத்தியவர். இந்த அரும் செயலினை அவர் தனியொருவராக மிகவும் குறுகிய காலத்தில் சாதித்தார். மணிவிழாவினையொட்டி அவர் வெளியிட்ட மலர், ''மணிவிழா மலர்'' என்பதற்கு இலக்கணமாக அமைந்திருக்கிறது என்று வணக்கத்துக்குரிய காஞ்சி ஞானப் பிரகாச மடத்து சுவாமிகளே நேரிடையாகப் பாராட்டியுள்ளார்கள்

சமூக சேவையில் பெரிதும் ஈடுபாடு கொண்டுள்ள திரு சுந்தரம் "Trainee Friends Association" என்ற ஒன்றை நிறுவி அமைதியான முறையில் ஆடம்பரமில்லாமல் பல பணிகள் புரிந்து வருகிறார். இவரைப்பற்றி நான் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள்: ''பிழைக்கத் தெரியாத நல்லவர்!'' பல ஏழை மாணவர்களுக்கு இலவசமாகச் சம்பளப் பணம் கட்டுவதோடு, இலவசமாகப் படிப்பும் சொல்லிக் கொடுக்கிறார். இவரிடம் உதவி பெறும் ஒவ்வோர் ஏழை மாணவனும் தன்னுடைய படிப்பு முடிந்து வேலையில் அமர்ந்தபின், தன்னைப் போன்ற ஏழை மாணவர்கள் பலருக்கு உதவி புரிய வேண்டும் என்பது நிபந்தனை! எத்தனை அருமையான யோசனை பாருங்கள்!

காந்தியடிகளின் கொள்கைகளைத் தம்மால் முடிந்த அளவு பரப்புவதைக் குறிக்கோளாகக் கொண்ட இவர் மேற்குறிப்பிட்ட அசோஸியேஷன் சார்பில், தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் காந்தியடிகள் பற்றிய புத்தகங்களைப் பரிசாக அளிக்கிறார். பல நல்ல பணிகளை இடையறாது புரிந்துவரும் நண்பரின் கவனத்திலிருந்து கோயில்கள் கூடத் தப்புவதில்லை. ''கோயில் திருப்பணி, கும்பாபிஷேகம்'' என்று ஏதாவது செய்தி வெளியாகுமேயானால் உடனே தம் நண்பர்களோடு சேர்ந்து, தம் சக்திக்குட்பட்ட சிறு தொகையை அதற்குக் காணிக்கையாக அனுப்புகிறார். புளூ கிராஸின் அங்கத்தினரான இவர் பல பிராணிகளையும் காப்பாற்றியிருக்கிறார்! சாலையோரத்தில் உள்ள சாக்கடைக்குள் விழுந்துவிட்ட எத்தனையோ எருமைகளும், நாய்களும் இவரால் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

சென்னைக்கு அருகில் உள்ள ஓர் அநாதை ஆசிரமத்தில் இருந்த குழந்தைகள் எல்லாம் குளிரால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோது, அக்குழந்தைகளுக்கு உதவுமாறு 'ஹிந்து' பேப்பரில் வேண்டுகோள் ஒன்று 'ஆசிரியருக்குக் கடிதம்' பகுதியில் பிரசுரமாகியிருந்தது. அடுத்த நாளே நண்பர் சுந்தரமும், அவருடைய நண்பர் சேஷாத்திரியும் தங்களுடன் அலுவல் புரியும் மற்ற நண்பர்களின் உதவியுடன் புதிய போர்வைகளும், துணிமணிகளும் சேகரித்துக் கொடுத்தார்கள்.

இயேசு கிறிஸ்து கடவுள் இல்லை என்று குரல் எழுப்பி பைபிளிலிருந்து மேற்கோள் காட்டி வாதித்துக் கொண்டிருந்த கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்த புரட்சிக் கூட்டம் ஒன்று என் நண்பரிடம் வகையாக மாட்டிக் கொண்டது. ''ஆண்டவனை நம்பாத நீங்கள் அந்த ஆண்டவன் என்ற வார்த்தையே பல இடங்களில் இடம் பெற்றிருக்கும் பைபிளிலிருந்து எப்படி மேற்கோள் காட்டலாம்?'' என்று வாதம் புரிந்தார். அன்றுதான் தெரிந்துகொண்டேன், அவர் பைபிளைக்கூட எவ்வளவு ஆழ்ந்து படித்திருக்கிறார் என்பதை.

தமிழ், ஆங்கிலம் இரண்டிலுமே அவர் தேர்ந்தவர். தமிழில் அவர் ஒரு நல்ல பேச்சாளர்; கவிஞர்; கட்டுரை ஆசிரியர். அவருடைய கவிதைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்திருக்கின்றன — 'சுந்தரச் சோழன்' என்ற புனைபெயரிலே. பேரறிஞர் அண்ணா அவர்களே இவரைச் சிறந்த பேச்சாளர் என்று பாராட்டியிருக்கிறார்.

நன்றாகப் பாடுவார், நடிப்புத் திறமையும் உண்டு. அவருடைய கருத்துக்களைப்போல்





அவரது கையெழுத்தும் — குண்டு குண்டாக அழகாக அமைந்திருக்கும். 'டிரான்ஸிஸ்டர் ரிப்பேரும்' அவருக்குத் தெரியும். கட்டடக் கலையில் ஈடுபட்டுள்ள நான் போட்ட பிளான்களைப் பார்த்து விட்டுப் பின்னர் சில மணி நேரங்களில் ஒரு சிறந்த பிளான் வரைந்து விட்டார்!

சுந்தரத்திடம் ராஜாஜி பாராட்டிச் சொன்னது: ''இவ்வளவு சிறப்புக்கள் பெற்ற நீ இப்படி எளிமையாக இருக்கிறாயே!''


அ. ஃபிடலிஸ்

# பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

## அத்தியாயம் அறுபத்தைந்து

## "ஐயோ பிசாசு!"



ஆழ்வார்க்கடியான் அதுவரை மறைந்திருந்த தன் ஆட்களைத் திரட்டிச் சேர்த்துக் கொண்டு தஞ்சைக் கோட்டையின் வடக்கு வாசலை நோக்கி நடந்தான். கருத்திருமனுடன் அவன் துவந்த யுத்தம் செய்தபோது தன் ஆட்களை அழையாததின் காரணத்தை வாசகர்கள் ஊகித்து உணர்ந்திருப்பார்கள். அவன் நிச்சயமாகத் தெரிந்து கொள்ள விரும்பிய மிக முக்கிய இரகசியமான விவரங்கள் மற்றவர்கள் காதில் விழுவதை அவன் விரும்பாததில் வியப்பில்லை அல்லவா?

பாதி தூரம் சென்றபிறகு, எதிரே ஒரு தனி ஆள் வெறிகொண்டவனைப் போல் ஓடி வருவதைக் கண்டான். அப்படி ஓடி வந்தவன் இருட்டில் ஆழ்வார்க்கடியான்மீது முட்டிக்கொண்டு, பின்னர் மறுபடியும் ஓடப் பார்த்தான். திருமலை நம்பி அவனை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு, "அடேடே! வைத்தியர் மகனா? எங்கே அப்பா இப்படித் தலைதெறிக்க ஓடுகிறாய்?" என்று கேட்டான்.

"ஓகோ! வீர வைஷ்ணவனா? பேயோ, பிசாசோ என்று பயந்து போனேன். நல்லது; நீ எத்தனை தூரத்திலிருந்து இக்கரையோடு வருகிறாய்? எதிரே இரண்டு குதிரைகள் மீது இரண்டு ஆட்கள் போனார்களா?" என்றான்.

"ஆமாம்; போனார்கள்! அவர்களைப் பற்றி உனக்கு என்ன?"

"எனக்கு என்னவா? நல்ல கேள்வி! அவர்கள் யார் என்று தெரிந்தால் நீ இப்படிப்பட்ட கேள்வி கேட்கமாட்டாய்! ஆமாம். அவர்களில் ஒருவனை யாவது உனக்கு அடையாளம் தெரியவில்லையா?"

"ஒருவன் மட்டும் எனக்குத் தெரிந்த ஆள் மாதிரிதான் தோன்றியது. ஆனால்..."

"யார், யார்? யார் மாதிரி தோன்றியது?"

"வந்தியத்தேவனைப் போலத் தோன்றியது. அப்படியிருக்க முடியாது என்று தீர்மானித்துக் கொண்டேன்."

"அட, பாவி! அப்படியா தீர்மானித்தாய்? அவன் சாட்சாத் வந்தியத்தேவன்தான்!"

"என்னப்பா, உளறுகிறாய்? வந்தியத்தேவன் பாதாளச் சிறையில் அல்லவோ இருந்தான்?"

"இருந்தான்; ஆனால், இப்போது இல்லை! வந்தியத்தேவனும் இன்னொரு பைத்தியக்காரனும் சிறையிலிருந்து தப்பி விட்டார்கள். என்னைக் கட்டிப் போட்டு விட்டு அவர்கள் ஓடி விட்டார்கள்!"

"அடேடே! நல்ல வேலை செய்தார்கள்! அவர்கள் உன்னைக் கட்டிப் போடும்போது உன் கைகள் என்னப்பா செய்துகொண்டிருந்தன? முதலில், பாதாளச் சிறைக்கு நீ எதற்காகப் போனாய்?"

"முதன் மந்திரியின் கட்டளையின் பேரில் போனேன். அதையெல்லாம் இப்போது சொல்லிக் கொண்டிருக்க நேரமில்லை. நீயும் முதன்மந்திரியிடம் சேவகம் செய்கிறவன்தானே? என்னுடன் வா! அவர்களைப் பிடித்துக் கொண்டு வரலாம்!...."

"எதற்காக அவர்களைப் பிடித்துக் கொண்டு வரவேண்டும்? ஓடிப்போனால் போகட்டுமே? உனக்கும் எனக்கும் அதனால் என்ன வந்தது?"

''முதன்மந்திரி நல்ல ஆளைப் பிடித்து வைத்திருக்கிறார்! உன்னைப்போல் எல்லாரும் இருந்தால் இந்தச் சோழ ராஜாங்கம் உருப்பட்டாற் போலத்தான்! வந்தியத்தேவன் இளவரசர் கரிகாலரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டவன் என்பது உனக்குத் தெரியாதா? அது மட்டுமல்ல; சற்று முன்னால் சேந்தன் அமுதன் குடிசைக்கு அருகில் இன்னொருவனையும் அவன் ஈட்டியால் குத்திவிட்டு ஓடி வந்து விட்டான்....''

''தெய்வமே! இது என்ன? அங்கே குத்தப்பட்டவன் யார்?''

''அது யார் என்று நான் பார்க்கவில்லை. வந்தியத்தேவனைத் தொடர்ந்து நான் ஓடி வந்தேன்...சரி, சரி! நீ என்னுடன் வராவிட்டால் போ! வழியை மறிக்காதே! உனக்குப் புண்ணியமாய்ப் போகட்டும்! என்னை விடு!''

''வைத்தியர் மகனே! இந்த உலகத்தில் நான் எத்தனையோ மூடர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் எல்லாரையும் நீ தூக்கி அடித்துவிட்டாய்! அவர்கள் குதிரையின் மேல் போகிறார்கள். சாவுக்குப் பயந்து தப்பி ஓடுகிறார்கள். நீ ஒருவன், கால் நடையாகத் தேடிப் போய் அவர்களைப் பிடித்து விடுவாயா? எனக்கு என்ன அதைப் பற்றி? போ! போ!''

''நீ சொல்வது உண்மைதான். அதனாலேயே உன்னையும் துணைக்கு வரும்படி கூப்பிட்டேன். நீ வர மறுக்கிறாய்?''

''நான் வந்துஎன்ன செய்கிறது? அவர்களைத் தடுத்து நிறுத்தப் பார்த்தேன். ஒருவன் கையிலிருந்த தடியினால் நன்றாய்ப் போட்டான். வாங்கிக் கொண்டு வந்தேன். இன்னும் அந்த வலி தீரவில்லை. எனக்கு அவ்வளவாகச் சண்டை



போட்டுப் பழக்கம் இல்லை. நீ ஒரு வேளை... ஆமாம்; உன் கையில் என்ன? இரத்தக் கறை மாதிரி அல்லவா இருக்கிறது?''

''சிறையிலே அவர்கள் என்னைத் தாக்கிக் காயப்படுத்திவிட்டார்கள். பொல்லாத ராட்சதர்கள் !''

''பின்னே, அந்த இராட்சதர்களைத் தொடர்ந்து கால்நடையாகத் தனியே போகிறாயே ? சிறையில் அடைக்கப்பட்டிருந்த போதே அவர்கள் உன்னை இந்தப் பாடுபடுத்தியிருக்கும்போது...''

''அப்படியானால், என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?''

''நான் உன்னை ஒன்றும் செய்யச் சொல்லவில்லை. என் பேரில் எதற்காகப் பழி போடுகிறாய்? நான் உன் நிலைமையில் இருந்தால், திரும்பிப் போய் யாரிடமாவது தக்க மனிதர்களிடம் சொல்லி ஐந்தாறு குதிரை வீரர்களையாவது துணைக்கு அழைத்துக் கொண்டு திரும்பவும் மனித வேட்டைக்குப் புறப்படுவேன். நானும் குதிரைமேல் ஏறிக் கையில் வேலும் வாளும் எடுத்துக் கொண்டுதான் கிளம்புவேன்.....''

**வை**த்தியர் மகன் சிறிது யோசனை செய்தான். சேந்தன் அமுதனுடைய குடிசைக்கருகில் யாரோ ஒருவனைக் குத்திப் போட்டுவிட்டு அவன் ஓடி வந்திருக்கிறான். ஒருவேளை இராஜ குலத்தைச் சேர்ந்த மதுராந்தகராயிருக்கக் கூடும் என்ற நினைவு அவனுக்குக் கதிகலக்கத்தை உண்டாக்கியது. ஆனால் இந்த வைஷ்ணவன் சொல்வது போல் தனியாகக் கால்நடையாகச் செல்வதிலும் பொருள் இல்லை. அப்படி நந்தவனக் குடிசையருகில் தன் குத்தீட்டியினால் விழுந்தது மதுராந்தகத் தேவராயிருக்கும் பட்சத்தில் அந்தக் குற்றத்தையும் வந்தியத்தேவன் பேரில் போடுவதுதான் நல்லது. ஓர் இளவரசரைக் கொன்றவன் இன்னொரு இளவரசரையும் கொல்லலாம் அல்லவா? தண்டனை இரண்டுக்கும் ஒன்றுதானே?.... இதை நினைத்தபோது, பினாகபாணி, 'இரண்டு இளவரசர்களையும் கொன்றவன் வந்தியத்தேவன்தான்!' என்றே நம்பத் தொடங்கி விட்டான்.

''வைஷ்ணவனே! நீ சொல்வது என்னவோ சரிதான். நான் உன்னோடு வருகிறேன். நீ எனக்கு உதவி செய்ய வேண்டும். யாராவது தக்க மனிதர்களிடம் சொல்லி என்னோடு குதிரை வீரர்களை அனுப்பச் சொல்ல வேண்டும். பெரிய மனிதர்களின் சுபாவம் எனக்கு என்னமோ பிடிபடுவதில்லை. அவர்களுடன் எப்படிப் பழகுவது என்றும் தெரியவில்லை. இதோ பார்! நான் சேநாதிபதி கொடும்பாளூர் வேளாரிடமும் முதன் மந்திரி அன்பில் அநிருத்தரிடமும் சொல்லிப் பார்த்தேன். ஓடிப் போனவர்களைத் திரும்பப் பிடிக்க வேண்டியதைப் பற்றித்தான். சில வீரர்களை என்னுடன் அனுப்பும்படி வேண்டினேன். இரண்டு பேரும் என்னை முட்டாள், மூடன் என்று திட்ட ஆரம்பித்து விட்டார்கள். அவர்களுடைய நோக்கம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை......''

''நோக்கம் வேறு என்ன? உன்னிடம் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. உன்னிடம் இக்காரியத்தை ஒப்புவிக்க அவர்கள் விரும்பவில்லை. சிறைக்குள்ளேயே ஏமாந்து சிறையிலிருந்தவர்கள் தப்பி ஓடும்படி விட்டு விட்டாய். அவர்களை எங்கே பிடிக்கப் போகிறாய் என்று நினைத்திருப்பார்கள்....''

''அவர்களுடைய நினைவைப் பொய்ப்படுத்த எண்ணித்தான் தனியாகவாவது போகலாம் என்று கிளம்பினேன். எப்படியும் கோடிக்கரையில் அவர்கள் நின்றுதானே ஆக வேண்டும்? அங்கே வந்தியத்தேவன் ஒளிந்திருக்கக் கூடிய இடங்களெல்லாம் எனக்குத் தெரியும். அங்கே எனக்கு உதவி செய்யக்கூடியவர்களும் இருக்கிறார்கள்...''

''அப்படியானால், போ! உன் சாமர்த்தியத்தைப் பார்!''

''இருந்தாலும், குதிரை மேலேறி இன்னும் சிலரையும் அழைத்துக் கொண்டு போனால் நல்லதுதான். நீ அதற்கு உதவி செய்வாயா ?''

**இ**தற்குள் அவர்கள் இருவரும் வடக்குக் கோட்டைப் பெரிய வாசலை நெருங்கி வந்து விட்டார்கள்.

இராஜபாட்டையில் வடக்கே சற்றுத் தூரத்தில் அம்பாரி வைத்த யானைகளும் காலாள் வீரர்கள் பலரும் கும்பல் கும்பலாக வந்து கொண்டிருந்தது தெரிந்தது.

கோட்டை வாசலிலும் ஒரு கும்பல் நின்றது. தீவர்த்திகளின் வெளிச்சத்தில் கொடும்பாளூர் வேளாரும் திருக்கோவலூர் மலையமானும் முதன் மந்திரி அநிருத்தரும் நிற்பது தெரிந்தது.

''உனக்கும் எனக்கும் எஜமானர் அதோ கோட்டை வாசலில் நிற்கிறார். அவரிடம் போகலாம் வருகிறாயா?''

வைத்தியர் மகன் தயங்கினான்.

''நான் ஒரு தடவை கேட்டாகி விட்டது. பயன்படவில்லை. ஒருவேளை நீ இரண்டு பேர் தப்பி ஓடியதைப் பார்த்திருக்கிறபடியால் உன் பேச்சை நம்பினாலும் நம்பலாம். ஆனால் என்னை

உடன் அனுப்பச் சம்மதிப்பாரா என்று சந்தேகிக்கிறேன்'' என்ருன்.

''நீ சொல்வது உண்மைதான். மேலும் கோட்டை வாசலில் ஏதோ முக்கியமான காரியத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிருர்கள். அவர்களிடம் இச்சமயம் போவதில் பயனில்லை. எது சொன்னுலும் அவர்கள் காதில் ஏருது. இந்தப் பக்கம் பழுவேட்டரையர்கள் வருவதாகக் காண்கிறது. அவர்களுடன் சம்புவரையரும் வருகிருர். இதோ பார்த்திபேந்திரனும் கந்தமாறனும் காணப்படுகிருர்கள். அவர்களிடம் சொல்லிப் பார்க்கலாம். வந்தியத் தேவனைப் பிடிப்பதில் அவர்களுக்குத்தான் அதிக சிரத்தை இருக்கும்!'' என்ருன் ஆழ்வார்க்கடியான்.

ஊர்வலம் விரைவில் அவர்களை அணுகியது. முன்னுல் கட்டியக்காரர்கள் பழுவேட்டரையரின் தொல்குலப் பெருமையையும், அம்மாதிரியே கடம்பூர் சம்புவரையர், மழபாடி மழவரையர், பார்த்திபேந்திரப் பல்லவன், நீல தங்கரையர், இரட்டைக் குடை இராஜாளியார் முதலியவர்களின் விருதுகளையும், வீரச் செயல்களையும் வரிசைக் கிரமமாகச் சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

இடை யிடையே முரசுகள் முழங்கின. சங்கங்கள் ஆர்த்தன.

ஊர்வலத்தின் முன்னிலையில் சின்னப் பழுவேட்டரையரும் பார்த்திபேந்திரனும் கந்தமாறனும் வெண் புரவிகளின் மீது அமர்ந்து கம்பீரமாக வந்தார்கள். அடுத்தாற்போல் வந்த மத்தகஜத்தின் அம்பாரியில் பெரிய பழுவேட்டரையரும் சம்புவரையரும் அமர்ந்திருந்தார்கள். அவர்களுக்குப் பின்னுல் மற்ற குறுநில மன்னர்கள் யானை மீதும் குதிரை மீதும் வந்தார்கள். முன்னும் பின்னுமாக ஏறக்குறைய நூறு வீரர்கள் கையில் வேலும் இடையில் வாளும் தரித்து நடந்து வந்தார்கள்.

இந்த ஊர்வலத்துக்கு முன்னுல் ஆழ்வார்க்கடியானும் வைத்தியர் மகன் பினகபாணியும் பாதை நடுவில் நின்றதைப் பார்த்ததும், சின்னப் பழுவேட்டரையர் தம் குதிரையைச் சிறிது நிறுத்தி, ''வைஷ்ணவனே! முதன் மந்திரியிடமிருந்து முக்கியமான செய்தி ஏதேனும் உண்டா?'' என்று கேட்டார்.

''தளபதி! முதன் மந்திரி என்னிடம் செய்தி ஒன்றும் அனுப்பவில்லை. சொல்ல

## இனிமையான இந்துஸ்தானி இசை

சென்னை மியூஸிக் அகாடமி அரங்கில் நாரத கான சபையின் ஆதரவில் சமீபத்தில் நடைபெற்ற பர்வீன் ஸுல்தானுவின் ஹிந்துஸ்தானி சங்கீதக் கச்சேரி முதல்தரமான நிகழ்ச்சி. அவரது குரலின் இயற்கையான இனிமை அப்பியாச பலத்தினுல், நன்ருக மெருகு ஏற்றப்பட்டு ராகத்துக்கும், பாடிய உருப்படிகளுக்கும் சுகபாவத்தை அநாயாசமாக அள்ளி வீசின. மேல் ஸ்தாயி சஞ்சாரங்கள் மிகத் துல்லியமாக ஸ்வரத்துடனும் பிரமிக்கத்தக்க வேகத்துடனும் ரஞ்சகமாக இருந்தன. ஹிந்துஸ்தானி பாட்டுக் கச்சேரிகளில் பாடப்படும் உருப்படிகள் வகைக்கு ஒன்றிரண்டு என்றுதான் 'சாம்பிள்' மாதிரி வழங்கப்பட்டன. என்றுலும் ஒவ்வொன்றும் நிறைவை அளிக்கும் வகையில் பாடப்பட்டது. மரு பேஹாக், கலாவதி, ராகேச்ரி, திலக்கமோத் போன்ற ஹிந்துஸ்தானி ராகங்கள் தென்னிந்திய மேடைகளில் அடிக்கடி கேட்கப்படுவதால் ஏறக்குறைய பழக்கப்பட்டுப் போனதாகவே கருதலாம். அதனுல் இவற்றை ரசிக்கும் ஆற்றலும் நம்மவர்களுக்குப் பெருகுவதாகச் சொல்ல வேண்டும். பர்வீன் ஸுல்தானு பாடிய கியால், டும்ரி உருப்படிகள் வியக்கத்தக்க வேகத்துடன், காலப்பிரமாணத்துடன், விறுவிறுப்பாக இருந்தன. கபீர்தாஸ் பஜனும், கஜலும் கச்சேரிக்குப் பூரணத்வம் கொடுக்க உதவின. சாஸ்திரிய சங்கீத உருப்படிகளைப் பாடும்போது ஏற்பட்ட இனிமை உணர்ச்சி, சில்லறை உருப்படிகளில் குறைந்தே இருந்தது. மைக் முதல் பாடுமிடம் சரிவரப் பொருத்தப்படாததால் ஏற்பட்ட சில குறைபாடுகளையும் குளிர்சாதனக் கருவிகள் இயங்காததால் உண்டான புழுக்கத்தையும் பாராட்டாமல் மூன்று மணி நேரம் முழுமையாக உட்கார்ந்து கச்சேரி கேட்டுக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை அத்தனை பெரிய மண்டபத்துக்குக் குறைவுதான் என்றுலும் அவர்களை நகரவொட்டாமல் ஈர்த்தது பர்வீன் ஸுல்தானுவின் கானத்தின் இனிமை. கச்சேரியின் உயர்தரத்துக்கு இதுதானே உரைகல்! அவருக்கு உதவியாக ஸுல்தான் கான் சாரங்கியும், நைஜாமுதீன் தபேலாவும் வாசித்துக் கச்சேரியைச் சிறப்பித்தனர்.



வேண்டிய செய்தியைக் கோட்டை வாசலில் தங்களிடம் சொல்லுவார். ஆனால் முக்கியமான செய்தி ஒன்றிருக்கிறது..'' என்று ஆழ்வார்க்கடியான் நிறுத்தினான்.

''என்ன? என்ன? என்ன?'' என்று மூன்றுபேரும் ஆவலுடன் கேட்டார்கள்.

''பாதாளச் சிறையிலிருந்து வந்தியத்தேவன் தப்பி ஓடி விட்டான்...''

''அது எப்படி முடியும்? அவன் என்ன இந்திரஜித்தா மாயமாய் மறைந்து போவதற்கு?'' என்று கேட்டார் சின்னப் பழுவேட்டரையர்.

''இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. வேறு யாராவது அவனுக்கு ஒத்தாசை செய்திருக்க வேண்டும்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''எல்லாம் அந்தக் கொடும்பாளூர்ப் பெரிய வேளாரின் வேலைதான்!'' என்றான் கந்தமாறன்.

''அப்படித் தப்பி ஓடினாலும் எங்கே ஓடி விடுவான்? கோட்டைக்குள்ளே தானே இருக்க வேண்டும்?'' என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

''அப்படித்தான் வேளார் சொல்லுகிறார். முதன் மந்திரி முன்ஜாக்கிரதையாக என்னைக் கோட்டையைச் சுற்றி வந்து பார்த்துக் கொள்ளும்படி பணித்தார். கடம்பூர் வம்சத்தின் மீது அபவாதம் ஏதும் ஏற்படக் கூடாது என்று முதன் மந்திரி கவலைப்படுகிறார்....''

''அப்படிக் கவலையுள்ளவர் ஒருவராவது இருக்கிறாரே, அந்த வரைக்கும் மிகவும் திருப்தியான காரியம்'' என்று சொன்னான் கந்தமாறன்.

''வைஷ்ணவனே! உண்மையைச் சொல்! தப்பி ஓடுவதைத் தடுப்பதற்காக நீ சுற்றி வருகிறாயா? அல்லது உதவி செய்வதற்காகச் சுற்றி வருகிறாயா?'' என்று பார்த்திபேந்திரன் கேட்டான். அவனுக்கு வைஷ்ணவன் பேரில் எப்போதுமே சந்தேகம்தான்.

''ஐயா! வேறு சந்தர்ப்பமாயிருந்தால் நான் வேறு விதமாகப் பதில் சொல்வேன். இப்போது நாம் சொந்தத்தில் சண்டை போடும் சமயம் அல்ல. இந்த வைத்தியர் மகன் பினாகபாணி, ஒரு விசித்திரமான செய்தியைக் கூறுகிறான். இரண்டுபேர் குதிரைகள் மீது ஏறிப் போனதாகவும் அவர்கள்தான் சிறையிலிருந்து தப்பி ஓடிய வந்தியத்தேவனும் கருத்திருமனும் என்றும் கூறுகிறான். இரண்டு பேர் குதிரைமேல் ஏறி இந்தச் சாலை வழியாக விரைவாகப் போனதை நானும் பார்த்தேன்.''

''பினாகபாணி! இந்த வைஷ்ணவன் சொல்லுவது உண்மையா?'' என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

''சத்தியம் ஐயா!''

''பின்னே உடனே போய் முதன் மந்திரியிடமாவது வேளாரிடமாவது சொல்லுவதற்கென்ன?''

''அவர்கள் இருவருக்கும் என்பேரில் அசாத்தியக் கோபம்.''

''எதற்காக?''

''அவர்களை நான்தான் தப்ப விட்டு விட்டேன் என்று.''

''அது எப்படி?''

''பாண்டிய குலக் கிரீடமும் இரத்தின ஹாரமும் இருக்குமிடம் தெரியுமென்று ஒரு பைத்தியக்காரன் பாதாளச் சிறையில் சொல்லிக் கொண்டிருந்தான் அல்லவா? அவனை அழைத்து வருவதற்காக அநிருத்தர் என்னை அனுப்பினார். அதற்காகப் போன இடத்தில் இரண்டு பேருமாகச் சேர்ந்து என்னைப் பாதாளச் சிறையிலே கட்டிப் போட்டு விட்டுத் தப்பி ஓடி விட்டார்கள்!''

''போயும் போயும் முதன் மந்திரிக்கு உன்னைப் போன்ற முட்டாள்தானா இந்தக் காரியத்துக்கு அகப்பட்டான்?'' என்று கூறிவிட்டுப் பார்த்திபேந்திரப் பல்லவன் சிரித்தான்.

**வை**த்தியர் மகன் கோபமாக, ''ஐயா! நீங்கள் சிரிப்பதற்காக நான் இங்கு வரவில்லை. உதவி செய்வதாயிருந்தால் செய்யுங்கள்!'' என்றான்.

''என்ன உதவி கேட்கிறாய்?''

''என்னுடன் நாலு குதிரை வீரர்களை அனுப்புங்கள். எனக்கும் ஒரு குதிரை கொடுங்கள். தப்பி ஓடியவர்களைப் பிடித்துக் கொண்டு வருவது என் பொறுப்பு. ஏற்கனவே எனக்கு இட்ட காரியங்களை நான் நிறைவேற்றவில்லையா? தளபதி சின்னப் பழுவேட்டரையருக்குத் தெரியுமே?'' என்றான் வைத்தியர் மகன் பினாகபாணி.

''நீ என்ன சொல்லுகிறாய்?'' என்று சின்னப் பழுவேட்டரையர் பார்த்திபேந்திரனைக் கேட்டார்.

''அனுப்ப வேண்டியதுதான். சக்கரவர்த்தி உங்களைத் திரும்ப அழைத்து வரும் பொறுப்பை என்னிடம் ஒப்புவித்திருக்கிறார். இல்லாவிட்டால் நானே இவனுடன் போவேன். வந்தியத்தேவனைப் பிடிக்க வேண்டியது மிக முக்கியமான காரியம்'' என்றான் பார்த்திபேந்திரன்.

அச்சமயம் கந்தமாறன், ''அந்தப் பொறுப்பை என்னிடம் ஒப்புவியுங்கள். இவனுடன் நானும் போகிறேன். வந்தியத்தேவன் யம லோகத்தின் வாசலுக்குப் போயிருந்தாலும் அவனைத் திரும்பப் பிடித்துக் கொண்டு வருகிறேன்'' என்றான்.

சின்னப் பழுவேட்டரையரும் அதற்குச் சம்மதித்தார். சம்புவரையர் முதலியவர்களுக்குச் சமாதானம் சொல்லும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.

உடனே கந்தமாறனும் வைத்தியர் மகனும் மற்றும் வீரர்கள் நால்வரும் வட ஆற்றின் வட கரையோடு விரைந்து செல்லக் கூடிய குதிரைகள் மீதேறி வாயு வேக மனோவேகமாகச் சென்றார்கள்.

* * *

மதுராந்தகன் குதிரை ஏற்றத்தில் அவ்வளவு பழக்கப்பட்டவன் அல்ல. கருத்திருமன் பழக்கப்பட்டவன். ஆனபோதிலும் பாதாளச் சிறையில் நெடுங்காலம் இருந்தவனானபடியால், மிக்க உடற் சோர்வுற்றிருந்தான். ஆயினும் இரண்டு பேருடைய உள்ளங்களிலும் இப்போது ஒரு புதிய உற்சாகம் பிறந்திருந்தது. உள்ளத்தின் பலத்தினால் தளர்ச்சியைச் சகித்துக் கொண்டு அவர்கள் பிரயாணம் செய்தார்கள்.


நள்ளிரவு வரையில் பிரயாணம் செய்த பிறகு இருவரும் நின்றார்கள். அங்கே நதிக்குக் குறுக்கே மூங்கில் கழிகளைச் சேர்த்துக் கட்டி அமைத்த பாலம் ஒன்று இருந்தது. எப்படியும் தங்களைப் பின்தொடர்ந்து பிடிக்க ஆட்கள் வருவார்கள் என்று கருத்திருமன் எதிர்பார்த்தான். ஆகையால், அந்த இடத்தில் நதியைக் கடந்து அக்கரை சேர்ந்து விடுவது நல்லது என்று எண்ணினான். நதியின் தென்கரையோடு சிறிது தூரம் சென்று பின்னர் கோடிக்கரைப் பாதையில் திரும்பிப் போகலாம்.

அங்கே நதியைக் கடப்பதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. மதுராந்தகனால் குதிரையைச் செலுத்திக் கொண்டு ஆற்று வெள்ளத்தைக் கடக்க முடியுமா என்று கருத்திருமன் ஐயுற்றான். வெள்ளம் அதிகமாக இருந்தால் நிச்சயம் முடியாத காரியம். மதுராந்தகனைப் பாலத்தின் வழியாகப் போகச் சொல்லிவிட்டு இவனே இரண்டு குதிரைகளையும் ஒவ்வொன்றாக அக்கரை கொண்டு போய்ச் சேர்த்து விடலாம்.

இந்த யோசனைகளெல்லாம் மதுராந்தகனுக்கும் சம்மதமாயிருந்தது. நதி வெள்ளத்தில் இறங்குவதற்கு முன்னால் இருவரும் சிறிது நேரம் சிரம பரிகாரம் செய்து கொள்வதற்காக மரத்தடி வேரில் உட்கார்ந்தார்கள். ஆற்று வெள்ளம் 'சோ' என்ற சத்தத்துடன் ஓடிக் கொண்டிருந்தது. நாலா புறத்திலிருந்தும் மண்டூகங்களின் குரல்கள் கிளம்பிக் காதைத் துளைத்தன. வானத்தில் விரைவாகக் கலைந்து சென்று கொண்டிருந்த மேகத் திரள்களுக்கு மத்தியில் விண்மீன்கள் எட்டிப் பார்த்து ஒற்றர் வேலை செய்து கொண்டிருந்தன.

பெரும்பாலும் அரண்மனைகளில் சப்ரமஞ்சக் கட்டில்களில் பஞ்சணை மெத்தைகளுக்கு மத்தியில் உறங்கிப் பழக்கமான மதுராந்தகனுக்கு நள்ளிரவில் ஆற்றங்

## நூல் நன்கொடைச் சங்கம்



நூல்களை வாங்கிப் படிக்க ஆர்வம் இருந்தும் முடியாத இளஞ்சிறார்களுக்கும் முதியோர்களுக்கும் பணி புரிவதற்கென்று, குழந்தை இலக்கியப் படைப்பில் ஊக்கம் கொண்டு பல சிறப்புப் பரிசுகள் பெற்ற ஸ்ரீ கல்வி கோபாலகிருஷ்ணனைத் தலைவராகவும், பங்கு மார்க்கெட் நிபுணரும் சமூகநல ஊழியருமான ஸ்ரீ வி. கே. பத்மநாபனைச் செயலாளராகவும் கொண்டு 'கிப்ட் புக் இண்டர் நாஷனல்' என்னும் பெயரில் இலவச நூல் வழங்கும் நிறுவனம் ஒன்று சமீபத்தில் சென்னையில் உருவாகியுள்ளது. டி.வி.எஸ். அறநிலையத்தினர் 15000 குழந்தைப் புத்தகங்களை வாங்கி, சென்னைப் பள்ளிக்கூடங்களுக்கு விநியோகம் செய்து இப்பணிக்கு ஊக்கம் அளித்துள்ளார்கள். அறச் செல்வர்களில் நாட்டமுள்ள இதர தனியார் நிறுவனத்தாரும் இப்பணியில் அக்கறை காட்டினால் அறிவு ஒளியை இளம் உள்ளங்களில் பரப்பும் பேற்றை அடைவார்கள்; இந்த நிறுவனமும் வலுப்பெற்றுத் தன் இலட்சியத்தை நிலைநாட்ட முடியும். அமைச்சர் நெடுஞ்செழியன் இந்த நிறுவனத்தை ஆரம்பித்து வைக்க, அவரது மனைவியார் திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் புத்தகங்களை வழங்கும் பணியைத் தொடங்கி வைத்துள்ளார்.

கரையில் மரத்து வேர்களின் மீது உட்கார்ந்திருக்க நேர்ந்தது மிக்க மனச் சோர்வையும் வருங்காலத்தைப் பற்றிய பீதியையும் உண்டாக்கியது.

அவனுடைய மன நிலையை உள்ளுணர்ச்சியினால் அறிந்து கருத்திருமன் அவனுக்குத் தைரியம் சொல்ல முயன்றான். இலங்கை மன்னன் மகிந்தன் பாண்டிய குலத்தின் பரம்பரைச் சிநேகிதன் என்றும், அவனிடம் மதுராந்தகன் போய்ச் சேர்ந்து விட்டால் பிறகு ஒரு கவலையும் இல்லை என்றும் தெரிவித்தான். பாண்டிய குலத்தின் மணி மகுடமும் இந்திரன் தந்த ரத்தின ஹாரமும் இலங்கையிலேதான் இருக்கின்றன; இருக்குமிடமும் தனக்குத் தெரியும்; அங்கேயே மகிந்தன் மதுராந்தகனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்து விடுவான்! அதற்குள் சோழ நாட்டுச் சிற்றரசர்களுக்குள் போர் மூண்டு சோழ சாம்ராஜ்யம் சின்னாபின்னம் அடைந்து விடப் போகிறது. ஆதித்த கரிகாலனைக் கொன்று விட்டதாகப் பழுவேட்டரையர் — சம்புவரையர் கட்சியின் மீது மற்றவர்கள் குற்றம் சாட்டுவார்கள். மதுராந்தகன் இப்போது தன்னுடன் வந்துவிட்டபடியால் அவனைக் கொன்று விட்டதாக வேளார் கட்சியின் மீது பழுவேட்டரையர்கள் குற்றம் சுமத்துவார்கள். இந்தப் படுகொலைகளுக்கு அருள்மொழிவர்மனும் உடந்தையாக இருந்ததாக மக்களிடையே வதந்தி பரவப் போகிறது. ஆகையால் அவனையும் மக்கள் வெறுக்கத் தொடங்குவார்கள். இப்படியெல்லாம் சோழ ராஜ்யம் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கும் போது இலங்கை மன்னன் ஒரு பெரிய சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வருவான். மதுரையைக் கைப்பற்றுவான். மதுராந்தகனுக்கு உலகம் அறிய இரண்டாந் தடவையாக முடிசூட்டு விழா நடத்தி வைப்பான். 'மதுராந்தகன்' என்ற பெயரையும் மாற்றிச் 'சோழ குலாந்தகப் பெருவழுதி' என்ற அபிஷேகப் பெயரையும் சூட்டுவான்...

இவ்வாறெல்லாம் கருத்திருமன் சொல்லி வந்தபோது மதுராந்தகனுடைய உள்ளம் விம்மியது. அவனுடைய வாழ்க்கையில் அதுவரை கண்டிராத உற்சாகத்தை அவன் அடைந்தான். போர்க் களங்களில் கேட்கும் வெற்றி முரசுகள் அவன் காதில் ஒலித்தன. பட்டாபிஷேக வைபவங்களுக்குரிய பல வகை இன்னிசைக் கருவிகள் மற்றொருபால் முழங்கின. ஆயிரமாயிரம் மக்களின் குரல்கள் ''பாண்டியச் சக்கரவர்த்தி வாழ்க!'' என்று கோஷமிட்டன.

இப்படி இன்ப மயமான கற்பனை உலகத்தில் மதுராந்தகன் சஞ்சரித்துக் கொண்டிருந்தபோது, அந்தக் கற்பனைக் கனவைக் கலைத்துக் கொண்டு குதிரைகளின் காலடிச் சத்தம் கேட்டது. சற்றுத் தூரத்தில் தீவர்த்திகளின் வெளிச்சமும் தெரிந்தது.

கருத்திருமன் அவ்வளவு விரைவாக ஆட்கள் தங்களைத் தொடர்ந்து வரக் கூடும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆகையால் மிக்கப் பரபரப்புடன் குதித்தெழுந்து, ''இளவரசே! எழுந்திருங்கள். குதிரைமேல் ஏறுங்கள். அவர்கள் வருவதற்கு முன் நதியைக் கடந்து விட வேண்டும்!'' என்றான்.

ஒரு கணத்தில் அவன் குதிரைமேல் பாய்ந்து ஏறிக் கொண்டான். மதுராந்தகன் குதிரை மேல் ஏறுவதற்குக் கஷ்டப்படுவதைப் பார்த்து விட்டு, ''ஐயா! ஒன்று செய்யுங்கள். தாங்கள் பாலத்தின் மேல் நடந்து அக்கரை போய்விடுங்கள். நான் தங்கள் குதிரையையும் அக்கரைக்குக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன்!'' என்றான்.

''அழகாயிருக்கிறது! என்னைப் பயங்காளி என்று நினைத்தாயா? குதிரை மேலேறி இந்த ஆற்றைக் கடக்க என்னால் முடியாவிட்டால், அப்புறம் கடல் கடந்து இலங்கை போவது எப்படி? பாண்டிய ராஜ்யத்தைப் பிடித்துச் சிங்காதனம் ஏறுவது எப்படி?'' என்று வீரியம் பேசியபடியே மெதுவாகக் குதிரை மேலே ஏறினான்.

இரண்டு குதிரைகளும் நதியில் இறங்கின. மதுராந்தகனுடைய குதிரை தண்ணீர்க் கரையண்டை திடீரென்று முன்னங்கால் மடிந்து படுத்தது. ''ஐயோ!'' என்று அலறினான் கருத்திருமன். நல்லவேளையாகக் குதிரை சமாளித்து எழுந்து தண்ணீரில் இறங்கியது.

மதுராந்தகனுடைய மனத்திற்குள் திகில்தான். ஆனால் வெளியில் காட்டிக் கொள்ளாமல், ''இது என்ன பிரமாதம்? இப்படிப் பயந்துவிட்டாயே?'' என்றான்.

மதுராந்தகனுடைய குதிரையின் காலில் ஏதாவது காயம் பட்டிருந்ததோ என்னமோ, அது வெள்ளத்தில் மற்ற குதிரையைப் போல் விரைந்து செல்லவில்லை. அடிக்கடி அது வெள்ளத்தோடு வெள்ளமாகப் போகப் பார்த்தது. அதைத் திருப்பி எதிர்க் கரையை நோக்கிச் செலுத்துவதற்கு மதுராந்தகன் மிக்கச் சிரமப்பட்டான்.

கரையோடு வந்த குதிரைகளின் காலடிச் சத்தமோ நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது.

பாதி ஆறு வரையில் கருத்திருமன் இளவரசனுக்காக நின்று நின்று போய்க் கொண்டிருந்தான். பிறகு ஒரு யோசனை அவன் மனத்தில் உதித்தது. மதுராந்தகனுக்குத் தைரியம் சொல்லிவிட்டு அக்கரையை நோக்கி விரைந்து சென்றான். கரையில் ஏறிக் குதிரையை ஒரு மரத்தினடியில் நிறுத்தினான். குதிரை மேலிருந்து பாய்ந்து இறங்கி மூங்கில் பாலத்தின் வழியாகத் திரும்பவும் வடகரைக்கு வந்தான். மதுராந்தக விடமிருந்த சிறிய கத்தியை அவன் ஏற்கனவே வாங்கி வைத்துக் கொண்டிருந்தான். அதைக் கொண்டு அவசரம் அவசரமாகப் பாலத்திலிருந்து தொங்கிக்கொண்டிருந்த கயிறுகளை அறுத்து முடி போட்டான். அது போதிய நீளமாகத் தெரிந்ததும் ஒரு முனையைப் பாலத்தில் சேர்த்துக் கட்டி விட்டு மற்றொரு முனையைச் சாலையின் மறு புறத்திலிருந்த மரத்தின் அடியில் சேர்த்துக் கட்டினான்.

மர நிழலில் அதிகமா யிருந்த இருட்டில் அவ்விதம் சாலை நடுவில் குறுக்கே ஒரு கயிறு கட்டி யிருந்ததை யாரும் பார்க்க முடியாது அல்லவா? அதிலும் குதிரை மேல் வேகமாக வருகிறவர்கள் நிச்சயம் பார்க்க முடியாது.

இந்தக் காரியத்தை அவன் செய்து முடித்ததும் பாலத்தின் வழியாகத் திரும்பி ஓடிவிடலாமா என்று யோசித்தான். அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு அங்கே இருந்த மரம் ஒன்றின் பேரில் சரசரவென்று ஏறிக் கிளைகளின் மறைவில் உட்கார்ந்து கொண்டான்.

மதுராந்தகருடைய குதிரை கிட்டத் தட்ட நதியைக் கடந்து அக்கரையை நெருங்கி யிருந்தது.

இன்னும் சில நிமிஷ அவகாசம் கிடைத்தால், கரை மேல் ஏறி மதுராந்தகன் குதிரை அப்பால் சென்றுவிடும்.

இந்த எண்ணம் அவன் மனத்தில் தோன்றி மறைவதற்குள் சாலையோடு வந்த குதிரைகள் அந்த மரத்தடியை நெருங்கிவிட்டன. ஐந்தாறு குதிரைகள் இருக்கும். அவற்றில் இரண்டு குதிரைகள் முன்னணியில் வந்தன. அவை இரண்டும் ஒரு கணம் முன் பின்னாகக் கருத்திருமன் கட்டியிருந்த குறுக்குக் கயிற்றினால் தடுக்கப்பட்டுத் தலை குப்புற உருண்டு விழுந்தன.


கருத்திருமன் மரத்தின் மேலிருந்த படி தன்னை யறியாமல் 'ஹா ஹா, ஹா.' என்று பலமாகச் சிரித்தான்.


குதிரைகளின் மேலிருந்து விழுந்தவர்களில் ஒருவன் ''ஐயோ! பிசாசு!'' என்று பயங்கரமாக அலறினான்.


குரலிலிருந்து அவன் வைத்தியர் மகன் பினாகபாணி என்பதைக் கருத்திருமன் தெரிந்து கொண்டான். விழுந்தவன் கழுத்து நெரிந்து இறந்திருக்கக் கூடாதா, இன்னமும் உயிரோடிருக்கிறானே என்றும் எண்ணிக்கொண்டான்.

இன்னொரு குதிரையின் மேலிருந்து விழுந்தவன் சிறிதும் அதிர்ச்சி யடையாமல் தரையிலிருந்து எழுந்தான். அவன் நமது பழைய நண்பன் கந்தமாறன்தான்! (தொடரும்)

" யாரடாவன் ? நான் போகிற வழியிலெல்லாம் கேப்பு வெடியைக் கொட்டி வைச்சது ?"







" ஊரிலிருந்து உன் அத்திம்பேர் வருகிறார் பார்! நீ அவருக்கு டாட்டா சொல்லிக் காட்டுடா பார்க்கலாம்!"



# மனம் கவர்ந்த மனோகர் காவஸ்கர்

எல்லா வீதிகளும் ரோம் நகரை நோக்கிச் செல்கின்றன என்று ஆங்கிலத்தில் கூறுவதுண்டே — அம்மாதிரி செப்டம்பர் 25, 26 சனி, ஞாயிறு இரு நாட்களும் லயோலா கல்லூரியை நோக்கிச் சாரி, சாரியாகச் சிறுவர்களும் இளைஞர்களும், ஏன் — முதியோரும் கூடத்தான் — செல்லும் காட்சி பிரமிப்பூட்டுகிறது. புச்சிபாபு கிரிக்கெட் பந்தயத்தில் ஏ. சி. சி. அணியில் பிரபல பாட்ஸ்மன் சுனில் காவஸ்கர் கலந்து கொண்டு ஆடப் போகிறார் என்ற செய்திதான் அவ்வளவு ரசிகர்கள் திரண்டு வரக் காரணம். குழுமியிருந்த ஏழாயிரத்துக்கு மேற்பட்ட ரசிகர்களை காவஸ்கர் ஏமாற்றிவிடவில்லை. 75 ரன்கள் அநாயாசமாக எடுத்துக் கிரிக்கெட் ரசிகர்களை இன்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்தார் 'கவாஸ்'. ஆட்டத்தின் தொடக்கத்தில் அவர் அடித்த பந்தை 'காட்ச்' பிடிக்காமல் 'ஜாலி ரோவர்ஸ்' அணி ஆட்டக்காரர் கோட்டை விட்டதாலே ரசிகர்களுக்கு சுனிலின் பந்தடி விருந்து கிட்டிற்று. ஆகவே அவர் வாழ்க!

ஞாயிற்றுக் கிழமை இடைவேளையின்போது காவஸ்கர் ஆட்டமிழந்த பின் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கையில் அவரைச் சந்திக்கிறேன். இடுப்பில் நீல வண்ணத்தில் ஒரு டர்க்கி டவல் மட்டும் அணிந்து, பனியன், சட்டை ஏதுமில்லாமல் அமர்ந்திருக்கிறார் சுனில். கழுத்திலிருந்து நீண்டு தொங்கும் ஒரு தாயத்து அவரது வயிற்றருகில் ஊசலாடுகிறது. பெற்றோரின் ஒரே செல்லப் பிள்ளை 'கவாஸ்.'

''உங்கள் பெற்றோருக்குக் கிரிக்கெட்டில் விருப்பமுண்டா?'' என்று கேட்டதற்கு அவர் கூறுகிறார்: ''என் தந்தை கிரிக்கெட் விளையாடுவார். ஃபோர்ப்ஸ் காம்பெல் நிறுவனத்தில் பணியாற்றுகிறார் அவர். அம்மாவும் எனக்கு ஊக்கமளிக்கிறார். நான் ஐந்து ஆறு வயதுப் பையனாக இருந்தபோது எனக்கு முதன் முதலில் 'போலிங்' செய்தது என் அம்மாதான். டென்னிஸ் பந்தால் 'பௌல்' செய்து என்னை அடிக்கச் சொல்லுவார்'' என்று இளநகையோடு கூறுகிறார்.

பம்பாய் செயின்ட் ஜேவியர் பள்ளியிலும் பின்னர் அதே பெயருள்ள கல்லூரியிலும் பயின்று பொருளாதாரத்தில் பி. ஏ. பட்டம் பெற்றுள்ள சுனில் மனோகர் காவஸ்கர் இப்போது எம்.ஏ. படிக்கிறார். கிரிக்கெட் தவிர, பாட்மிண்டனும் விளையாடுகிறார். கிரிக்கெட் ஆட்டம் பற்றிய நூல்களைப் படிப்பதும் திரைப்படங்கள் பார்ப்பதும் சுனிலின் பொழுது போக்கு. இசையிலும் அவருக்கு ஆர்வமுண்டு.

''அயல்நாடுகள் விஜயத்தின்போது உங்களை மிகவும் கவர்ந்த நகர் எது?''

''டிரினிடாட்'' என்று உடனே பதிலிறுக்கிறார். 'டிரினிடாட் அழகான ஊர். கிரிக்கெட் பந்தயத்தைக் காண மிகக் கூடுதலான மக்கள் வந்ததும் டிரினிடாடில்தான்'' என்கிறார். அங்கு நிகழ்ந்த இரண்டாவது டெஸ்ட் பந்தயத்தில்தானே பாரதம் முதன் முறையாக மேற்கு இந்தியக் கோஷ்டியை வெற்றிகொண்ட சாதனையும் நிகழ்ந்தது?

தாய்மொழி மராத்தி. ஆங்கிலம் தவிர ஹிந்தியும் பிரஞ்சு மொழியும் அறிந்தவர் காவஸ்கர். வேகமாகப் பந்து வீசுவதில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் யாரும் நம் அணியில் இல்லாத நிலையில், ஸோல்கருடன் காவஸ்கர் 'போலிங்'கைத் தொடங்கி அதிக ஓட்டங்கள் எதிராளிகளுக்குக் கொடுக்காமல் சிக்கனமாகப் பந்து வீசியது நேயர்கள் அறிந்ததே. அது பற்றிக் கேட்டதும், ''என்னை ஒரு 'பௌலர்' என்று சொல்லிக் கொள்ளுவதற்கில்லை'' என்று அடக்கமாகக் கூறுகிறார், இளைஞர் காவஸ்கர். இத்தகைய தன்னடக்கம் உள்ளவரின் திறமை, மாலை நிழல் போல் வளர்ந்து கொண்டே போகும் என்பதில் ஐயமேது? ''சென்னை ரசிகர்களின் அன்பும் கிரிக்கெட் ஆர்வமும் என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டன. அனைவருக்கும் என் அன்பைத் தெரிவியுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார் சுனில். நிறைவேற்றி விட்டோம்.

—பாணன்




இப்பொழுது
ஃப்ரெஸ்காவை
உணர்ந்து பாருங்கள்
Beauty Talc
fresca
இரண்டு அளவுகளில்
கிடைக்கிறது.
கோத்ரெஜ் அளிக்கும்
ஃப்ரெஸ்கா பியூடி டால்க்
ஃப்ரெஸ்கா என்றாலே புத்துணர்ச்சிதான்!
Interpub GF—3 TM

# சில மனிதர்கள் சில நினைவுகள்

**ப**ள்ளிப் பருவத்தில் கோபால கிருஷ்ண கோகலே சிறந்த மாணவன் என்ற அடைமொழிக்கு மட்டும் இலக்காகியதில்லை. மிகச் சிறந்த ஞாபக சக்தி உள்ள மாணவன் என்ற புகழுக்கும் அவர் நண்பர்கள் இடையே பாத்திரமாகியிருந்தார். தம் கையிலிருக்கும் பாட புத்தகத்தை நண்பனிடம் கொடுத்துவிட்டு, அவனைச் சரி பார்க்கச் சொல்லி அத்தனை பாடங்களையும் ஒப்பிப்பாராம். ஒரு தவற்றுக்கு ஓர் அணா என்று பந்தயம் கட்டிக் கொண்டு ஒப்பிப்பார். ஆனால் அவர் ஓர் இடத்திலும் தடுமாறியதும் இல்லை. பந்தயத்தில் ஓர் அணாக்கூட இழந்ததும்இல்லை.





**உ**லகப் புகழ்பெற்ற ஷெர்லக் ஹோம்ஸ் பாத்திரத்தை உருவாக்கிய கானன்டாயில் ஆரம்பத்தில் ஒரு சாதாரண மருத்துவராகத்தான் வாழ்க்கையை ஆரம்பித்தார். மிகுந்த சிரம தசை. வைத்தியம் செய்து கொள்ள வந்தவர்களில் பெரும்பாலோர் ஏழைகள்! அவர்கள் வார்த்தைகள் மூலம் தங்கள் நன்றியைத்தான் காட்டினார்களே தவிர பணத்தைக் காட்டவில்லை. மற்றும் சிலர் அவரை ஏமாற்றி விட்டே போனார்கள். ஆண்டு ஒன்றுக்கு நூற்றைம்பது பவுன் கூடச் சம்பாதிக்க முடியாத நிலை. இந்த லட்சணத்தில் வருமான வரி இலாகாவுக்குத் தம் வரவு செலவுக் கணக்குகளை அவர் அனுப்பவேண்டியிருந்தது. அந்த இலாக்கா அதிகாரிகள், அவர் கணக்குகளைச் சரிவரச் சமர்ப்பிக்கவில்லை என்று கடிந்து கொள்ளும் விதமாகக் 'கொஞ்சம் கூடத் திருப்திகரமாக இல்லை' என்ற குறிப்புடன் கானன் டாயில் சமர்ப்பித்திருந்த விவரங்களைத் திருப்பி அனுப்பினார்கள். அதைக் கண்ட கானன் டாயில் அந்தக் குறிப்பின் கீழேயே, "உங்கள் அபிப்பிராயத்தை நான் மனப்பூர்வமாக ஆமோதிக்கிறேன்" என்று எழுதி மீண்டும் அனுப்பி வைத்தார், தமது குறைந்த வருவாய் குறித்துக் கவலை கொண்டவராக!

**சு**தந்திரப் போராட்டத்தின் நிமித்தம் லால்பகதூர் சாஸ்திரி நைனி மத்திய சிறையில் இருந்த நேரம். சிறைக் கைதிகள், அதிகாரிகள் எல்லோருக்குமே சாஸ்திரியிடம் ஒருவித ஈடுபாடு - அன்பு. சிறையில் அவ்வப்போது ஏற்படும் சில்லறைத் தகராறுகளையெல்லாம் அவர் மத்தியஸ்தம் செய்து சுமுகமாகத் தீர்த்து வைப்பார். அந்த நேரத்தில் சாஸ்திரியுடன்கூடச் சிறைத் தண்டனை அனுபவித்த நண்பர் பி. டி. தாண்டன், "சாஸ்திரிஜீ! நீங்கள் மிகவும் அதிருஷ்டக்காரர்! ஓர் அதிருஷ்டக்காரர் நெற்றியில் மற்றொருவர் நெற்றியை உரசினால் பின்னவருக்கும் அதிருஷ்டம் உண்டாகுமாம். ஐந்து ரூபாய் காணிக்கையாகக் கொடுக்கிறேன். ஒரு தடவை உங்கள் நெற்றியில் உரசிக் கொள்கிறேன்" என்றார்.

சாஸ்திரி சிரித்தார். "உனக்கு இந்தச் சிறையில் எப்படி ஐந்து ரூபாய் கிடைத்தது? அப்படியே கிடைத்திருந்தால் அதை ஏன் இவ்வளவு சுலபமாக இழக்க விரும்புகிறாய்?" என்றாராம். —மேனு

"எல்லோரும் சீரும் சிறப்புமாக வாழுங்கள் என்று வாழ்த்துவார்கள்! உன்னுடைய மாமனார் சீரும் செருப்புமாக வாழுங்கள் என்று வாழ்த்தினாரா, பேஷ்!"

"பின்னே எப்படி வாழ்த்துவார்? அவர் வாங்கிக் கொடுத்த நோவவிச் சீரே அது ஒன்றுதானே!"




மூன்று மந்திரவாதிகள் 3
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ராஜு
வழிப்போக்கர்களைக் கொன்று அழித்து வாழ்ந்த திருடனை நிலவறைக்குள் தள்ளி மூடிய பின் அரசகுமாரர்கள் அந்த அரண்மனையை ஆராய்கிறார்கள்.
இத்தனையும் கொள்ளைப் பொருள்கள்.
எத்தனை பேர்களின் வேதனைகளைச் சேமித்து வைத்திருக்கிறான், பாவி!
கொஞ்சநாள் நாம் இங்கு தங்கி விட்டுப் போகலாம். என்ன?
பொழுது போக அடுத்துள்ள காட்டில் வேட்டையாடலாம்.
அறுசுவை உணவு தயாரித்து மகிழ்விக்க அக்கா இருக்கிறாள்.
அக்கா! நாங்கள் காட்டில் வேட்டையாடப் போகும் போது இந்த அரண்மனையில் நீ மட்டும் தனியாக...
தனிமை நமக்குப் பழகிப் போன ஒன்றல்லவா? இதற்குக் கவலைப் படலாமா?
சகோதரி, ஒரே ஒரு எச்சரிக்கை. எக் காரணத்தைக் கொண்டும் அந்த நிலவறையின் பக்கம் மட்டும் போய் விடாதே. எத்தனை பரிதாபமான குரல் வந்தாலும் அதைப் பொருட் படுத்தாதே.
சகோதரர்களின் எச்சரிக்கையைச் சில நாள் தான் இந்துமதியால் காப்பாற்ற முடிந்தது. ஒரு நாள்...
நாளெல்லாம் இந்த பரிதாப மான ஓலத்தைக் கேட்டுக் கொண்டு இங்கு இருக் கவே முடிய வில்லை.
ஐயோ! உயிர் துடிக்கிறதே. வலி தாங்க முடியவில்லையே. நாக்கு வரள்கிறது... தண்ணீர் தாகம்... தண்...


தம்பிகளின் எச்சரிக்கையைப் புறக்கணித்த இந்துமதி நிலவறைக்குள் நுழைகிறாள்.
பேய்க்கும் கருணை காட்டுவாள் பெண் என்பது எத்தனை உண்மை? நீ எப்படி இருக்க வேண்டியவள்? இப்படி இந்த உதவாக்கரைத் தம்பிகளோடு சேர்ந்து உன் வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளலாமா?
நீ என்ன சொல்லுகிறாய்? ஒரு கொள்ளைக்காரனின் அநுதாபம் எனக்குத் தேவையில்லை.
இந்துமதி, நீ யார் என்று எனக்குத் தெரியும். ஆனால் என்னை உனக்குத் தெரியாது. ரணதீரன் என் நண்பன். நாட்டின் இந்த எல்லைக்கு என்னைக் காவலாக நியமித்திருக்கிறான்.
கய வஞ்சகன் இந்துமதியின் உள்ளத்தைக் கலைக்கிறான்.
என்ன இருந்தாலும் உன் சொந்தத் தாயின் பிள்ளைகளா அவர்கள்? பொருளும் புகழும் வந்தால் உன்னைப் பொருட்படுத்தவே மாட்டார்கள்.
என் சொற்படி கேட்பாயானால் உன்னை ஒரு நாட்டின் ராணியாக்குவேன். நீ நினைத்தும் பார்க்க முடியாத சுகவாழ்வு வாழலாம்.
ராணி... சுகவாழ்க்கை... என்ன இருந்தாலும் நான் அவர்களின் சொந்தச் சகோதரியா?... அவர்கள் என்னை உதாசீனம் செய்யமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? சீச்சீ...! திருடன் பேச்சைக் கேட்பதா?
மனப் போராட்டத்தின் முடிவில் தீய சக்திகளின் வயப்பட்டாள் இந்துமதி. மறுபடியும் நிலவறை நாடித் தானே சென்றாள்.
எனக்குத் தெரியும் நீ வருவாய் என்று. வாழத் தெரிந்தவள் நீ. ஹ... ஹ... ஹா! பூஜை அறையில் காளி சிலை இருக்கிறது அல்லவா? அதன்...


சூலமேந்திய கையைச்
சுழற்றினால் பீடத்தில்
ஒரு வழி உண்டாகும்.
அதன் வழியே உள்ளே
சென்றால்... முதலில்
கையைச் சுழற்றிப்
பார்ப்போம்.
கையைத் திருகக் கதவு திறந்தது.
அதன் வழியே உள்ளே...
இதனுள்ளே ஒரு பீடத்தின் மீது ஒரு
பேழை இருக்குமாம். அதைக் கொடிய
விஷப் பாம்புகள் சுற்றிக் கொண்டிருக்குமாம்.
காளியின் குங்குமத்தைக் கைகளில்
பூசிக் கொண்டால் பாம்புகள் ஒதுங்கி
வழி விடுமாம்... அப்படித்தானே
அவன் சொன்னான்...?
அவன் சொன்னது உண்மை
தான். பாம்புகள் என்னை
ஒன்றும் செய்யவில்லை.
இதனுள்ளிருக்கும் தைலக்
குப்பிகளை எடுத்துக் கொண்டு
அவனிடம் விரைவில்
செல்ல வேண்டும்.
வந்து விட்டாயா? உன் சகோத
ரர்கள் வேட்டையிலிருந்து
திரும்புவதற்குள் காரியத்தை
முடிக்க வேண்டும். பாம்பு மூடிக்
குப்பியிலுள்ள தைலத்தை எடுத்து
என் காயங்களில் தடவு.
காயங்கள் இருந்த
இடம் தெரியவில்லையே.
அதிசயமான தைலம்
தான்.
அதிசயமா? அற்புதம் என்று சொல்.
துண்டம் துண்டமாக வெட்டிய
உடலைக் கூட இது ஒன்றாக்கி விடும்.
அதோ அந்தச் சூலம் போட்ட
குப்பியிலுள்ள தைலம் உடலில்
உயிர் ஓட்டத்தையும், வெண்மூடிக்
குப்பியில் உள்ளது பலத்தையும்
உண்டாக்கக் கூடியது. அவை
களையும் தடவு விரைவாக...
ஹா... ஹா... ஹா!
நான் பிழைத்து விட்டேன்.
என் சூழ்ச்சி பலித்து
விட்டது.
இளவரசி! அந்தத் தைலக்
குப்பிகளைக் காளியின் பீடத்தி
லேயே கொண்டு வைத்து
விட்டு வா. அது அங்கிருந்
தால்தான் அதன் சக்தி
குன்றாமலிருக்கும்.

தொடரும்



# கல்யாணத்தில் கலாட்டா

இப்பொழுது நடைபெறும் அமெச்சூர் நாடகங்கள் எல்லாம் அநேகமாக ஹாஸ்ய நாடகங்களாகவே இருப்பதற்குக் காரணம் என்னவென்று யோசித்தேன். கனமான கதைப் பகுதியும், சோக பாத்திரங்களையும் கொண்ட நாடகமாயிருந்தால் அதற்கேற்ப நடிகர்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி அளித்து நாடகத்தை அரங்கேற்றுவது சிரம சாத்தியமான காரியமாகி விடுகிறது. 'ஸெட் தீம்' நாடகமானால், பாத்திரங்கள் மேடைக்கு வந்து 'டயலாக்'கைத் தவறாமல் பேசினால் போதும்.

இதோ ஸ்டேஜ் நாடகக் குழுவினர் ''கல்யாணத்தில் கலாட்டா'' முழுக்க முழுக்க ஹாஸ்ய நாடகம். அதாவது நகைச்சுவை உரையாடல்! அவ்வளவுதான். நாடக இயல் இல்லை, கனமான கதை இல்லை, அழுத்தமான பாத்திரம் ஒன்றுகூட இல்லை என்று யார் என்ன வேண்டுமானாலும் சொல்லிக்கொண்டு போகலாம். ஆனாலும் இந்த நாடகம் 'கோல்டன் ஜுபிலி' கொண்டாட விருக்கிறது. காட்சிக்குக் காட்சி ரசிகப் பெருமக்களின் ஆரவாரச் சிரிப்பும் கைவொலியும் கேட்கும் போது நாம் என்ன சொல்ல இருக்கிறது?

கதை, வசனம் ராது நீட்டி யிருக்கிறார். டைரக்ஷனை ஜகன் ஏற்றிருக்கிறார்.

கலோவாக வந்த புவனா தேவி பல நாடகங்களில் நன்றாய் நடித்தவர்தான் என்றாலும், இந்த நாடகத்தில் அதிக 'சான்ஸ்' இல்லை. விதம் விதமான புடவைகளை மாற்றிக் கட்டிக் கொண்டு மேடையில் தோன்றியதோடு சரி!

நாடகத்தில் கல்யாணம் இல்லை; ஆனால் கடைசிவரையில் கலாட்டாவுக்குக் குறைவில்லை. கல்யாண மாப்பிள்ளையின் அப்பாவும், அத்தையும் மேடைக்கு வந்தபோதெல்லாம் கொட்டகை அதிர்ந்தது! நாடகம் வைர அட்டிகையைப் பற்றியது; அதுதான் சஸ்பென்ஸ்! அழையா விருந்தினர்களாக வந்து உறவு முறை சொல்லிக் கொண்டு திருட வந்த நன்னத் திருடர்கள் ரொம்ப தமாஷ்! இதோ ஸ்டேஜ் குழுவினர் மனம் வைத்தால் அடுத்த நாடகத்தில் நகைச்சுவையோடு கருத்தாழமும் இருக்கும். - காந்தன்

**படித்துப் பாருங்கள்**

# படிப்பது எதற்கு?

ஆந்திரப் பிரதேசத்தில் கேட்க வேண்டிய கேள்வி அல்லவா என்று தோன்றும். அங்குதானே பரீட்சைகள் கிடையாது?

ஆயின் டாக்டர் அழகப்ப அழகப்பன் நம்மைத்தான் கேட்கிறார், ''படிப்பது எதற்கு?'' என்று. ''உன்னை நீ அறிந்துகொள்ள'' என்று சுருக்கமான பதிலைக் கூறி, பின்னர் அதனையே விரிந்துரைக்கிறார், இருபது பக்கக் கட்டுரை வடிவிலே. படிப்பின் பயன் அடக்கம் என முடிவு கட்டுகிறார்.

எதற்காகப் படிக்கக் கூடாது என்பதனைத் தெளிவாக்கி, பிறகு எதற்குப் படிக்க வேண்டும், எதை எதைப் படிக்க வேண்டும், எப்படி படிக்கவேண்டும் என்றெல்லாம் விளக்குகிறார்.

சிலர் ரொம்பச் சிக்கலான விஷயங்களைக் கூட எளிதாகப் புரிகிற விதம் எழுதுவதில் ஆற்றலுள்ளவர்களாய் இருப்பார்கள். இன்னும் சிலர் மிக எளிய விஷயங்களையும் ஒன்றும் விளங்காத விதமாய் எழுதிக் குட்டை குழப்புவார்கள். டாக்டர் அழகப்ப அழகப்பன் எளிய விஷயங்களை அரிய முறையில் எழுதியிருக்கிறார். 'இத்தனை எளிய விஷயங்களை இவ்வளவு சுவாரஸ்யமாக எழுதமுடியுமா?' என்று நாம் வியக்கிறோம்.



வேலை செய்வது, அறிமுகக் கடிதம், நாணயம், ஜாதகம், கல்யாணம், பிச்சை, பிரயாணம் என்ற தலைப்புக்களில் சுவையான விருந்தாகக் கட்டுரைகள் அமைந்துள்ளன. நகைச்சுவை ஊறுகாயும் உண்டு.

இவற்றை ரசிக்கும் அளவுக்கு இப்புத்தகத்தின் இரண்டாம் பகுதியான வாழ்க்கைச் சித்திரங்கள் என்ற அம்சத்தை அனுபவிக்க முடியவில்லை. ''ஆயுள் முடிந்தது'' என்ற ஒரு கட்டுரை தவிர மற்றவை இக்காலத்துக்கு ஒவ்வாத பழைய சமாசாரங்களாய் இருப்பது இதற்குக் காரணம்.

டாக்டர் அழகப்ப அழகப்பன் பட்டம் பெறுகையில் மாகாண முதல் மாணவராக விளங்கினார். பின்னர் மேனாடுகள் சென்று கல்வியைத் தொடர்ந்த போதிலும் தமிழார்வம் காரணமாக இங்கிலாந்திலும் தமிழ்ச் சங்கம் தொடங்கினார். ஐ. நா.வின் பல பிரிவுகளிலும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். தற்போது ஐ. நா.வின் நீர்வள ஆராய்ச்சிப் பிரிவின் முதல்வராயிருக்கும் இவர், அமெரிக்காவில் கோயில் ஒன்று கட்டும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறார்.

''படிப்பது எதற்கு?'' என்று தலைப்பு இருப்பதால் இப்புத்தகத்தைப் படிக்காமல் இருந்து விடவேண்டாம். அப்படி இருந்தால் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையக்கூடிய ஓர் உற்ற துணைவனை இழந்தவராவோம்.

கிடைக்குமிடம்: பழனியப்பா பிரதர்ஸ், சென்னை — 14; விலை ரூ. 2.50.



everest/39 d/Acw Tam

ஆண்டுதோறும் மைசூரில் தசராவை முன்னிட்டுப் பொருட்காட்சி நடைபெற்று வருகிறதல்லவா?

1956ம் ஆண்டு மைசூரின் தசரா பொருட்காட்சியைப் பார்க்க வந்தவர்களுள் ஒருவர் குமாரி அலமேலு.

ஓவியக் கண்காட்சி நடைபெற்ற இடத்தில் ஒருவர் நீளமான கூந்தல்களைக் கொண்டு பெரியதொரு படத்தை உருவாக்கி வைத்திருந்தது அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.



குமாரி அலமேலுவுக்கு அந்தப் படத்தையே சில நிமிடங்கள் கண் கொட்டாமல் பார்த்ததும், ஒரு புதிய எண்ணம் மின்னல் போல் பளிச்சிட்டது.

'கூந்தலினால் செய்வதைவிட்டு, அதற்குப் பதில் வாழை நாரினால் படத்தை உருவாக்கினால் என்ன?'

அடுத்த ஆண்டு அதே மைசூர் தசராவில் வாழை நாரினால் படங்களைத் தயாரித்துக் கொண்டு வந்து வைத்தார் குமாரி அலமேலு!

பூஜைக்கு உகந்த தெய்வத் திரு உருவங்களையே அங்கே பார்வைக்கு வைத்தார்.

குமாரி அலமேலுவுக்கு, மைசூர் தசரா பொருட்காட்சியை நடத்தியவர்கள், சிறப்புப் பரிசும், நற்சான்றிதழும் தந்தார்கள்!

இம்மாதிரி தயாரித்த வேறு சில படங்கள், பெங்களூர், தில்லி, கோழிக்கோடு முதலிய இடங்களில் நடந்த பொருட்காட்சி அரங்குகளிலும் பரிசுகளை ஈட்டித் தந்தன.

பக்தி சிரத்தையுடன் நாரினால் உருவாக்கிய படங்களுடன் காஞ்சி ஆசாரியாளிடமும், சிருங்கேரி ஆசாரியாளிடமும் சென்று அவர்கள் முன்பு சமர்ப்பித்து, ஆசிகளும் வாங்கி விட்டார்!

மைசூர் மாநிலத்திலேயே வீணையில் 'வித்வத்' பரீட்சையில் முதலாவதாகத் தேறியிருக்கும் அலமேலு, பெங்களூர் ரேடியோவிலும் சில சபாக்களிலும் வீணைக் கச்சேரிகள் செய்து வருகிறார்.

இன்னொன்று.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட குடும்பம்தான். தந்தை பத்மநாப ஐயர், மைசூர் அரசாங்கத்தில் 'கண்ட்ரோலர்' பதவி வகித்தவர். இப்போது அவர் காலமாகி விட்டார். உத்தியோகத்தை முன்னிட்டுப் பல வருடங்களாக மைசூர் மாநிலத்திலேயே அவர் வசித்ததால் மகளுக்குக் கன்னடம் நன்கு வந்து விட்டதாம்.

ஓவியத் திறமை, இசையில் தேர்ச்சி ஆகியவற்றுடன் எழுத்தாற்றலும் உண்டு!

'ஹநுமத் விலாசம்' என்னும் கன்னட ராமாயணத்தை ஸ்வரப்படுத்தி, 'காயன கங்கா' என்னும் இசைக்காக நடத்தப்படும் பத்திரிகையில் தொடராக எழுதி வருகிறார் இவர். கலை விமரிசனங்கள் கன்னடப் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. ரேடியோ சொற்பொழிவுகளுக்கும் குறைவில்லை.

இவ்வளவெல்லாம் இருந்தும், ஒரு முக்கியமான நிகழ்ச்சி இன்னும் நடைபெறவில்லை!

அதுதான் திருமணம்!

எந்த அதிர்ஷ்டசாலி, எங்கே பிறந்து, வளர்ந்திருக்கிறாரோ! — ஏ. சுவாமிநாதன்



வாழை நார் ஓவியம்



# சென்ட்ரல்

ரா.கி.ஆர்



"ஏன் சார்! எங்கே இந்த என்கொயரி கவுண்டர் ஆளைக் காணோம்? ரொம்ப நேரமா இடத்திலேயே காணோம்?" ஒருவர் இன்னொருவரிடம் கேட்கும் அர்த்தமற்ற கேள்வி.

## அத்தியாயம் 11

மங்களாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. கேதாரத்தின் மீது ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. அவன்தானே அவளுடைய மனத்தில் சலனத்தை உண்டாக்கி யிருக்கிறான்?

அவனிடம் தன் மனம் லயித்துவிட்டது என்ற உண்மையை நினைத்துப் பார்த்த போது அவளுக்கே நம்பிக்கை விழவில்லை. நான்கு நாட்கள் முன்னால் கூட அவள் மேரியிடம் அடித்துப் பேசியிருக்கிறாள், அவள் யார் மீதும் எந்த நிலையிலும் மனத்தை ஓடவிடமாட்டாள் என்று. மேரி சிரித்துக் கொண்டே, 'பெண் மனத்தை ஒரு பெண்ணான மங்களாவே புரிந்து கொள்ளவில்லை' என்றாள். இப்போது நான்கே நாட்களில் அவளுடைய வீராப்பு அவளைப் பார்த்தே சிரிப்பாய்ச் சிரித்துவிட்டது. மேரி ஜயித்து விட்டாள்!

எப்படிக் கேதாரத்தின் மீது அவள் மனம் ஈடுபட ஆரம்பித்து, நிலைத்துக் கடைசியில் லயிப்பில் முடிந்தது என்று அவள் அலசிப் பார்க்க முயன்றாள். எதுவும் பிடிபடவில்லை. கேதாரத்தின் உயரமும், அதற்கேற்ற உடற்கட்டும், முகத்தின் அழகும் காரணமாக இருக்க முடியுமா? கேள்வி பிறந்த மறுகணமே அவள் கண்முன் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் தோன்றினார்கள். தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், பார்த்துப் பேசியவர்கள் கல்லூரியில் படித்தவர்கள், இளம் ஆசிரியர்கள், இன்னும் எத்தனையோ பேர். இவர்களில் எவ்வளவோ பேர்கள் நிற அழகிலும், உடற்கட்டின் வசீகரத்திலும், பார்வையின் விசேஷத்திலும் — கேதாரத்தைத் தூக்கி அடித்தார்கள். அவர்களில் ஒருவனைக்கூட அவள் மனத்தாலும் தொட்டுப் பார்த்ததில்லை. கேதாரம் மட்டும் எப்படி அவளிடம் ஒட்டிக் கொண்டான்? சின்ன வயதில் பெரிய பதவியை வகிக்கிறான், கை நிறைய சம்பளம் வாங்குகிறான் என்ற காரணமா? இதுவும் இருக்க முடியாது என்று தோன்றியது. எத்தனையோ பேர் லட்சாதிபதிகளாக இருக்கிறார்கள். 'என்கொயரி'யில் வேண்டுமென்றே, அவசியத்தையும் மீறி நின்று அவளுடன் பேச்சுக் கொடுக்கிறார்கள். ஒருவரைக்கூட அவள் நினைத்துப் பார்த்ததில்லையே?

புரண்டு புரண்டு படுத்துப் படுத்து அலுத்த அவள் கட்டிலை விட்டு எழுந்து விளக்கைப் போட்டாள்.

மணி பத்தரை.

என்ன செய்வது என்று தெரியவில்லை. புத்தகத்திலும் மனம் செல்லவில்லை. படுக்கை கொள்ளவில்லை.

மெதுவாக அறையை விட்டு வெளியில் வந்தாள். தங்கை, தம்பிகள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அடுத்த அறையிலிருந்து அப்பாவின் குறட்டை ஒலி இரைந்து வந்தது.

அம்மா இருக்கும் அறையை மங்களா அடைந்தாள். விளக்கு எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அம்மாவைக் காணோம். மெதுவாகச் சமையலறையை நோக்கி நடந்தாள். சாதாரணமாக அம்மா எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொண்டு பத்து மணிக்குத் தொடர் கதைகள் படிக்க ஆரம்பிப்பாள். நாலைந்து வாரப் பத்திரிகைகளில் வரும் எல்லாத் தொடர்கதைகளையும் படிக்கா விட்டால் அம்மாவுக்கு ஜன்ம சாபல்யம் கிடைக்காதோ என்று தோன்றும்.

அந்த அம்மா சமையலறையில் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாள்?

நுழைந்ததுமே ஆப்பிளின் இனிய மணம் அவளைக் கவர்ந்தது. கேதாரம் வாங்கிய ஆப்பிள்.

"யாருடீ, மங்காவா?"

"ஆமாம், அம்மா." சொல்லிக் கொண்டே வலை அலமாரியின் மேல் இருந்த பழக் கூடையை நோக்கிச் சென்றாள்.

"நீ இன்னும் தூங்கலியா?"

"ஊஹூம்... நீ?"

"பார்க்கிறாயே, தெரியலையா?" சங்கரி அடுப்புத் திண்ணைத் துடைத்து விட்டு, கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். "ஏன் தூங்கலை?"

"வரலை."

"ஏன்?"

"தெரியாது."


"உங்க அப்பாவுக்கு எதிலுமே ஓர் அவசரம்" என்றாள் சங்கரி.

"ஏன்?" மங்களா ஓர் ஆப்பிளை எடுத்தாள்.

"கத்தி அலமாரிக்குள்ளே இருக்கு... நாளைக்கு அவனைச் சாப்பிடச் சொல்லியிருக்கிறார். மணியும் வேறு வரான்."

"இதிலே என்ன அவசரத்தைக் கண்டு விட்டாய்?" கத்தியால் ஆப்பிளை நறுக்க ஆரம்பித்தாள் மங்களா.

"வீட்டிலே கறிகாய் ஒண்ணும் கிடையாது. பாகவதம் கேட்கப் போனாரே... வர்ற வழியிலே ரங்கநாதம் தெருவிலே




தறியிலிருந்து
நேராகக்
காட்சியறைக்கு
வந்திருக்கும்
பட்டுப் புடவைகள்
அற்புதமான பட்டின் மீது
அபாரமான விலை பேரம்!
10% தீபாவளி விசேடத்
தள்ளுபடியைத் தவிர 10%
முதல் 15% வரையில்
கூடுதல் தள்ளுபடி.
கோ-ஆப்டெக்ஸ்
இந்த அதிசயத்தை
எப்படிச் செய்கிறது?
உருவாகும் சரக்கு முதல்நிலைச்
சங்கங்களிலிருந்து நேராக மாநிலக்
கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனை
இடத்தை அடைந்து, வாடிக்கை
யாளர்களுக்குக் கிட்ட புதிய,
விறுவிறுப்பான, சிறந்ததொரு வழி
கண்டிருக்கிறது. இதுவே ரகசியம்!
மிக எளிய வழி; ஆயினும், மிக அதிக
விலைச் சிக்கனம்.
கிடைக்கும் இடங்கள்:
கோ-ஆப்டெக்ஸ்
ஷோரூம்கள்:
லஸ், காமதேனு
மற்றும் தி-நகர்.
Criterion Co 2637 TM

நின்னு வாங்கிண்டு வரப்படாது?...இந்தச் சனியன் எட்டு மணிக்கு முன்னாடி வந்து தொலைச்ச மாட்டான்.''

''வத்தல் குழம்பு வை...''

''எனக்கு எதுக்குடீ இத்தனை ஆப்பிள்?... நீ சாப்பிடு...என்ன சொன்னே வத்தல் குழம்பு வைக்கலியா...இப்போ சொல்லுவே... கலத்திலே போடற போது வாயைக் காட்டுவே.''

''மூர்மார்க்கெட்டிலே ஒரிரண்டு கடையிலே ஆறு மணிக்குக் கறிகாய் கிடைக்கும்.''

''நீ பையை எடுத்துண்டு போறியா?''

''போறேன். என்ன செய்யறது?''

ஒரு துண்டு ஆப்பிளை அவள் மென்று தின்னும்வரையில் காத்திருந்த சங்கரி, ''மங்களா!'' என்றாள்.

''என்ன அம்மா?''

''என் அண்ணா பிள்ளை பம்பாயில் எங்காவது இருக்கான் என்று கேதாரத்தைக் கொண்டு தேடச் சொல்லலாம்னு இருக்கேன். நீ என்ன சொல்லறே?''

''நல்ல யோசனை அம்மா.. பம்பாய் சின்ன ஊர். ஏழெட்டுத் தெருக்கள்தான் இருக்கு. என் மாமா பிள்ளை ஏதாவது ஒரு தெருத் திண்ணையில்தான் அத்தை பெண்ணை நினைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பான். நல்ல யோசனை... சாப்பிட வரும்போது சொல்லு.''

சங்கரிக்குக் கோபம் வந்தது. ''பம்பாய் பெரிய நகரம்னு எனக்கும் தெரியும்டீ. ஆனால் நம்ப மனுஷாள் இருக்கிற இடம் சின்னதுதான். மாதுங்கா, செம்பூர் இங்கே தேடினால் போதுமே?''

''சரி, தேடட்டும், என் மாமா பிள்ளையைக் கண்டுபிடிக்கிறார் என்றே வைத்துக் கொள்ளுவோம். அப்புறம் என்ன?''

''அப்புறம் என்ன? அப்புறம் உனக்கு வயசாகலியா?''

''ஆச்சு, ஆச்சு... வயசு ஆச்சு... ஆனால் அதுக்காகக் காணாமற் போன உன் அண்ணா பிள்ளையை வலை போட்டுத் தேடிப் பிடிச்சு அவன் கழுத்திலே என்னைக் கட்டிப் போடணுமா?''

''அவனுக்கு என்னடீ குறைச்சல்? பதினைஞ்சு வயசிலே ராஜ குமாரன் மாதிரி இருந்தான்.''

''இப்போ சக்கரவர்த்தி மாதிரி இருப்பான்... நான் இன்னொரு ஆப்பிள் சாப்பிடப் போறேன்.''

''உனக்கு எப்பவுமே இந்தத் தூக்கி எறிஞ்சு பேசற சுபாவம்தான். நான் என் அண்ணாவுக்குச் சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிறேன்.''

''இந்தக் காலத்திலே ஏதாவது ஒண்ணு இல்லைன்னா அது சத்தியம்தான் அம்மா. அதுவும் நம்ப தேசத்திலே சத்தியத்துக்கு இப்போ மதிப்பே கிடையாது... இன்னொரு விஷயம்... உனக்குப் புரியல்லைன்னா, இப்போ புரிஞ்சுக்கோ... நான் என் மாமா பிள்ளையை அவன் இப்போ மன்மதனாக, கோடீசுவரனாக இருந்தாலும் கலியாணம் பண்ணிக்கொள்ள மாட்டேன்.''

சங்கரி ஒரு கணம் அயர்ந்து போனாள்.

''ஏண்டீ, ஏன்?''

''மாட்டேன், அவ்வளவுதான். காரணம் தெரிவானேன்?''

''அதையும் தெரிஞ்சுக்கிறேன், சொல்லு... நீயும், அந்த மேரி பலராமன் பின்னாலே போன மாதிரிப் போய்க் கொண்டிருக்கிறாயோ?''

''மேரி என்னிக்குமே பலராமன் பின்னாடிப் போகலை. அந்த முட்டாள் தான் இவள் பின்னாடி நிழலைப் பிடிச்சுண்டு தொங்கினான்.''

''உன் கதை என்ன? அதைச் சொல்லு.''

''நீ நினைக்கிற மாதிரி எதுவும் கிடையாது.''

''சரி, போ... தூங்கு. உனக்கு வயசு வந்துட்டதனாலே, நீ நாலு காசு சம்பாதிக்கிறே என்கிறதனாலே, உனக்குச் சுதந்திரம் இருக்குன்னு மனப்பால் குடிக்காதே... நாங்கதான் உன் கலியாணத்தை நிச்சயம் செய்து நடத்தப் போகிறோம். இதை நன்னா ஞாபகத்திலே வைச்சுக்கோ.''

மங்களா காதில் ஏதும் ஏறவில்லை. அவள் நகர்ந்தாள்.

''இந்த இரண்டு துண்டு ஆப்பிளை நீ சாப்பிட்டுவிடு அம்மா... வயிறு தெரியாம நறுக்க ஆரம்பிச்சுட்டேன்.''

* * *

திங்கட்கிழமை.

வழக்கத்துக்குப் பத்து நிமிடங்கள் முன்பாகக் காரியாலயத்தை அடைந்த மங்களா பம்பாய் கவுண்டரில் அன்று யார் டியூட்டி என்ற விவரத்தை அறிந்து கொள்ள சீஃப் புக்கிங் கிளார்க் இருக்கும் இடத்தை நோக்கி நடந்தாள். அவளைக் கண்டதும், சீஃப் புக்கிங் கிளார்க் ரங்காச்சாரி சிரித்தார்.

''குட்மார்னிங் சார்...என் என்னைப் பார்த்ததும் சிரிக்கிறீர்கள்?''

''குட்மார்னிங்... குட்மார்னிங்...''

மங்களா ரிஜிஸ்தரைப் புரட்டிக் கொண்டே: ''என்ன ரொம்ப மகிழ்ச்சியா இருக்கிறீர்கள்? என்ன விசேஷம்?'' என்று கேட்டாள்.

''நீ முதலிலே உட்காரு...''

''பம்பாய் கவுண்டரிலே இன்னிக்கு யார் டியூட்டி?''

''அமிர்தம் இன்னும் வரலியா?''

''அமிர்தமா..... ரொம்ப நல்லதாப் போச்சு...'' ரிஜிஸ்தரைத் தொப்பென்று மேப்பாயின் மேல் போட்டுவிட்டு 'நான் வரேன் சார்' என்று கிளம்பினாள்.

''முதல்லே உட்காரு. மங்களா, நான் ஏன் சிரிச்சேன்னு கேட்டாயே, பதில் வேண்டாமா?''

மங்களாவின் மனமே அலாதி. யாராவது அவளைப் பற்றிக் கேலியாகப் பேசினாலோ சிரித்தாலோ அசாத்தியக் கோபம் வந்து விடும். ஆனால் இன்று ரங்காச்சாரியின் சிரிப்பு அவளுடைய கண்ணுக்குத் தெரிந்ததே தவிர, மனத்தைத் தொடவில்லை. அவளுடைய போக்கு அவளுக்கே ஆச்சரியமாக, ஏன், ஒருவித ஏமாற்றமாகக் கூட இருந்தது. கேவலம், முந்தின நாள் காலை ஐந்தே முக்கால் மணிக்குச் சந்தித்த ஒருவன் அவளுடைய போக்கையே மாற்றுகிறானே. யார் அவனை பம்பாயிலிருந்து வரச் சொன்னது? அவளுடைய காதல் பாதையை வகுக்க வந்திருக்கும் விதியா?

அவள் இயந்திரமாக உட்கார்ந்தாள்.

''நீ 'மூடு'ல் இல்லே. ஏதோ ஒண்ணு உன் மனசை அரிச்சண்டிருக்கு'' என்றார் ரங்காச்சாரி.

''ஒன்றுமில்லே... சும்மா சொல்லுங்கள்.''

''நேத்து ஞாயிற்றுக் கிழமைதானே? எனக்கு ஓய்வு. பதினொரு மணிக்குக் கோதண்டு 'மெஸ்'ஸிலே சாப்பிட்டுவிட்டுத் திரும்பினேன். கோதண்டு மெஸ்ஸிலே ஞாயிற்றுக் கிழமைகளிலே வெங்காய சாம்பார், உருளைக் கிழங்கு பொடிமாஸ், பாயசம் எல்லாம் உண்டு. 'குசேலன், கிருஷ்ணர் மாளிகையிலே சாப்பிட்ட மாதிரி சாப்பிட்டேன். நடக்க முடியலே. இருந்தாலும் நடந்தேன். அறைக்கு வந்ததும் ஆல் பர்பஸ் ஃபானைப் போட்டுண்டு நாலு மணி வரை தூங்கணும். அப்புறம் கும்பகோணம் ஹோட்டலுக்குப் போய்ப் பாதாம் அல்வாவும் தவலை வடையும் சாப்பிடணும். அப்புறம் வரதராஜுலு நாயுடு வீட்டுக்குப் போய்ச் சீட்டாடணும் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டிக் கொண்டே நடந்தேன்.''

மங்களாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. இந்த மனுஷன் எப்போதுமே இப்படித்தான். ஒரு சின்னஞ் சிறு விஷயத்தைச் சொல்லுவதற்குப் பூர்வாங்கமாக ஒரு பாரதமே பாடுவார். வெங்காய சாம்பாரையும் தவலை வடையையும் யார் கேட்டார்கள்?

''நடந்தேனு?'' என்றார் அவர்.

''அதுதான் நடந்தீர்களே!''

''நடந்தேன்.''

''மூணு தரம் நடந்தாச்சு.''

''நடந்தேன். அறைக்கு வந்தேன். ஜமுக்காளத்தை விரித்தேன். போர்வையை உதறி விரிப்பாகப் போட்டுக் கொண்டேன். தலையணையையும் தட்டிப் போட்டேன்.''

''ஆல் பர்பஸ் ஃபானை ஓட விடலியா?'' என்று மங்களா பொறுமை இழந்து கேட்டாள்.

''படுத்துக்கிறதுக்கு முன்னாலேதானே அதைச் செய்யணும்? தலைகாணியைத் தட்டிப் போடறதுக்கும் கதவை யாரோ தட்டுவதற்கும் சரியாக இருந்தது. கதவைத் திறந்தேன். யார்னு நீ நினைக்கிறே...?''

''நான் நினைக்கவில்லே.''

''சும்மா நினைச்சுப் பாரேன்.''

ஒரு நிமிடம் மௌனமாக அவரையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் மங்களா. உருண்டைத் தலை. அகன்ற நெற்றியில் அழகான வடகலை நாமம். காதில் வைரக் கடுக்கன்.

''கோதண்டு மெஸ் சிப்பந்தி பாக்கி சாம்பாரை ஒரு டம்ளரில் எடுத்துக் கொண்டு வந்தானு?''

ரங்காச்சாரி சிரித்தார்.

''உன் அப்பா எவ்வளவு சாது - நல்லவர். உனக்கு எப்படி இப்படித் துடுக்கு வந்தது? வந்தவன் ஆராமுதன். ஆராமுதன் யார் தெரியுமா?''

''மகாவிஷ்ணு.''


''நான் சொல்ற ஆராமுதன் மகாவிஷ்ணு இல்லே. மாமன். நட்சத்திரேயன், ஆறு மாசமா கழுத்தை அறுத்தவன். கடைசியிலே பெண்ணைப் பெத்தவனையும் இழுத்துண்டு வந்து நிக்கறான்.''




''கட்டுக் கட்டாகக் கொளுத்திப் போடச் சொல்லிட்டேன், மங்களா!''

''பட்டாகக் கட்டுங்களேயா ?''

''உம்... உங்கள் பழைய வேஷ்டி கட்டுங்களேன் !''



# பல்புகள் மாற்றுவதால் ஏற்படும் அதிகப்படி செலவை நிறுத்துங்கள். பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்திப் பாருங்கள்.

சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?
பிலிப்ஸ் TL வாங்குங்கள்.
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்.

பிலிப்ஸ்

''பெண்ணைப் பெத்தவனையா?''

''ஆமாம்.... எனக்கு மோட்சம் கிடைக்கணும் என்றால் நான் கலியாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமாம். என் வயசு நாற்பத்தெட்டு, நாற்பத்தெட்டுன்னு அவனிடம் நானூத்தெட்டுத் தடவை சொல்லி அவனை நாற்பது தடவை விரட்டியாச்சு. எனக்கு இன்னும் இளமை இருக்கு. அப்படி ஒண்ணும் பெரிய வயசு ஆகலை என்கிறான். நேத்திக்குக் கைநீட்டி அவனை அடிச்சிருப்பேன். ஆனால் பெண்ணைப் பெத்தவன் கூட இருந்தான்.''

''அவனையும் இரண்டு மொத்து மொத்துகிறதுதானே?''

''பாவம்.... பெண்ணைப் பெற்றவர்கள் எல்லாருமே பாவம்! பெண் பெயர் என்ன தெரியுமா?''

''சோபியா லோரன்.''

''மங்கள வல்லி. இருபத்து நாலு வயசு. எட்டாங் கிளாஸிலே படிக்கிற போது அவள் அம்மா செத்துப் போயிட்டாளாம். கூடப் பிறந்ததுகளைக் கட்டி மேய்க்கிற பொறுப்பு அவள் தலையிலே விழுந்திருக்கு. அதனாலே மேற்கொண்டு படிக்கலை.''

''படிச்சிருந்தால் வேலைக்குப் போயிருப்பாள். ஆராமுதனும் உங்களுடைய தூக்கத்துக்கு யமனாக வந்திருக்க மாட்டான்.''

''அந்தப் பெண்ணோட போட்டோவை ஆராமுதன் காண்பித்தான். காது, மூக்கு, கழுத்து எல்லாம் மூளி.''

''பாவம்.''


''அவளை எனக்குக் கொடுக்க வேண்டும் என்று ஆராமுதன் வேங்கடாசலபதியை வேண்டிக் கொண்டிருக்கிறானோ என்னவோ? என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தான். ஆனால் பெண்ணுக்கு அப்பா அடிக்கடி முகத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.''

''நீங்கள் ஃபானைப் போடவேயில்லையாக்கும்!''

''போட்டால் அவன் என்படுக்கையில் படுத்துக் கொண்டு தூங்க ஆரம்பித்து விடுவானே. எப்படியாவது ஆட்கள் இடத்தைக் காலி பண்ணினால் போதும் என்றல்லவா நான் காத்திருந்தேன்?''

''உம்... அப்புறம்?''

''முழுசா ஒரு பொய்யைப் பெண்ணைப் பெற்றவரிடம் சொல்லி வைச்சேன். ஆராமுதனை நம்பினேன் என்பது அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டதிலிருந்து தெரிந்தது.''



'' பயப்படாதே! தெருவிலே எவனாவது பட்டாசு வெடிச்சிருப்பான்!''

''என்ன சொன்னீர்கள்?''

''எனக்கு ஏற்கனவே ஒரு ஹார்ட் அட்டாக் வந்தாகி விட்டது என்றும், இரண்டாவது 'அட்டாக்கு'க்காக நான், டாக்டர், புரோகிதர் எல்லோரும் காத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் ஒரு அடி அடிச்சேன். பெண்ணைப் பெற்றவன் பரிதாபமாக என்னைப் பார்த்தான். அவனுடைய உடம்புக்கு ஒன்றும் வந்து விடக் கூடாதுன்னு வேண்டிண்டேன்.''

''கதை சரி. எதுக்குச் சிரித்தீர்கள்? அதைச் சொல்லவில்லையே?''

''மங்களவல்லியில் வல்லியை எடு. மங்களம். 'ம்'ஐ அழிச்சு 'ள'வை நீட்டு. மங்களா. உன்னைப் பார்த்ததும் உன் பெயர் காரணமா நேத்து நடந்தது ஞாபகத்துக்கு வந்தது. அதுதான் சிரிச்சேன்.''

''பரவாயில்லை. உங்களை மன்னிக்கிறேன்... ஏன் நீங்கள் இப்படிப் பிடிவாதமா பிரம்மச்சாரியாகவே இருக்கிறீர்கள்?''

''இன்னமே ஏன் கல்யாணம் பண்ணிக்கொண்டு, நானும் கஷ்டப்பட்டு அவளையும் கஷ்டப்படுத்தணும்? இன்னும் பத்து வருஷங்களில் ரயில்வேக்காரன் என்னைக் கூப்பிட்டு, 'டேய் ரங்காச்சாரி, உனக்கு வயசு அம்பத்தெட்டு ஆயிடுத்து, மூட்டையைக் கட்டு' என்பான். அந்தச் சமயத்திலே சம்சார பாரம் கழுத்தை அழுத்தும்.''

''இப்போ வேண்டாம் என்கிறது சரி. ஏன் முன்பே நீங்க வேண்டாம்னு தீர்மானித்தீர்கள்?''

ரங்காச்சாரி திடீரென்று மௌனமானார். அவருடைய மௌனத்தைக் கண்டு மங்களாவுக்கு ஒரு கணம் வேதனையாகக்கூட இருந்தது. ஏன் கேட்டோம் என்று நொந்து கொண்டாள்.

''மங்களா! இத்தனை நேரம் நான் சிரிச்சுப் பேசினேன். நீ கேட்ட கேள்வி என்னை எங்கெங்கோ இழுத்துண்டு

போறது. பழசெல்லாம் கண் முன்னே நிக்கறது.''

மங்களா மெதுவாக எழுந்தாள்.

''என் வாழ்க்கையை மற்றவா சந்தோஷ வாழ்க்கைன்னு சொல்லுவா, மங்களா! ஏன்? நல்ல டெரிலின் போட்டுண்டு வரேன். தஞ்சாவூர் கதம்ப அத்தர் மணக்க மணக்க நடக்கிறேன். வாய் நிறைய, வயிறு நிறைய ருசியா சாப்பிடுகிறேன்... எதிலும் குறைச்சல் இல்லாதவன் மாதிரி நடந்து கொள்கிறேன்... ஆனா இதெல்லாம் பிறத்தியார் பார்க்கிற வாழ்க்கை. இத்தனை சிரிப்புக்கு அடியிலே ஒரு பெரிய வேதனை அஸ்திவாரமா ஆடாம அசையாம இருக்கு.. இன்னும் சொல்லப் போனால், வேதனையை என்னுடைய வாழ்க்கை முறையாலே போர்வை போட்டுப் போர்த்துகிற மாதிரி மறைச்சுண்டு வாழறேன்.''

''மன்னிச்சுடுங்க சார்.''

''ஓ... அதிருக்கட்டும்... ஒரு நாள் சாவகாசமா என் கதையைச் சொல்றேன். இருபத்தைஞ்சு வருஷங்களுக்கு முன்னாலே நடந்த கதை அம்மா அது. யாருக்கும் தெரியாத, நான் சொல்லாத கதை.''

''பரவாயில்லே சார்!''

''என் ஷர்ட்டின் கை ஏன் எப்போதும் மணிக்கட்டு வரை நீண்டிருக்கிறது தெரியுமா? நான் ஏன் எப்போதும் ஃபுல் ஹாண்ட் ஷர்ட் போட்டுக் கொள்ளுகிறேன் தெரியுமா?''

''தெரியாது சார்!''

''ஒரு நாள் சொல்லுகிறேன், மங்களா!'' — ரங்காச்சாரியின் தொண்டை கனத்து, குரல் கம்பியது.

''நான் வரேன், சார்.''

''இன்னிக்கு பம்பாய் கவுண்டரிலே அமிர்தம் இருக்கிறான்!''

''நன்றி சார்.''

மங்களா கேதாரத்தின் நினைவே அற்றவளாக நடந்தாள். சிஃப் புக்கிங் கிளார்க், வைரக் கடுக்கன் ரங்காச்சாரி ஒரு பெரிய சுமையை அவள் மனத்தில் ஏற்றிவிட்டதான பிரமை உதித்தது.

அவள் என்கொயரி கவுண்டரை அடைந்தாள். அங்கே மணி நின்று கொண்டிருந்தான். (தொடரும்)




''சார், அந்த 111ம் நம்பர் கைதி என் கிட்டே தலைதீபாவளி சீர் கேட்கிறான் சார்!''



'' மாப்பிள்ளே தலைதீபாவளிக்கு வர முடியாதபடி பண்ணிவிட்டேன்!''

'' எப்படி ?''

'' பேட்டி படுக்கையுடன் தஞ்சாவூர் ஜங்ஷனில் காத்திருந்தார். வண்டியை அங்கே நிறுத்தாமலே வேகமாக ஓட்டி வந்துவிட்டேன்!''



''ராஸ்கல்! நான் 'பேட்'டை எடுத்துக் கொண்டு மாட்சுக்காக இறங்கும் சமயம் பார்த்து ''புஸ்வாணம்'' வைக்கிறாயா ?''



''மாப்ளே! நீங்கள் கேட்ட ஸ்கூட்டரின் 'மட்கார்ட்' இதோ; சக்கரம் அடுத்தமாதம் வாங்கித் தருகிறேன்!''

- கேஷவ்.

**பண்டைகாலமாக பழனி சித்தர் வைத்தியசாலை உண்மையான முறையான நேர்மையான வைத்திய சேவை புரிகிறது!**

**வாலிப - வயோதிக - அன்பர்களே!**

**பழனி சித்தர் மருந்துகளே பாரில் உயர்ந்தது என்பது உலகம் அறிந்த உண்மை!**

---

பிரபல பழனி

வைத்திய திலகம் — வைத்திய ராஜ்



**Dr. S. காளிமுத்து**
R.M.P. (IND) V.V.C. A.M.I.H.

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து உடல் வலுவின்லாமல் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் வயோதிகரைப்போல் களைப்பு மேலிட்டு வேலைகளைச் சரிவர செய்ய இயலாமை — இதனால் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும், தெரியாமலும் செய்கிற தவறுதல்களே, இப்போது உடல் கெட்டு பலவீன மடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, மயக்கம், சோம்பல், கைகால் அசதி, பலவீனம், உடல் வலி, களைப்பு, தூக்கக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி, தாய் தந்தையரிடமும், மற்றவர்களிடமும் சொல்ல முடியாமல் மன வேதனையும் கஷ்டமும் அடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறீர்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், கவலைப்பட வேண்டாம். இம்மாதிரியான வியாதியஸ்தர்கள் 74 வருட அனுபவம் பெற்ற நமது சாஸ்திரிய முறையான மிக உயர்தரம், உயர்தரம், முதல்தரம், இரண்டாந்தரம் எதுவாகிலும் சாப்பிட்டாலே எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்தியமும் இல்லை. ஆர்டரில் தேவைப்பட்ட மருந்தின் விலைகளைக் குறிப்பிட்டு எழுதவும். வி.பி.பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும்பொழுதே பலனைக் காணலாம். வி.பி.பி. செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது. சித்த வைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பலன் தரும் என்பதை அறியவும்.

ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள்: மிக உயர்தரம் ரூ. 90
உயர்தரம் ரூ. 42. முதல்தரம் ரூ. 33. இரண்டாந்தரம் ரூ. 24.

**எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி விலாசங்கள் கவனிக்கவும்**


கிளை: 41, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை. போன்: 21448
சென்னை கிளை அபீஸில் 1 முதல் 7 தேதி மீண்டும் 15 முதல் 21 தேதி நேரில் விஜயம்.

GOVT. REGD. T. M. No. 204341 — REGD. 15443

வைத்திய திலகம் வைத்தியராஜ் டாக்டர் S. காளிமுத்து

**பழனி சித்தர் வைத்தியசாலை (K) பழனி S.I.**

போன்: 316 — (திரோட்டா ஸ்ரீ ரமகராஜ பக்கம்) — தந்தி: சித்தர்



# சட்டம் பேசுகிறது; அன்பு அழுகிறது!

ஸ்ரீரங்கம் நரசிம்மன்

'இனி என்ன?' என்ற கேள்வி மஞ்சுளாவின் சிந்தையில் அடிக்கடி தோன்றி அவளைச் செயலற்றவளாக்கிக் கொண்டிருந்தது. எந்தக் காரியத்தில் ஈடுபட முயன்றாலும் இந்தக் கேள்வி பூதாகாரமாகத் தோன்றி 'என்ன தான் செய்யப் போகிறாய்?' என்று கேட்பதைப் போலிருக்கும். பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்து விடுவாள். 'இனி என்ன செய்வது? எங்கே இருப்பது? எப்படி இருப்பது?' போன்ற கேள்விகள் திரும்பத் திரும்ப எழுந்தன. இதற்கான பதில் மட்டும் கிடைக்கவில்லை.

'போன திங்கட்கிழமை இந்த நேரமெல்லாம் அவர் இருந்தார். ஓடிவிட்டது ஒரு வாரம்!' என்று மெல்ல முணுமுணுத்தாள் மஞ்சுளா. சுவரில் மாட்டியிருந்த காலண்டரைப் பார்த்தாள். அதில் சனிக்கிழமை என்றிருந்தது. ஆறும் போன சனிக்கிழமையும் தேதியும்! அதற்குப் பிறகு தேதி கிழிக்கப்படவில்லை. போன சனிக்கிழமை இரவு அவளும் அவள் கணவன் நிரஞ்சனும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. அன்று இரவு பதினொரு மணி இருக்கும். பிள்ளையும் பெண்ணும் தூங்கி விட்டனர். மஞ்சுளாவும் படுத்து விட்டாள். நிரஞ்சன் மட்டும் ஜன்னல் அருகில் அமர்ந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நேரமாகிறதே, படுக்கல்லியா?'' என்றாள் மஞ்சுளா.

''உனக்குத் தூக்கம் வந்துடுத்தா மஞ்சு?'' என்றான் நிரஞ்சன். அவன் கேட்ட விதம் 'கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருப்போமே' என்று வேண்டுவதைப் போலிருந்தது. மஞ்சுளா எழுந்து வந்து அவனும் ஜன்னலில் உட்கார்ந்தாள். ''மனசே சரியில்லே. ரொம்பவும் குழம்பிப் போயிருக்கேன், மஞ்சு'' என்றான். அவனுடைய இந்த வார்த்தை மிகவும் வியப்பை அளித்தது. அவர்கள் திருமணம் செய்து கொண்டு ஒன்பது வருடங்களாகின்றன. கடந்த ஆறு வருஷங்களில் அவர்கள் வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்பட்டன. இன்னொரு புருஷனாயிருந்தால் பைத்தியம் பிடித்துத் தெருவில் அலைய ஆரம்பித்திருப்பான். அப்பொழுதெல்லாம் அவன் மனம் கலங்கியதில்லை; முகம் வாடியதில்லை. தைரியமாகப் போராடினான். இப்பொழுது மனம் குழம்புவதென்றால்?

''ஏன்? என்ன விஷயம்?'' என்றாள் மிகவும் கவலையுடன். சொல்லலாமா வேண்டாமா என்று யோசிப்பதைப் போலச் சில நிமிஷங்கள் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''எதற்கும் கவலைப்படக் கூடாது என்று எனக்குச் சொல்லுவீர்களே?'' என்றாள்.

''கவலைப்படக் கூடாது, மஞ்சு. கவலைப்படுவதால் பயன்?''

''இப்பொழுது மட்டும்...?''

''நான் கவலைப்படவில்லையே. என்ன செய்வது என்று புரியாமல் குழம்புகிறேன்.''

''எதற்கு?''

''பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு நாள் இதுபோலவே நான் உட்கார்ந்திருந்தேன். இந்த ஜன்னலுக்குப் பக்கத்தில் சாய்வு நாற்காலியில் அப்பா உட்கார்ந்திருந்தார். ஏதேதோ பேசிக்கொண்டிருந்தவர்



இந்தச் சிறு வீட்டை வாங்குவதற்கு அவர் பட்ட கஷ்டங்களை யெல்லாம் கூறினார். பிறகு 'டேய்! எந்தக் காரணத்துக்காகவும் இந்த வீட்டை விற்றுவிடாதே! இதன் பேரில் கடனும் வாங்காதே. உன் 'காலம் முழுதும் நீ இந்த வீட்டில்தான் இருக்க வேண்டும். நீ எனக்குக் கொடுக்கும் திவசம் இந்த வீட்டில்தான் நடக்கணும். அப்பொழுது தான் வருஷத்துக்கு ஒரு நாளாவது என் ஆத்மா இந்த வீட்டைச் சுற்றி வரும். உனக்குப் பிறகு உன் பிள்ளைகள் வீட்டைக் காப்பாற்றினாலும் சரி, தொலைத்தாலும் சரி; உனக்குப் பிறகு எனக்கு யார் திவசம் கொடுக்கப்போகிறார்கள்?' என்றார்...... இதைச் சொன்ன ஒரு வாரத்துக்கெல்லாம் திடீரென்று அவர் காலமாகி விட்டார்!...''என்று நிரஞ்சன் தந்தையை நினைத்து ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

''அதற்கென்ன இப்பொழுது?''

''இன்னும் மூன்று நான்கு தினங்களில் இந்த வீடு ஏலம் போகப் போகிறது.''

அதிர்ச்சி யடைந்தவள் போல் அவனைப் பார்த்தாள் மஞ்சுளா. இந்த நிலைக்குத் தான்தான் காரணம் என்று அவளுக்குத் தெரியும். அவர்களுடைய இரண்டாவது குழந்தை பிறந்ததிலிருந்து ஒன்று மாற்றி ஒன்றாக மஞ்சுளா பல நோய்களுக்கு ஆளாகி நான்கு வருஷ காலம் மருந்தும் மாத்திரைகளும் சகஜமாகப் படுக்கையை விட்டு எழுந்திருக்காமல் இருந்தாள். மூன்று முறை அறுவைச் சிகிச்சை நடந்து இருமுறை மரணத்தைத் தழுவ முயன்று தப்பினாள். அவளைச் சாகாமல் காப்பாற்ற நிரஞ்சன் பட்ட பாடு...அப்பப்பா! இன்னொரு கணவனாயிருந்தால் இப்படி ஒரு வியாதிக்காரியைக் கட்டிக் கொண்டோமே என்று அலுத்துக் கொண்டிருப்பான். மனைவியிடம் வெறுப்பைக் காண்பித்திருப்பான். ஆனால் நிரஞ்சன் ஓர் உண்மை பக்தன். தன் தெய்வத்துக்குச் செய்யும் கைங்கரியத்தைப் போல் மஞ்சுவுக்கு வைத்தியமும் சிசுருஷைகளும் செய்தான். வீட்டில் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டான். வேலைக்கும் போய் வந்தான். செலவுதான் கட்டுக்கடங்காமல் போய்க் கொண்டிருந்தது. இவ்வளவுக்கும் பணம்? கடன்!

சிறுகச் சிறுகப் பல இடங்களில் வாங்கினான். அதை அடைக்கப் பெருந் தொகையாக வாங்க நேர்ந்தது. அப்பொழுதும் பணம் போதவில்லை. வீட்டின் மீதும் கடன் வாங்கினேன்.

''வீட்டின்மீது கடன் வாங்கியிருப்பதாகச் சொல்லவே யில்லையே?'' என்றாள் மஞ்சு.


''நான் வீட்டை அடமானம் வைக்கும் போது நீ உணர்வே இல்லாமல் கிடந்தாய். ஒரு வாரத்துக்குள் மறுபடியும் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டுமென்று கூறினார் டாக்டர். அறுவைச் சிகிச்சையைத் தாங்கும் சக்தி உனக்கு ஏற்படத்தான் காத்திருந்தார். கையில் பணமில்லை. உதவிக்கு ஆள் இல்லை. அப்பொழுது இரண்டாம் முறையாக உன் அப்பாவைப் பார்க்கச் சென்றேன்... முதல் தடவை உன் யோசனையின் பேரில் அவரைப் பார்க்கச் சென்று அவமானப்பட்டுத் திரும்பினேன். இரண்டாம் முறை நானாகச் சென்றேன்...'' என்றான் நிரஞ்சன்.

''அப்பாவைப் பார்த்தீர்களா?''

''அவரைப் பார்க்கச் சென்றேன். ஆனால் அவர் பேட்டி கொடுக்கவில்லை. தமது குமாஸ்தாவிடமே பதில் சொல்லி அனுப்பி விட்டார்!...''

''என்ன சொன்னார்?''

''அதைக் கேட்கணும்னு ஆசையாயிருக்கா? 'பத்து வருஷங்களுக்கு முன் எனக்குப் பிடிக்காதவனைத் திருமணம் செய்து கொண்ட போதே என் பெண் என்வரையில் இறந்து விட்டாள். இப்பொழுது சாகக் கிடப்பது எவனோ ஒருவனின் மனைவி; அவளைப் பிழைக்க



வைப்பதோ, சாக அடிப்பதோ அவன் பொறுப்பு. நான் எந்த விதமான உதவியும் செய்ய முடியாது. ஒருவேளை அவன் இறந்து விட்டாலும் எனக்குத் தெரியப்படுத்த வேண்டியதில்லை...' என்று சொல்லி அனுப்பினார்.'' இவ்வாறு கூறிய நிரஞ்சன் சில நிமிஷங்கள் மௌனமாயிருந்தான். மஞ்சுவின் விழிகளில் நீர் திரையிட்டது. உன்னை எப்படியும் பிழைக்க வைத்துவிட வேண்டும். பணமில்லை என்ற காரணத்தால் பெற்றவரும் கைவிட்ட நீ அநாதை போலச் சாகக் கூடாது என்றொரு வேகம் என்னைப் பரபரக்கச் செய்தது. பணத்துக்கு ஒரே வழி — வீட்டை அடமானம் வைப்பதுதான்! அதுவும் அந்த அவசரத்தில் குறைந்த வட்டியில் கொடுப்பவர்களையோ, உபகாரச் சிந்தையுடன் கடன் கொடுப்பவர்களையோ என்னால் தேடிக் கொண்டிருக்க முடியவில்லை. மார்வாடியிடம் பணம் வாங்கினேன். குறிப்பிட்ட தவணைக்குள் கடனைத் திருப்பாததால் கோர்ட்டுக்குப் போய்விட்டான். விசாரணை தினங்களுக்கு நான் போகாததால் நான் இல்லாமலே அவன் போட்ட தொகைக்குத் தீர்ப்பாகி விட்டது. இப்பொழுது வீட்டை ஏலத்துக்குக் கொண்டு வர மனுச் செய்திருக்கிறான். எப்படியும் இரண்டு மூன்று தினங்களில் அமீனாவுடன் வந்து விடுவான்....'' என்றான் நிரஞ்சன்.

சில நிமிஷங்கள் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் உட்கார்ந்திருந்தாள் மஞ்சு. பிறகு ''ஏலத்தை நிறுத்தி வைக்க முடியாதா?'' என்று கேட்டாள்.

''எப்படி முடியும்? ஓரளவாவது பணம் கட்டினால் கெஞ்சிக் காலில் விழுந்து கேட்டுப் பார்க்கலாம். பணத்துக்கு எங்கே போவது? ஆபீஸிலும் கடன்; வெளியிலும் கடன்; குடும்பம் நடத்துவதே பிரம்மப் பிரயத்தனமாக இருக்கு... கடன் இருப்பதைப் பற்றியோ, கஷ்டப்படுவதைப் பற்றியோ நான் கவலைப் படவில்லை. அப்பாவின் ஆசையைப் பூர்த்தி செய்ய முடியவில்லையே என்ற வேதனைதான்... 'இந்த வீட்டில் நீ எனக்குத் திவசம் கொடுத்தால்தான் என் ஆத்மா அதை ஏற்றுக்கொள்ளும்' என்றார். இனி அவருக்கு நான் எங்கே திவசம் கொடுப்பது?'' என்ற நிரஞ்சனின் குரலில் ஆழ்ந்த வேதனை நிறைந்திருந்தது.

அதன் பிறகு நிரஞ்சனும் மஞ்சுவும் வெகு நேரம் பேசினார்கள். பயங்கரமாக எதிர்நோக்கி யிருக்கும் பிரச்னைகளைச் சமாளிக்க என்ன வழி என்று யோசித்தார்கள். கடைசியில் நிரஞ்சனின் யோசனையை அவளும் ஏற்றுக்கொண்டாள்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. முதல் நாள் இருந்த கவலையோ வேதனையோ துளியும் இல்லாமல் சகஜமாகத் தோன்றினான் நிரஞ்சன். அன்று எல்லோரையும் வெளியில் அழைத்துச் சென்றான். பணத்தைக் கொஞ்சம் தாராளமாகவே செலவழித்தான். மஞ்சுவும் அவனுடன் எல்லா இடங்களுக்கும் சென்றாள். அவன் வாங்கிக் கொடுத்ததை யெல்லாம் குழந்தைகளுடன் தானும் ஒரு குழந்தையாகச் சாப்பிட்டாள். சிரித்தாள், பேசினாள். ஆனால், உண்மையான கலகலப்பில்லாமல் இருந்தாள்.

திங்கள் கிழமை மாலை எதற்கோ அவசரமாக வெளியில் சென்ற நிரஞ்சன் வீடு திரும்பவில்லை. நடைபாதையில் நடந்து கொண்டிருந்த அவன்மீது குடிபோதையில் இருந்த ஒரு டிரைவர் செலுத்தி வந்த பஸ் ஒன்று ஏறிவிட்டது. நிரஞ்சன் அந்த இடத்திலேயே பிணமானான்!

அது ஒரு தனி நபரின் பஸ். அதன் முதலாளிக்குப் பல 'ரூட்'களில் பஸ்கள் ஓடிக் கொண்டிருந்தன. லாரிகளும் இருந்தன. விஷயம் தெரிந்ததும் முதலாளியே ஸ்தலத்துக்கு வந்து பார்வையிட்டார். அப்பொழுதும் டிரைவர் போதை தெளியாமல் உளறிக் கொண்டிருந்தான். போலீஸ் வந்தது. டிரைவரைக் கைது செய்தார்கள். நிரஞ்சனின் உடலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள்.

ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பவும் சவத்தை வாங்கி அதை அடக்கம் செய்யும் வரை முதலாளியே முன்நின்று எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டார். மஞ்சுவுக்கு எவ்வளவோ ஆறுதல் கூறினார். மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். போகும்போது இரண்டு நூறு ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்துவிட்டுத் திரும்பவும் நான்கு தினங்களில் வந்து சந்திப்பதாகச் சொல்லிச் சென்றார். நாட்கள் ஒன்று இரண்டென்று ஓடி விட்டன. இன்னொரு திங்கட்கிழமைக்கு இன்னும் ஒரு நாள் இருந்தது.

அவள் ஒன்றும் புரியாமல் நிரஞ்சனின் போட்டோவைப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள்.

''அம்மா! யாரோ வந்திருக்காங்கம்மா..'' என்று பிள்ளை சொல்லவே திரும்பிப் பார்த்தாள். அவளைப் பெற்ற தந்தை நின்றுகொண்டிருந்தார். 'ஐயோ! அப்பா!' என்று அவரைக் கட்டிக்கொண்டு கதற வேண்டும்போல் துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. ஆனால், வாயடைத்த மரம் போல் நின்றாள். விழிகளிலிருந்து தாரை தாரையாக நீர் பெருகிக் கொண்டிருந்தது. கொதித்துக் கொண்டிருந்த அவள் வயிறு இன்னும் ஜ்வாலை விட்டு எரியத் தொடங்கியது. 'இங்கு ஏன் வந்தீர்கள்? என் அவல நிலையைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்க வந்தீர்களா?' என்று கத்த வேண்டும் போலிருந்தது. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு கட்டை போல் நின்றாள். அவள் தந்தை மஞ்சுவின் பிள்ளையையும் பெண்ணையும் மாறி மாறிப் பார்த்தார். அவர் பார்வையில் ஓர் அலட்சியம் தான் இருந்தது.


''ஏதாவது இன்ஷ்யூர் செய்திருக்கானா?'' என்றார் மஞ்சுவைப் பார்த்து.

''தெரியாது!'' என்றாள்.

''எங்கே செய்திருக்கப் போகிறான்? பொறுப்பில்லாதவன்!...'' என்றார் குரலில் சிறிது வெறுப்புடன்.

''பொறுப்புள்ளவர் லட்சணம்தான் தெரிகிறதே!... மாப்பிள்ளை செத்து ஆறு நாள் கழித்துத் துக்கம் கேட்க வந்திருக்கீங்களே!'' என்றாள் கடச் கட.

''நான் துக்கம் கேட்க வரல்லியே! அவனை என் மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டிருந்



ஒலிஜாலங்களின் நாத வெள்ளத்தில்
நீந்தித் திளையுங்கள்!
தேர்ந்தெடுக்க
உன்னதமான
4 ரேடியோக்கள்...
REMCO கெய்ஷா
அனுராக்
REMCO
ரெம்கோ
ரேடியோக்கள்
ஒலி நயத்தில்
புதுமையைப் புகுத்துபவை.
ரேடியோ அண்ட் எலக்ட்ரிகல்ஸ்
மேன்யூ :பேக்சரிங் கோ லிட்.,
மைசூர் ரோடு, பெங்களூர்

தால் அல்லவா இப்பொழுது துக்கம் விசாரிக்க?'' என்றார்.

மஞ்சுவுக்குப் 'படபட'வென்று வந்தது. 'இப்பொழுது எதற்காக வந்தீர்கள்?' என்று கேட்பதைப் போலப் பார்த்தாள். அவரும் அதைப் புரிந்து கொண்டார்.

''இதுகளை வைத்துக் கொண்டு எப்படிக் காலம் தள்ளப் போகிறாய்?'' என்று கேட்டவாறு மஞ்சுவின் இரண்டு செல்வங்களையும் விழிகளால் காட்டினார். ஒரு நிமிஷம் அவரை வெறித்துப் பார்த்தாள் மஞ்சு.

''பிள்ளையை ஒரு தெருவுக்கும் பெண்ணை ஒரு தெருவுக்கும் கையில் சொம்பைக் கொடுத்து அனுப்பப் போகிறேன்!'' என்றாள் வயிற்றெரிச்சல் தீர.

''பிச்சை எடுக்கவா?''

''நாதியற்றவர்கள் வேறு என்ன செய்ய முடியும்?''

''தாய் தகப்பனைப் பகைத்துக் கொண்டு அவர்களுக்குப் பிடிக்காதவனை மணந்து கொள்பவர்களின் கதி யெல்லாம் இதுதான்!...''

''உங்கள் சாபம்தான் அவரைக் கொன்று விட்டதா?''

''என்றைக்கு என் பேச்சைக் கேட்காமல் அவனை மணந்துகொண்டாயோ அன்றைக்கே உனக்குத் தலை முழுகிவிட்டேனே; அப்புறம் நான் ஏன் சாபம் கொடுக்கப் போகிறேன்?''

இந்தக் கசப்பான சம்பாஷணைக்குப் பிறகு இரண்டு நிமிஷம் யாருமே பேசவில்லை. பிறகு ''சரி; நான் வந்த காரணத்தைச் சொல்லுகிறேன்: உன் புருஷனைக் கொன்ற பஸ்ஸை ஓட்டி வந்த டிரைவர் குடி போதையில் இருந்தான் என்பது நிரூபணமாகி விட்டது. ரஸ்தாவை விட்டுப் பாதையோரத்துக்குச் சென்று நடைபாதையில் சென்று கொண்டிருந்தவன் மீது வண்டியை ஏற்றியிருக்கிறான். இரண்டு குழந்தைகளுக்கும் உனக்குமாக ஐம்பதாயிரம் ரூபாய்க்கு நஷ்டஈடு கோரி வழக்காடலாம். முப்பதாயிரம் ரூபாயாவது கிடைக்கும். பஸ் கம்பெனிக்காரன் வந்து ஆயிரம் இரண்டாயிரம் கொடுப்பதாகச் சொல்லி ஆசை காட்டுவான். வாங்கி விடாதே. எனக்குத் தெரிந்த வக்கீல் ஒருவர் இதுமாதிரி வழக்குகளில் மிகவும் கெட்டிக்காரர். அவரிடம் சொல்லி வைக்கிறேன்...'' என்றார்.

''நீங்களே வக்கீலாச்சே?'' என்றாள் மஞ்சு.

'இண்டலம் செய்கிறாயா?' என்பதைப் போல அவளைப் பார்த்துவிட்டு, ''நானெக்கு வக்காலத்து பாரம் வாங்கி அனுப்புகிறேன், கையெழுத்துப் போட்டு அனுப்பு...'' என்றார். அவர் சொல்லி முடிப்பதற்கும் பஸ் கம்பெனி முதலாளி உள்ளே வருவதற்கும் சரியாக இருந்தது. வந்ததும் அவரே பேச ஆரம்பித்தார். ''அம்மா! உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்துக்கு யாராலும் ஈடு செய்ய முடியாது. இருந்தாலும் என் கடமை ஒன்றிருக்கிறது. இந்தாருங்கள், இதை வைத்துக்கொள்ளுங்கள். இதில் பத்தாயிரம் ரூபாய் இருக்கிறது. பின்னால் எந்த விதமான உதவி தேவையானாலும் செய்யக் காத்திருக்கிறேன்...'' என்று மிகவும் பரிவுடனும் பணிவுடனும் கூறினார்.

''ஐம்பதாயிரம் ரூபாய்க்கு வழக்குப் போடப் போகிறோம். இந்த ரூபாயை நீங்களே எடுத்துப் போங்கள்!'' என்றார் மஞ்சுளாவின் தந்தை.

''ஐயா! நான் வழக்காடப் போவதுமில்லை, ஒன்றுமில்லை. என் கணவருடைய உயிருக்கு விலை பேசத் தயாராயில்லை. அதற்கு விலையே கிடையாது. நீங்கள் இந்தப் பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். முடிந்தால் ஒரே ஒரு உதவி செய்யுங்கள். இந்த வீட்டின்மீது என் கணவர் கடன் வாங்கி யிருக்கிறார்.

---

## சஸ்பென்ஸோ சஸ்பென்ஸ்!

எவ்வளவோ தொடர்கதைகள் படிக்கிறோம். அநேகமாக ஒரு சஸ்பென்ஸுடன் தொடரும் போடுபவர்கள்தான் அதிகம். அடுத்த வாரத் தொடக்கம் சஸ்பென்ஸை அவிழ்க்க முடியாமல் காமா சோமா என்று ஆரம்பமாகி யிருக்கும். அவர்கள் பாணியில் நான் தொடர்கதை எழுதினால்....?

### சென்ற வாரம்

1. லலிதாவின் இன்ப நினைவுகள் மனத்திரையில் உலவிவர 'அவள் இந்நேரம் வீட்டில் இருப்பாள்; சந்திக்கலாம்' என இனிக்கும் எண்ணத்துடன் லலிதாவின் வீட்டுக் கதவைத் தட்டினான் ராஜா. ''யாரது?'' என்று கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தாள்.... (தொடரும்)

2. லீலாவுடன் பார்க்கின் பசும்புல் தரையில் அமர்ந்த விச்சுவுக்கு அப்படிப் புல்லரித்தது ஏனோ? (தொடரும்)

3. பிறந்த நாள் பரிசாகக் கணவன் வாங்கிக் கொடுத்த பதக்கம் இணைந்த சங்கிலியை அணிந்து கொண்டாள் அவள். ''800 ரூபாய் விலையாகும் இந்தச் சங்கிலி'' என்று கணவன் கூறியது காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. கண்ணாடி முன் அழகு பார்த்துக் கொண்டிருந்த அவள் முகம் அவ்விதம் விகாரமடைந்தது ஏன்? (தொடரும்)

4. மாதங்கினி சொன்ன செய்தி என்னவோ நற்செய்திதான். ஆனால் பராக்கிரம வர்மனின் தோள்கள் நிலைவெடித்தன. (தொடரும்)

(இந்த வாரத் தொடர்ச்சியை 54ம் பக்கம் பார்க்க)

---

வட்டியும் முதலுமாகக் கட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய் ஆகியிருக்கிறது. இரண்டொரு நாட்களில் வீட்டை ஏலத்துக்குக் கொண்டு வரப் போகிறார்களாம். அதுதான் அவருடைய கடைசிக் கவலை. இந்த வீடு ஏலம் போகாமல் பார்த்துக் கொண்டால் அதுவே நீங்கள் செய்யும் பெரிய உபகாரம்...'' என்று கண் கலங்கக் கைகூப்பி வேண்டினாள் மஞ்சு.

''கவலைப்படாதீர்கள் அம்மா. அந்தக் கடனை நானே பைசல் செய்கிறேன்....இந்தப் பணத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்...'' என்றார் முதலாளி.

## இந்த வாரம்

1. கதவைத் திறந்தாள். லலிதாவின் கொள்ளுப் பாட்டி. லொக்குலொக்கு இருமல்!



2. அவன் உட்கார்ந்தது கோரைப் புல்லின்மேல். அந்தப் ''புல்''தான் அவனை ''அரித்தது.''



3. அந்தப் பதக்கத்தின் மேல் பூட்டிக் கொண்டிருந்த பொன் முலாம் உரிந்து போய் உள்ளே இருந்த பித்தளை தெரிந்தது. 800 ரூபாய் தங்கச் சங்கிலி 8 ரூபாய் பித்தளைச் சங்கிலியானால் முகம் விகாரமடையாமல் என்ன செய்யும்?



4. சட்டைக்குள் கொள்ளி எறும்பு இருந்ததைக் கவனிக்காமல் மாதங்கினியைப் பார்க்க மாட்டிக் கொண்டு வந்து விட்டான். உள்ளிருந்தபடியே அது தோளைக் கடித்துக் கொண்டிருந்தால் தோள் இனி வெடிக்காமல் என்ன செய்யும்?

- என். பு. ராகவன்

''தேவையில்லை. நாங்கள் வழக்குப் போடத்தான் போகிறோம்'' என்றார் கண்டிப்புடன் மஞ்சுவின் தந்தை.

''நீங்கள் வழக்குப் போட வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. வழக்குப் போடுங்கள். கோர்ட்டில் தீர்ப்பாகும் தொகையைத் தரவும் தயாராயிருக்கிறேன். அதற்கும் இந்தப் பணத்துக்கும் சம்பந்தமில்லை'' என்று மஞ்சுவைப் பார்த்துச் சொன்னார் பஸ் முதலாளி.

''வழக்குப் போட மாட்டேன்!'' என்றாள் மஞ்சுளா.

''மஞ்சு! நீ என்னை அவமானப்படுத்துகிறாய்!'' என்றார் அவளைப் பெற்றவர்.

''இது என் சொந்த விஷயம். இதில் அனாவசியமாக யாரும் தலையிட வேண்டாம். கட்டின புருஷனை இழந்து அனாதை போல நிற்கிறேன். விபத்து நடந்த அன்று எவ்வளவோ பேர் வந்து அனுதாபம் தெரிவித்து விட்டு ஆறுதல் சொல்லிப் போனார்கள். இரண்டு மைல் தொலைவில் உள்ள நீங்கள் நான்கு நாட்கள் கழித்து வருகிறீர்கள்!.. வந்ததும் ஆறுதலாக ஒரு வார்த்தை உண்டா? 'கவலைப்படாதே, நான் இருக்கிறேன்' என்று சொல்ல வாய் இல்லை. 'இனி எப்படிக் காலம் தள்ளப் போகிறாய்?' என்று எகத்தாளமாகக் கேட்டீர்கள். எனக்குப் பிடித்தவரை மணந்து கொண்டேன். வாழ்ந்தேன். இப்பொழுது வாழ்வை இழந்து நிற்கிறேன். அதற்காக என்ன கேள்வி கேட்டீர்கள்? 'தாய் தகப்பனுக்குப் பிடிக்காதவனை மணந்துகொண்டால் ஏற்படும் கதியைப் பார்த்தாயா?' என்று இடித்துக் காட்டினீர்கள். இந்த நிலையில் ஒரு தகப்பன் கேட்கக் கூடிய கேள்வியா இது?..''

ஒரு குற்றவாளியைப் போல் நின்றுகொண்டிருந்தார் அவள் தந்தை. பஸ் சொந்தக்காரர் அனுதாபத்துடன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''இன்னொரு விஷயமும் தெரிந்து கொள்ளுங்கள். அன்று அந்த விபத்து நடந்திராவிட்டால் என்ன நடந்திருக்கும் தெரியுமா? அன்று இரவு குடும்பத்துடன் உயிரை விடுவதாக இருந்தோம். சனிக் கிழமை இரவு முழுவதும் பேசி இந்த முடிவுக்குத்தான் வந்தோம். 'என் காலத்தில் இந்த வீடு ஏலம் போகக் கூடாது; அதைப் பார்த்துக்கொண்டு நான் உயிர் வாழ மாட்டேன்' என்றார். தற்கொலை செய்து கொண்டுவிடுவாரோ என்று எனக்குப் பயமாக இருந்தது. என் பயத்தைப் புரிந்து கொண்டு 'பயப்படாதே. உங்களை நிர்க்கதியாய் விட்டு விட்டுப் போக மாட்டேன். எல்லாருமே போய்விடுவோம்' என்றார். அந்த விபத்து நடந்திராவிட்டால் அன்று இரவே எங்கள் கதை முடிந்திருக்கும். இப்பொழுது யோசித்து ஒரு முடிவுக்கு வாருங்கள். யார் மீதாவது வழக்குப் போட வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றினால் கொலை, தற்கொலை இரண்டுக்கும் உடந்தையாகச் சதி செய்ததாக என்மீது வழக்குப் போடுங்கள்!...'' என்றாள் மஞ்சுளா படபடப்பாக. அவள் தந்தை தலையைக் குனிந்தபடி சிறிது நின்றார். பிறகு மெள்ள வாசலை நோக்கி நடந்தார்.

''யாரம்மா அது?'' என்றான் மஞ்சுவின் பிள்ளை. மெள்ளத்தான் கேட்டான். ஆனாலும் அவர் காதில் அது விழுந்து விட்டது.

''அவர் ஒரு சட்ட நிபுணரடா!'' என்றாள் மஞ்சுளா.

''அப்படீன்னா?'' என்றான் பையன்.

புறப்பட்டவர் திரும்பி வந்து, ''நான் தாண்டா உன் தாத்தா!'' என்றார். பிறகு பஸ் சொந்தக்காரரின் கையிலிருந்த பணத்தை வாங்கிப் பேரனின் கையில் கொடுத்துவிட்டு, ''க்ஷேமமாயிரு!'' என்று ஆசீர்வதித்தார்.




# நியூட்ரின்

# லாக்டோ பான் பான்

குழந்தைகளே! எண்ணிலடங்கா சிறுவர் சிறுமியர் நியூட்ரின் லாக்டோ பான் பான்களின் இணையற்ற இன்பச் சுவையைக் கண்டு பிடித்து விட்டார்கள்!
அவர்களைப் போலவே நீங்களும் அந்தத் தனிச் சுவையை உண்டு மகிழுங்கள்.
உடனே சென்று கேளுங்கள் "நியூட்ரின் லாக்டோ பான் பான்தான் வேண்டும்" என்று!


**தின்னத்தின்ன திகட்டாத மிட்டாய்!** **nutrine**

நியூட்ரின் கன்பெக்ஷனரி
கம்பெனி பிரைவேட் லிமிடெட்.
சித்தூர் (ஆ.பி.)



கிழிந்துபோன துணிகளைத் தைப்பதற்கு இனி ஊசி நூல் தேவையில்லை. அமெரிக்கக் கம்பெனி ஒன்று ஒரு பவுடரைக் கண்டு பிடித்துள்ளது. 'ஸ்டார்-டஸ்ட்' என்ற பெயருள்ள இந்தப் பவுடரைக் கிழிந்த இடத்தில் தூவி இஸ்திரி போட்டால் போதும். கிழிந்த முனைகள் ஒன்று சேர்ந்து ஒட்டிக் கொண்டு விடும்.

நியூஸ் வீக் - பாபு



## பழைமையும் புதுமையும்

பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மாதாகோவிலுக்கு அருகில் மேற்கு பெர்லினில் இப்படிப் பல மாடிகள் கொண்ட நவீனக் கட்டிடம் ஒன்றையும் கட்டியிருக்கிறார்கள். மாதா கோவில் உலக யுத்தத்தின்போது உருக்குலைந்தது. போரின் கொடுமையை எடுத்துக் காட்டும் சின்னமாக அதை அப்படியே விட்டு வைத்திருக்கிறார்கள். 'ஜெட் டேல்ஸ்' - 'முத்து'

## அந்த நாள் டென்னிஸ்!

● இங்கிலாந்தில் அந்தக் காலத்தில் டென்னிஸ் பந்தில் தலைமயிரை அடைத்துப் பந்து தயாரித்தார்கள். ஷேக்ஸ்பியர் இதைத் தமது 'Much ado about nothing' என்ற நாடகத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.



○ டென்னிஸில் 'சர்வீஸ்' என்பது முதலில் பந்தை அடிப்பதைக் குறிப்பதாகும். இந்த 'சர்வீஸ்' என்ற வார்த்தை எப்படி வந்தது? பழங்காலத்தில் முதலில் பணியாளர் முதல் 'ஸ்டிரோக்'கை ஆடுவாராம். எட்டாம் ஹென்றி இந்த மாதிரி முதலில் பந்தை அடிக்க ஒரு பணியாளரை நியமித்திருந்தார். பின்னர்தான் ஆட்டக்காரர்கள் ஆடுவர். குண்டுமணி


## உரிமை

கனடாவில் ஒருவர் தம்முடைய காரை ரயில் தண்டவாளத்தின்மீது நிறுத்தி ரயிலைப் பதினெட்டு நிமிடங்கள் நிற்க வைத்துத் தாமதப்படுத்தினார். காரணம் - முதல் நாள் அந்த ரயிலால் அவர் ரயில்வே கேட்டில் பதினெட்டு நிமிடங்கள் காத்திருக்க நேரிட்டது! ரயில்வே இவர்மீது வழக்குத் தொடர்ந்தது. ஆனால் இவர் தைரியத்தைப் பாராட்டிய பொதுமக்கள் இவருக்கு வழக்காடப் பணஉதவி செய்தார்கள்! - எஸ்கொயர்-நாயக்



இடது கோடியில் இருப்பவர் ஜெனிங்டோ என்பவர். இவர் உயரம் 2'-1'' உலகிலேயே குள்ளமானவர். வலது கோடியில் இருப்பவர் கேப்ரியல் மோனேன் உயரம் 8'-6''. உலகிலேயே உயரமானவர். இருவரும் ஒரே சமயத்தில் லுப்தான்ஸா விமானத்தில் பறந்து சென்றார்கள். இதை ஒரு பெருமையாகக் கருதி விமானக் கம்பெனியார் புகைப்படம் வெளியிட்டுள்ளனர். இருவரும் ஒரு சர்க்கஸில் வேலை செய்கிறார்கள்.

'ஜெட் டேல்ஸ்' - 'பானி'



# சிக்கன ரத்னா!



கோமதி ஸ்வாமிநாதன்

"சாந்தி! மின்னும்போதெல்லாம் மழை பெய்வதில்லை! மழை கொட்டும்போதெல்லாம் மின்ன வேண்டும் என்ற நியதியும் இல்லை! நான் கேட்கும்போதெல்லாம் நீ காப்பி கொடுக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை! ஆனால் இப்போது இருந்தால் நான் கொஞ்சம் சாப்பிடுவேன்."

"இலைகளெல்லாம் பூக்களாக நறுமணம் பரப்புவதில்லை. பூக்களெல்லாம் இலைகள் போல் மந்தமாருதத்தில் அசைந்து ஆடுவதில்லை. நான் இப்போது என்ன செய்வேன்? காப்பி டிகாக்ஷனே இல்லை! கொஞ்சம் டீ போட்டுத் தரவா?"

"வாழ்க்கை என்பது சந்தடி நிறைந்த தெருவில் தோன்றும் நீங்காத தலைவலி. இப்போது என் தலைவலி அமைதி நிறைந்த வீட்டில் பற்றாக்குறையினால் தோன்றும் உபாதை! முன்னது ஓயாதது. பின்னது சில மணி நேரத்தில் தானே போய்விடும். கொஞ்சம் வெந்நீர் கொடு. போதும்.... ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிப்பு மனித சமூகத்தின் சிறப்பான கவசம். அந்தக் கவசம் கழன்றதோ மனிதன் மிருகமாகிறான். இதோ ஒரு நொடியில் பக்கத்து வீட்டுக்குப் போய்க் கொஞ்சம் வெந்நீர் வாங்கி வருகிறேன்."

"அதற்காகத்தானா அந்தக் கவசத்தை இப்போதே மாட்டிக் கொண்டாய்? வேண்டாம் சாந்தி!.... நீ இவ்வளவு சிக்கனமாக இருப்பது பற்றி நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அந்த மகிழ்ச்சியில் என் தலைவலியும் குறைந்து விட்டது."

"ஏதாவது மாத்திரை சாப்பிடுகிறீர்களா? வீட்டில் இருக்கிறது."

"வேண்டாம்! இப்படியே சற்று வெளியில் போய்விட்டு வரலாம்! ஏதாவது ஹோட்டலில் காப்பி சாப்பிடலாம்."

"செலவாளித்தனம் என்பது பட்டம்விடுவதைப் போல! அது எங்காவது அறுந்து பறந்துபோனால், சிரமப்பட்டுத் தயார் செய்த பட்டம் நாசமாகும். சிக்கனம் என்பது ஊன்றுகோல் போல. அது எங்கும் போகாது. விழுந்தாலும் நம் காலடியில்தான் விழும்! ஆகையால் ஹோட்டலுக்குப் போய்க் காப்பி குடிக்க வேண்டியது அவசியம்தானா?"

"ஆஹா! அற்புதமான மேற்கோள். 'பேச வேண்டியதை யெல்லாம் நினைத்துக் கொள். நினைத்ததையெல்லாம் பேசிவிடாதே! நினைவு எப்போதுமே உனக்குச் சொந்தம். பேச்சு உதட்டைவிட்டுக் கிளம்பினால் உனக்குச் சொந்தமல்ல' என்றான் ஓர் அறிஞன். நீ இப்போது சொல்லி விட்டாய். உன் மேற்கோளின் மீது நானும் சொந்தம் கொண்டாடுவேன்! சரி.... பக்கத்து வீட்டில் வெந்நீர் வாங்கிக் கொண்டு வருகிறேனென்றாயே!.... அப்படியேகூடக் கொஞ்சம் காப்பிப்பொடியையும் இரவலாக வாங்கி வந்துவிடு! கறுப்புக் காப்பியாகவே குடிக்கலாம்!"

"நல்ல யோசனை! உங்களுக்கும் சிந்தனா சக்தி இருக்கிறது! கொஞ்சம் சர்க்கரையும் கிடைக்குமா என்று பார்க்கிறேன். கிடைத்தால் நல்லது."


"சாந்தி! நீ ஒரு மாதர்குல மாணிக்கம்! என்ன சிக்கன சிந்தனை! உன்னை இனிமேல் 'சிக்கன ரத்னா' என்ற பெயரிலேயே அழைக்கலாமா?"

"எதையாவது 'சிக்' என்று பிடித்துக் கொள்ளாதீர்கள்! அவர்கள் வீட்டில் ஒன்றும் கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்ற கவலை எனக்கு...."


[முதல் நாள் தத்துவ மழை சம்பாஷணையாகப் பொழிந்த நாடகம் ஒன்றுக்குப் போயிருந்த தம்பதிகள் மறுநாள் இப்படிப் பேசிக் கொள்ளலாம் அல்லவா?]

★

"என்னய்யா யோசிக்கிறீர்? சீக்கிரம் கூண்டுக்குள்ளே வந்துவிடும். சிங்கம் ஒன்று கூண்டிலிருந்து தப்பித்துக் கொண்டு விட்டதாம். நான் உமக்குக் கொடுத்த கடனை இப்ப கேட்கவில்லை ஐயா!"



★




# சீற்றம்

எஸ். ரங்கநாயகி

சுசீலா காரியாலயத்திலிருந்து படி இறங்கிக் கீழே வருகிறாள். அவளுக்குத் தெரியும், தெருக்கோடியில் பிரபு அவளுக்காகக் காத்துக் கொண்டிருப்பான். உதட்டில் நெளியும் புன் முறுவலில், உள்ளத்தில் எழும் உணர்ச்சியைக் காட்டிக் கொள்வான். ஆதவனை எதிர் நோக்கி இதழ்களை மெள்ள மெள்ள விரித்துக் கிளையோடு ஒட்டினாற்போல் ஆடும் மலராக அவளும் அப்படித்தான் அவனைப் பார்த்ததுமே பதிலுக்குப் புன்னகை புரிவாள்.

''ஹல்லோ சுசி!'' — குரலைக் கேட்டு அவள் நிமிர்ந்து சுற்றிலும் பார்க்கிறாள். யோசனையில் மூழ்கிப் போயிருந்தும் கூடப் பழக்கத்தின் காரணமாக அவனைச் சந்திக்கும் அந்தத் தெருக் கோடிக்கே அவள் வந்து விட்டிருக்கிறாள்.

''ஓ, நீங்களா ?''

பிரபு நகர்ந்து அவளுடைய நெருக்கத்துக்கு வருகிறான். ''என்ன சுசி, பலமான யோசனையாக்கும் !'' அவன் அவள் தோளைப் பற்றிக் கேட்கிறான்.

அவனுடைய கையை அவள் விலக்கவில்லை. அவளைத் தொட்டுப் பேச அவனுக்கு அனுமதி தந்திருக்கிறாள். அந்த வரம்புக்கு மீறி அவன் முன்னேறிவிட மாட்டான்.

அவள் பதில் கூறுமுன் அவனே கூறுகிறான். ''வா, சுசி, ஒரு கப் காப்பி குடித்துவிட்டு வரலாம்.''

''ஏ பிரபு, எனக்கும் சேர்த்துக் காப்பி சொல்லுடா.'' மாதவன் வந்துவிட்டான்.

சுசீலா, பிரபு இருவரையுமே அவனுக்குத் தெரியும். அவ்விருவரும் நேசிப்பதையும் அறிவான். அதில் அவனுக்கு மகிழ்ச்சியும் உண்டு.

''என்னம்மா, சுசி! இப்படியே தள்ளிக் கொண்டு போய்விட முடியும் என்று நினைக்கிறாயா ? இருவருடைய மனமும் ஒன்றிவிட்டால், விவாகத்தில்தானே மங்களம் பாட முடியும்'' மாதவன் கேட்கிறான். அவன் அடிக்கடி கேட்கும் கேள்வி இது.

''உங்கள் இருவருக்குமே நான் தடை போடும் காரணம் தெரியும். பெற்றோர்களுக்கு ஒரே பெண்ணாக இருந்து, தாயையோ தந்தையையோ இழந்துவிட்டால் எத்தனை சங்கடம்!''

பிரபு மௌனமாகவே இருக்கிறான். சுசீலா தடை போடும் காரணம் அவனுக்குத் தெரியும். அவன் அதை ஒப்புக் கொண்டானா என்பதை அவளே நினைத்துப் பார்த்ததில்லை.

தன் காதலை வெளியிட்டபோதே அவள் அவனை எச்சரித்திருக்கிறாள். ''பிரபு, நாம் இருவரும் ஒரே கட்டடத்தில் வெவ்வேறு

காரியாலயத்தில் பணி புரிகிறோம். சந்திக்கிறோம், நட்பை வளர்த்துக் கொண்டு விட்டோம். நான் பயந்தது போலவே நாம் காதல் என்னும் பாதையிலும் அடியெடுத்து வைத்துவிட்டோம். இந்தப் பாதைக்குத் திரும்பக் கூடாது என்று நான் என்னைக் கட்டுப் பார்த்தும் என் நெஞ்சு என்னை ஏமாற்றி விட்டிருக்கிறது.''

''காசி, நீ சொல்வது விளங்கவில்லையே? என் வரை நம் திருமணத்தைத் தடுப்பவர்கள் ஒருவருமில்லை. ஒருகால் உன் பெற்றோர்கள்...'' வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தி விட்டிருந்தான்.

''பெற்றோர் என்று சொல்லும்படி எனக்கு அப்பா மட்டும்தான் இருக்கிறார் பிரபு. என் அம்மா இறந்து விட்டாள். அம்மா இருந்தால் என் விவாகம் எப்போதோ முடிந்திருக்கும். சொல்லப் போனால் இப்படிக் காரியாலயப் பணிக்கும் வந்திருக்கமாட்டேன். உங்களைச் சந்தித்திருக்கவும் மாட்டேன்!'' சிறு புன்னகை அதன் பிறகு.

பிரபுவும் அவளை நோக்கி முறுவலிக்கிறான்.

''என் அம்மா இறந்த போது என்னிடம் சொன்னதை மறக்க முடியாதவளை. 'காசி, எங்களுக்கு நீ ஒருத்திதான், மகன் மகள் எல்லாம். உன் அப்பாவை நீதான் கவனித்துக் காப்பாற்ற வேண்டும்.' அப்பாவுக்கு நான் ஒரு மகனாக இருந்து அவரைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்கவே தொழிலில் அமர்ந்தேன். அப்பாவின் உடல் நலிந்துவிட்டது. இனி வேறு வேலைக்குப் போக முடியாது. தாமே சமைத்துச் சாப்பிட்டுத் தம்மைக் கவனித்துக் கொள்ளவும் அவரால் முடியாது. அதனால் அப்பா உயிருள்ள வரை அப்பாவைக் காப்பாற்றும் பொருட்டு என் வாழ்வை இப்படியே முடித்து விடுகிறேன். என் திருமணம் முடிந்தால் நான் கணவன் வீட்டுக்குச் செல்ல வேண்டியவள், அவருடைய உடைமையாகி விடுவேன். மாப்பிள்ளையின் கீழ் நிற்க அப்பா சம்மதிக்க மாட்டார். நானும் அவரை அந்த நிலையில் நிறுத்தி வைக்க விரும்பவில்லை.''

இத்தனையும் கேட்டு விட்டுப் பிரபு மெள்ள ஆரம்பித்தான். ''காசி, நீ தவறாக...''

அவனை முடிக்க விடவில்லை காசிலா. ''நீங்கள் கூறப் போவது எனக்குத் தெரியும். நம் திருமணம் முடிந்தால் நீங்கள் அப்பாவை நன்றாகக் கவனித்துக் கொள்வதாக வாக்களிப்பீர்கள். எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அப்பாவுக்கும் எனக்கும் அப்பா மற்றவர் கீழ் நிற்பதான எண்ணம் இருந்து கொண்டே யிருக்கும். சிறு மாற்றம் தோன்றுமானாலும் கூட இந்த எண்ணம் பெரியதாக உருவெடுக்கும்.''

''உன் அப்பா உன்னுடைய இந்தக் கடமை உணர்ச்சிக்கு ஆதரவு தருகிறாரா?''

''இல்லை பிரபு, நான் விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்று தினமும் கூறுகிறார். நாம் இருவரும் காதலிப்பதுகூட அவருக்குத் தெரியும். நான்தான் என்னை அவருக்காகப் பாதுகாப்புப் பெட்டகமாக வைத்துக் கொள்ள விரும்புகிறேன்.''

பிரபு பதில் கூறவில்லை. அவளிடம் வாதாடவில்லை. இருவரும் சில விநாடிகள் மௌனமாக இருந்த பிறகு பிரிந்தார்கள்.

அதன் பிறகு இருவருமே திருமணத்தைப் பற்றிப் பேசிக் கொள்ளவில்லை. சந்திப்பின் நெருக்கமோ மேலும் இறுகிப் போயிற்று. காலையில் எழுந்ததுமே ஒளியைக் காண விழையும் உலகம் போல் மாலையில் இருவருமே ஒருத்தரை ஒருத்தர் சந்திக்க வேண்டிய துடிப்பு நெஞ்சுக்குள் தன்னால் பொங்கி வரும் தன்மையைப் பெற்றிருந்தது.

மாதவனுக்கு இதெல்லாம் தெரியும். பிரபு அவனிடம் எதையுமே மறைத்ததில்லை. காசிலாவைக் காணும்போதெல்லாம் மாதவனும் இந்தக் கேள்வியைக் கேட்கத் தயங்கியதில்லை. காசிலாவின் பதிலும் அவனுக்கு மனப்பாடம் ஆகிவிட்டிருந்தது. பிரபுவின் மௌனமும் பழக்கப்பட்டு விட்டிருந்தது.

காசிலா வீடு திரும்பிய போது தந்தை சங்கரன் ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

''அடேடே! ஏதுப்பா, நமக்குக்கூடக் கடிதம்? யார் எழுதியிருப்பது?'' என்று காசிலா கேட்டாள்.



திடுக்கிட்டவராகச் சங்கரன் அவளை நோக்கிவிட்டுக் கடிதத்தைத் தம் வேஷ்டி மடிப்பில் செருகிக் கொண்டு விடுகிறார். ''ஒன்றுமில்லேம்மா...ஏதோ பழசு...''

**ம**று நாள் காலை. சங்கரன் சுசீலாவிடம் கூறிக் கொண்டிருந்தார். ''சுசீலா, எத்தனையோ முறை உன்னிடம் கூறிவிட்டேன். நீ உனக்குத் துணை தேடிக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.''

''நீங்கள்தான் இருக்கிறீர்களே அப்பா, நான் விவாகம் செய்து கொண்டு விட்டால் உங்களுக்கு யார் துணை இருப்பார்களாம்? அதைச் சொல்லுங்கள்.''

''அதைப் பற்றிக் கவலைப்படாதேம்மா. நான் ஆண். எப்போது வேண்டுமானாலும் எனக்கு வேண்டிய துணை கிடைத்துவிடும். நீ விவாகத்தை முடித்துக் கொண்டு விட்டால் எனக்கு மனம் நிம்மதியாகும். மற்றும் பல விதங்களில் உதவியாகவும் இருக்கும். நீ நன்றாக யோசனை செய்து நான் சொன்னதைச் சீக்கிரம் ஏற்றுக் கொள்ளம்மா. நீ விரும்பும் பிரபுவையே மணந்து கொள். என் ஆசிகள் முழுவதும் உங்களுக்கு உண்டு.''

சுசீலா தன் இருப்பிடத்தை விட்டு எழுந்து விட்டாள். ''அப்பா! என்னிடமிருந்து வழக்கமான பதிலைத்தான் நீங்கள் எதிர்பார்க்க முடியும்.''

தந்தையிடம் இப்படிக் கூறி நகர்ந்துவிட்டாலும் அவள் மனம்மட்டும் ஏனோ பிரபுவைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

சங்கரன் ஓரிரு சாமான்கள் வாங்க வெளியே சென்றார். சுசீலா மேஜை மீது இருந்த கீதைப் புத்தகத்தை ஒரு போக்கில் புரட்டினாள். அதனுள்... இது அப்பா நேற்று படித்துக் கொண்டிருந்த கடிதம் போல் இருக்கிறதே.... அம்மா என்னதான் எழுதியிருந்தாள் என்று பார்க்கலாம்.

இதென்ன, வேறு யாரோ எழுதியிருக்கிறார்களே.....

சங்கரனுக்கு,

உங்கள் கடிதத்தைப் பார்த்தேன். ஒரு பெண்ணுக்கு மாங்கல்யதாரணம்தான் — வாழ்க்கையில் மிக்க மகிழ்ச்சிதரக் கூடியது என்பதை நீங்களே அறிவீர்கள். என் மகள் உமாவின் இந்த நிகழ்ச்சிக்கான பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று கல்யாணத் தரகர் சொன்னதால் நான் நேராக உங்களுக்கு எழுத முற்பட்டேன். என் குடும்பத்தின் நிதி நிலைமையைப் பற்றி அறிய ஆவல் உள்ளவராக இருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. உமாதான் மூத்தவள். அவளுக்கு ஏழு தம்பி தங்கைகள். நான் ஒரு எலிமெண்டரி பள்ளி ஆசிரியன். சாப்பாட்டுக்கே கஷ்டம் என்னும் குழந்தையின் திருமணத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாம். சுந்தரம்தான் உதவிக்கு வந்தார். உங்களையும் காட்டி விட்டார். என் நிதி நிலை பற்றி வேறு விளக்கம் தேவை இல்லை. உங்கள் மகள் அனுமதி பெற நீங்கள் யோசிப்பதாகத் தெரிகிறது. உங்கள் மகளிடம் விவரமாகக் கூறினால் ஒரு பெண்ணுக்குத் திருமண வாழ்வு தர அவள் கண்டிப்பாகச் சம்மதிப்பாள். ஓர் ஏழைக் குடும்பத்துக்கு உதவியாக இருக்கும் என்று தயவு செய்து அவளிடம் கூறுங்கள். மீண்டும் யாசிக்கிறேன். தயவுசெய்து என் மகள் உமாவை நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள்.

நீலகண்டன்

கடிதத்தைப் படித்துப் பார்த்ததுமே சுசீலாவுக்கு ஆரம்பத்தில் திகைப்பும் வியப்புமாகத் தலை காட்டி மற்றோர் உணர்ச்சியில் கொண்டு நிறுத்தியது. கடிதத்தின் வாசகங்கள் அவளுக்கு எதையெல்லாமோ சொல்லிக் காட்டியன. அதனுள் அடங்கியிருந்த செய்தி மட்டுமன்று, இதற்கு முன்பும் கடிதம் வந்திருப்பது புரிகிறது.

'அப்பாவா... அப்பாவா இப்படி இந்த நிலைக்கு வந்திருக்கிறார்? அம்மாவை உயிருக்குயிராக நேசித்த அப்பாவா மற்றொரு பெண்ணுக்கு வாழ்வு அளிப்பதாக, தமக்கென ஒருத்தியைத் தேடிக் கொள்ள விரும்புகிறார்? மகள் தடங்கலாக நிற்கப் போகிறாளே என்பதற்குத்தான் 'சீக்கிரம் விவாகம் செய்து கொள்' என மகளை வற்புறுத்துகிறாரோ? 'நீ விவாகம் செய்து கொண்டால் பலவிதங்களில் உதவியாக இருக்கும்' என்கிறாரே, தம் விவாகத்தில் குறுக்கிட்டு இருக்கக் கூடாது என்பதுதான் அதன் பொருளா? பிரபுவை அவள் மணக்க அதனால்தான் சம்மதம் தருகிறாரோ.... அப்பாவா இவர்? இவருக்குத் துணை வேண்டும் என்பதற்காக மகள் தன் திருமணத்தை நினைக்காமல் இருக்கும் போது ஓ. அப்பா! நீங்களா இப்படி...?'

அவளால் மேற்கொண்டு ஒரு பணியும் செய்ய முடியவில்லை. கடிகாரத்தைப் பார்த்தாள். காரியாலயத்துக்கு நேரமாகிவிட்டிருந்தது. அவள் உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டு விட்டாள். சாவியை அடுத்த வீட்டில் கொடுத்து விட்டாள்.

**அ**ன்று மாலை. அவள் பிரபுவைச் சந்திக்க முடியாது. காரியாலயப் பணியாக அவன் வெளியூர் போயிருந்தான். அவள் கனத்த நெஞ்சுடன் வீடு திரும்பினாள். கடிதத்தைப் படித்த பிறகு அவள் இன்னும் தந்தையைப் பார்க்கவில்லை. வீட்டுக்குச் சென்றதுமே இது பற்றி அவளே பேச்சைத் தொடங்க வேண்டியிருந்தாலும் இருக்கும்.....

வீட்டு வாசற்படிக்கு வந்த போதே உள்ளே இருந்து அவள் தந்தை வெளியே வந்து கொண்டிருந்தார்.

''சுசீலா, நீயாம்மா? சீக்கிரமே வந்துவிட்டாயா?'' என்று கேட்டார்.

''நான்தான் அப்பா. எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள் அல்லவா?''

சங்கரன் அவளைப் பின்தொடர்ந்து உள்ளே செல்கிறார்.

சுசீலா காப்பி கலந்து வந்து தந்தைக்கு முன்னால் வைக்கிறாள். பிறகு தானும் குடித்துவிட்டு நாற்காலியில் அமருகிறாள்.

''அப்பா, இதெல்லாம் என்ன?'' பொங்கி வந்த ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தியவளாக அமைதியாகக் கேள்வி வந்தது.

''என்னம்மா, சொல்கிறாய்?''

''அப்பா, என்னிடம் எதற்கு மறைக்கிறீர்கள்? நேற்று வந்த கடிதத்தையும் பார்த்துவிட்டேன்.....''

# பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

215, சயான் ரோடு பம்பாய் – 22 : தொலை பேசி எண்: 475521

## நாடக இசை விழா 1971

23-10-71 சனி இரவு 8 மணிக்கு
"இலங்கேஸ்வரன்" மனோகரின் "சூரபத்மன்"

24-10-71 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
நேஷனல் தியேட்டர்ஸ் அளிக்கும் "சிசுபாலன்"

25-10-71 திங்கள் இரவு 8 மணிக்கு
"சாணக்கிய சபதம்"

26-10-71 செவ்வாய் இரவு 8 மணிக்கு
"வீணை யோகி" எஸ். பாலசந்தர்

இடம்: ஷண்முகானந்த கலை அரங்கு

சீசன் டிக்கெட்டுகள்: ரூ. 100, 60, 15, 10, 7

(டிக்கட்டுகள் சங்கத்தில் இரவு 7-30 முதல் 9-30 மணி வரை ரிசர்வ் செய்யப்படும்)



# மழையினை வெல்லுங்கள் ஃபாஸ்ஃபோமின்® அருந்துங்கள்.




சிறு தூறலாயினும் சரி, அடை மழையாயினும் சரி ஃபாஸ்ஃபோமின் அருந்துவது வாழ்க்கைக்கே இன்பம் தரும். ஃபாஸ்ஃபோமின் வலுவூட்டுகிறது. களைப்பை நீக்குகிறது. பசியைத் தூண்டுகிறது. உடலுக்கு எதையும் தாங்கும் வலிமையை அளிக்கிறது. ஃபாஸ்ஃபோமின் வாங்குங்கள். இந்தப் பச்சை நிற பழரச டானிக்கில் வைட்டமின் பி. காம்ப்ளெக்ஸும், மல்டிபிள் க்ளிஸரோ ஃபாஸ்பேட்ஸும் அடங்கி உள்ளன. உங்கள் குடும்பத்தினருக்கு ஒவ்வொரு நாளும் ஃபாஸ்ஃபோமின் கொடுங்கள். அது எல்லா பருவங்களுக்கும் ஏற்ற வைட்டமின் டானிக்.

SQUIBB SARABHAI CHEMICALS

® இந்தச் சின்னம் ஈ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் என்ற ஸ்தாபனத்தின் ரிஜிஸ்டர் செய்யப் பெற்ற ட்ரேட் மார்க் ஆகும். கே.பி.பி.எல். அதை உபயோகிக்கும் லைஸன்ஸ் பெற்றவர்கள்.

ஃபாஸ்ஃபோமினில் குடும்பத்தினர் அனைவருக்கும் வேண்டிய சக்தி நிறைந்துள்ளது.

அவள் கூறி நிறுத்துமுன்பே அவர் அதிர்ச்சி யுற்றவர் போல் கேட்கிறார். "நேற்று வந்த கடிதமா.... நேற்று வந்ததையா அதற்கு முன்பும்......."

" உங்கள் அதிர்ச்சி எனக்குப் புரிகிறது அப்பா. இந்தக் கடிதத்துக்கு முன்பும் கடிதம் வந்திருப்பதாக இந்தக் கடிதத்திலிருந்து தெரிகிறது.... ஆனால்... ஆனால்... இதில் எனக்கு நம்பிக்கையே இல்லை. எதற்காக நீங்கள் என்னிடம் மறைத்திருக்க வேண்டும்?"

"ஆமாம், கபிலா! நான் உன்னிடம் மறைத்திருக்க வேண்டாம். உன் குணம் எனக்குத் தெரியும். அப்பாவின் விருப்பத்தை நீ என்றுமே தடுத்து நிறுத்தமாட்டாய். நானே ஒரு முடிவுக்கு வந்த பிறகு உன் னிடம் சொல்லலாம் என்று நினைத்திருந்தேன். இது ஒரு பெண்ணின் மங்கள நாண் விஷயம் என்றால் நீ ஏன் தடுக்கப் போகிறாய் ?" சங்கரன் அதிர்ச்சி எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டுத் துணிச்சலைக் கூட்டிக் கொண்டு பேச ஆரம்பித்தார்.

இப்போது கபிலாவுக்குத்தான் அதிர்ச்சி. அப்பா எவ்வளவு சீக்கிரத்தில் தம்மைச் சமா ளித்துக் கொண்டு விட்டார். ரொம்ப நல்ல வர் போல் பேச ஆரம்பித்துவிட்டார்! அவள் தான் ஆத்திரத்தைக் காட்டத் தொடங் கினாள். " ஒரு பெண்ணின் மங்கள நாண் விஷயம் என்று கூறுகிறீர்கள். உங்களுடைய சுயநலம்தான் இதற்குக் காரணம்."

" என்னம்மா, சொல்கிறாய் நீ?" திடுக் கிட்டவராகத் தந்தை கேட்கிறார்.

"எல்லாம் தெரிகிறது அப்பா, எனக்கு எல் லாமே நன்றாகப் புரிகிறது. நீங்கள் இத்தனை நாட்களாக என்னிடம் கூறாமல் மறைத் ததை இன்று ஒரே நாளில் புரியும்படி எனக்கு ஆண்டவன் காட்டி விட்டார். இப்படி நீங்கள் துணிந்துவிடுவீர்கள் என்று நான் நினைக்கவே யில்லை. பெண்ணுக்காகத் தயக்கம் காட்டுவ தாக அவர்களிடம் எதற்காக நீங்கள் சொல்ல வேண்டும் என்பதும் புரியவில்லை."

"கபிலா! நீயே எல்லாம் தெரிந்து கொண்டுவிட்டாய் என்று சொல்லுவதால் நான் உனக்கு விளக்கம் தரவேண்டிய அவ சியம் இருக்காது. உனக்கு இந்த ஏற்பாட்டில் விருப்பமில்லையென்றால் நான்...."

தந்தை முடிக்குமுன்பே விருட்டென்று எழுந்தாள் கபிலா. "அப்பா, எதற்கு என்னை இழுக்கிறீர்கள்? இத்தனை காலமாக நான் விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் வற்புறுத்திய காரணம் எனக்கு இப்போது புரிகிறது. நீங்கள் துணையில்லாமல் நின்றுவிடக் கூடாது என்பதற்காகத்தான் இத்தனை காலமாக விவாகத்தைப் பற்றிச் சிந்திக்காமல் இருந்தேன். ஆனால் நீங்கள் உங் களுக்குத் துணை தேடிக் கொள்ளப் போவ தாக வெளிப்படையாக என்னிடம் சொல்லி யிருந்தால் அப்போதே நான் என் விவா கத்தை முடித்திருப்பேன். ஆனால் இந்த வயதில் உங்களுக்கு இப்படி ஆசை எழும் என்று நான் நினைத்திருக்கவேயில்லை. அது வும் அம்மாவை எப்படி மறக்க முடியும் ? அவள் இருந்த இடத்தில் மற்றொரு பெண்ணை எப்படி நிறுத்த முடியும்...? வேண்டாம், நான் அதெல்லாம் பற்றிப் பேசவில்லை. நான்



" ஒன் பை டு அல்வா;
ஒன் பை டு தோசை;
ஒன் பை டு காப்பி
ஒன் பை டு பில்!"

கல்யாணம் செய்து கொண்டு போய்விடு கிறேன். கவலைப்படாதீர்கள், என் தயவு வேண்டாம், என் துணை வேண்டாம்....." என்றும் ஆத்திரமுமாகச் சொற்களைக் கொட் டிக் கொண்டே அடுத்த அறைக்குச் சென்று கட்டிலில் படுத்துக் குமுறினாள்.

சங்கரன் தவித்து விட்டார். "கபிலா...! கபிலா...."

அவர் அந்த அறைக்குள் நுழையக்கூட இல்லை. கபிலா மீண்டும் கத்தினாள். "நீங்கள் என் அருகில் வரவும் வேண்டாம், எனக்கு விளக்கம் தரவும் வேண்டாம். ஒன்றும் பேசாதீர்கள், உங்கள் ஆறுதல் எனக்குத் தேவையில்லை. பிரபு எனக்காகக் காத்திருக் கிறார். அவரை மணந்து கொண்டு விடு கிறேன். எனக்குத் துணை கிடைத்துவிடும். மேலே பேச வராதீர்கள்."

சங்கரன் அவளை நெருங்கவில்லை.

இரவு முழுதும் சங்கரன் தூங்கவில்லை என்பதைக் கபிலா கவனித்தாள். இருக்கட் டுமே.... அதனால் அவள் எதற்குக் கவலைப் பட வேண்டும்... அவருக்காக அவள் தியாகம் செய்ய நின்றிருந்த போது அவர் மட்டும் இந்த வயதில் இப்படிப் பித்துப் பிடித் திருக்கலாமா?

மறு நாள் காலை. தந்தைக்கும் மகளுக்கு மிடையே அதிகப் பேச்சுவார்த்தை இருக்க வில்லை. கபிலா வழக்கம் போல் சமைத்துச் சாப்பிட்டுவிட்டுக் காரியாலயம் போனாள். சங்கரன் வழக்கம் போல் தாமே எடுத்துப் போட்டுச் சாப்பிட்டார்.

மாலை நேரம். பிரபுவைச் சந்திக்கத் துடித்தாள் கபிலா. அன்று அவன் வெளியூரி லிருந்து திரும்பி யிருப்பான்.

"ஹலோ, கபி!" இதோ வந்துவிட்டது, அவனுக்கான குரல். "என்ன கபி, இன்று நீ எனக்குமுன் வந்து விட்டாய்?" என்று பிரபு கேட்கிறான்.

கபிலாவின் வேண்டுகோளின்படி இருவரும் கடற்கரைக்குச் சென்றனர். பிரபுவிடம், வீட்டில் நடந்ததை யெல்லாம் அப்படியே கூறிவிடுகிறாள் கபிலா.

" ஏழைகள் தங்கள் பெண் கல்யாணத் துக்காக உன் அப்பாவைக் கட்டாயப் படுத்தியிருக்கலாம் அல்லவா ?"

"இருக்கட்டுமே, அதற்காக அப்பா சம்மதம் தர வேண்டுமா? என் விவாகத்துக்கு அப்பா துரிதப்படுத்தியது இப்போது தான் புரிகிறது...அதனால் பிரபு... இனி நம் திருமணத்துக்குத் தடை யேதுமில்லை" என்று கூறிவிட்டுச் சுசீலா ஆர்வத்துடன் அவனை நோக்கினாள்.

"ஓ, சுசீ, என் மனத்தில் இந்தச் சொல்லைக் கேட்டு ஆனந்தப் பிரவாகம் ஏற்படுகிறது. நீ எந்த நாளில் என்னுடைய உடைமையாக விரும்புகிறாயோ, அந்த நாள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாளாகும்." பிரபு உணர்ச்சிப் பெருக்குடன் கூறினான்.

ஒரு வாரம் சென்றது. வீட்டில் தந்தையும் மகளும் நெருங்கிப் பழகுவதைக்கூட நிறுத்திக் கொண்டு விட்டனர். அன்று மேஜை மீது இரண்டே வரிகள் கொண்ட ஒரு கடிதம் கிடந்தது. சங்கரனின் மகளும் சம்மதம் கொடுத்துவிட்டது பற்றி அவர்களுக்கு மகிழ்ச்சியாம். சீக்கிரம் முகூர்த்தம் வைக்கப் போகிறார்களாம்.

எத்தனை துணிச்சல் அப்பாவுக்கு! பெண்ணின் சம்மதம் கிடைத்துவிட்டதாகக் கூசாமல் எழுதியிருக்கிறார். சீக்கிரமே முகூர்த்தமாம். தேன்நிலவுக்கும் ஏற்பாடு நடக்கட்டும்!

அவள் கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தபோதே சங்கரன் வந்துவிட்டார்.

"முகூர்த்தம் வைத்தாகிவிட்டதாக்கும். போகட்டும். ஒன்றுமட்டும் சொல்லுகிறேன். என் விவாகம் சீக்கிரமே முடியப் போகிறது. அதன் பிறகு நான் இந்த வீட்டை விட்டுப் போய்விடுவேன். நீங்கள் உங்கள் துணைவியோடு இன்பமான வாழ்க்கை நடத்தலாம்—மனத்தைக் குத்தக் கூடிய கூர்மையான வார்த்தைகளை அவள் வேண்டுமென்றே உபயோகித்தாள்.

சங்கரன் சினம் கொள்ளவில்லை.

சுசீலாவின் பிடிவாதம் காரணமாக அவளுக்கும் பிரபுவுக்கும் ரிஜிஸ்தர் திருமணம் தான் நடந்தது.

சுசீலா பிரபுவின் வீட்டோடு அன்றைய தினமே வந்து விட்டாள்.

புது மணத் தம்பதிகளாக, இருவருமே சில நாட்களாக விடுமுறை எடுத்திருந்தனர். ஒரு வாரம் சென்றது. சுசீலாவின் பெயருக்கு ஒரு ரிஜிஸ்தர் பார்சல் வந்தது. தந்தை அனுப்பியது என்று தெரிந்து வெறுப்புடன் அதைப் பிரிக்கிறாள். உள்ளே ஒரு பொன் திருமாங்கல்யம் இருந்தது.

அன்புள்ள சுசீலாவுக்கு,

நிறை மனத்துடன் கூடிய தந்தையின் ஆசிகள். உன் விவாகம் ரிஜிஸ்தர் முறையில் முடிந்துவிட்டது பற்றிச் சந்தோஷம். பிரபுவுக்கும், உனக்கும் என்றென்றும் என் அன்பும் ஆசிகளும் உண்டு. இத்துடன் உன் தாயின் திருமாங்கலியத்தை அனுப்பியுள்ளேன். உன் விவாகத்துக்கு அதை உபயோகித்து, உன் அம்மாளைப் போல் நீ சீரும் சிறப்பும் பெற்று என்றும் தீர்க்க சுமங்கலியாக வாழ வேண்டும் என்பது என் விருப்பம். அதனால் நல்லதொரு நாளில் கோயிலில் ஸ்வாமி சந்நிதியில் முறைப்படி மாங்கலிய தாரணம் செய்து கொள்வாயாக.

நிற்க, உன் பாட்டியான என் தாயின் திருமாங்கல்யம் ஒன்றும் நம்மிடமிருந்தது. உன் பாட்டி தீர்க்க சுமங்கலியாக சதாபிஷேகம் வரை இருந்து உயிர் நீத்ததால், உன் தாய் அதை என் சஷ்டியப்த பூர்த்தி விவாகத்தில் அணிய விரும்பினாள். ஆனால் காலன் அதுவரை அவளை விட்டு வைக்கவில்லை. அதனால் அந்த மாங்கல்யத்தை ஓர் ஏழைப் பெண்ணின் விவாகத்துக்குத் தானம் செய்துவிடும் விருப்பத்துடன் தகுந்த பாத்திரம் காட்டும்படி சுந்தரத்திடம் சொல்லியிருந்தேன். தகுதியான இடம் தெரிந்த பிறகு உன் அனுமதி பெறலாமென்றிருந்தேன்.

தானத்துக்கான பாத்திரமாக ஓர் ஆசிரியரின் மகள் உமாவைக் காட்டினார் சுந்தரம். உமாவின் குணத்துக்கும் அழகுக்கும் மட்டும் மதிப்பு வைத்து ஒரு பையன் உமாவின் தந்தைக்குச் செலவே வைக்காமல் மணக்க முன் வந்தது அவள் அதிர்ஷ்டம். ஆனால் மாங்கல்யம் செய்யவோ, கூறைப் புடவை வாங்கவோ கூட ஆசிரியருக்குச் சக்தி இல்லாததால், சுந்தரம் மாங்கல்யதாரணத்துக்கு என்னைக் காட்டி விட்டார். நீ பார்த்த கடிதத்தின் ரகசியம் அதுவே. சிந்தித்துப் பாராமலே உன் மனம் அதை வேறாகப் புரிந்து கொண்டு என்மீது எரிச்சலைத் தூண்டி விட்டதன் காரணம் எனக்குப் புரிந்தது. நீ விவாகம் செய்து கொள்ளவும் விரும்பினாய், என்னையும் விட மனமில்லை. அதனால் சட்டென்று வேறு பொருள் புரிந்து உன்னையே நீ ஏமாற்றிக்கொண்டு என்னிடம் சீற்றம் கொண்டாய். பிறகு இரவு முழுதும் நான் யோசித்தேன். என்மீதுள்ள சீற்றத்தால் உன் விவாகத்தை நீ துரிதப்படுத்துவாய் என்று உணர்ந்து, உனக்கு விளக்கம் தர வேண்டாம் என்ற முடிவுக்கு வந்தேன். உன் சீற்றத்தின் பொருளாகவே இருந்தேன். உமாவுக்கும் திருமாங்கல்யத்தை அனுப்பி விட்டேன்.

குழந்தாய், எப்போதும் பெற்றோர்கள் மகவின் திருமண நல்வாழ்வைத்தான் விரும்புவார்களே யன்றித் தங்களுக்குப் பொருள் ஈட்டித் தரும் இயந்திரமாக்க விரும்ப மாட்டார்கள். இதைத்தான் நான் உன்னிடம் வற்புறுத்தி வந்தேன். ஆண்டவன் வழி காட்டினார். உனக்கு என்மீதுள்ள சீற்றம்! நல்ல முடிவு!

மகளே, உன் தாய் மறைந்ததுமே நான் சந்நியாசக் கோலம் பூண்டு, ஆண்டவன் திருநாமங்களை ஜபித்து, மடத்தில் சேர விரும்பினேன். அதற்குத்தான் உன் திருமணத்தை விரும்பினேன். உன் விவாகம் முடிந்து விட்டது. நான் வருகிறேனம்மா. ஆண்டவன் அருளும் ஆசியும் உங்கள் திருமண வாழ்வில் என்றென்றும் பிரகாசிக்கட்டும்.

**சங்கரன்."**

கடிதத்தைப் படிக்கும்போதே சுசீலா நெஞ்சுருகித் தவித்து விட்டாள்.

"ஓ, அப்பா!"

மயங்கி விழப் போன சுசீலாவைப் பிரபு தாங்கிக் கொண்டான்.


அடேயப்பா! வளர்ச்சியின் உச்ச நிலை!
பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதி வேலையைத் தான் செய்யும்
இன்க்ரிமின் பெறுவீர்... உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
Lederle எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
* அமெரிக்கன் ஸையானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
இன்க்ரிமின்* டானிக்
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச் சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி.
இளம் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் -10 மிலி.
Incremin drops
10 ml

# என்னாலும் முடியும்

• விமலா ரமணி •

'லேடீஸ் கிளப்'பில் அன்று எக்கச்சக்க சத்தம்! சாதாரணமாக 'லேடீஸ் கிளப்' என்றாலே சத்தமிருக்கும்! போதாக் குறைக்கு 'கமிட்டிக் கூட்டம்' வேறு. பட்டிமன்ற நிகழ்ச்சி மாதிரி. அங்கத்தினர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

''உடனடியாக ஐயாயிரம் ரூபாய் வசூல் செய்ய வேண்டும்! 'ஷட்டில் கோர்ட்' பாதியாக நிற்கிறது. என்னமாவது செய்து ஐயாயிரம் வசூல் செய்ய வேண்டும்.''

'' ஒரு நாடகம் போட்டால் என்ன ?''

'' நாம் நாடகம் போட்டால் யார் பார்ப்பது?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. அமெச்சூர் நாடகத்தைவிட நம் நாடகம் நன்றாகத்தான் இருக்கும் !''

'' கதை..... ?''

அனைவரும் என்னை முறைத்துப் பார்க்கவே எனக்குச் சற்றுத் தயக்கமாகி விட்டது !

'' ஓசியில் கதை எழுத ஓர் எழுத்தாளர்... ளரி... எழுத்தாளி இருக்கிறாள். நடிகர்கள் தயார். 'மைக், லைட், சீன்' இவைகளுக்கு மட்டும் ஏற்பாடு செய்துவிட்டால் போதும். இருநூறு ரூபாயில் நாடகம் போட்டு விடலாம். பத்து, ஐந்து, என்று டிக்கெட் போட்டு ஐயாயிரம் ரூபாய் எளிதாக வசூல் செய்து விடலாம்...''

நான் என் தொண்டையைக் கொஞ்சம் கனைத்துக் கொண்டேன்.

''யோசனை... நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் காரியத்தில் நடைபெற வேண்டுமே! அடுத்தபடியாக 'டிக்கட்' விற்க வேண்டும்.''

'' இந்தக் கமிட்டியில் பத்துப் பேர் இருக்கிறோம். ஆளுக்கு ஆயிரம் ரூபாய் விற்றால் பத்தாயிரம் ஆயிற்று !''

ஆளுக்கு ஒன்றாகப் பேசிக் கடைசியில் முடிவு எடுத்தோம். 'நாடகக் கதை, வசனம், டைரக்ஷன்' — என் தலையில் என்று விழுந்தபோது சமர்த்தாக அதை மட்டும் ஏற்றுக் கொண்டிருக்கலாம் நான்!

பைத்தியக்காரத்தனமாய் 'டிக்கெட்' விற்கவும் ஒப்புக் கொண்டுவிட்டேன் நான்!

பத்து, ஐந்து — இந்த இரண்டு எண்களும் என்னைக் கனவில்கூட வந்து தொந்தரவு செய்தன ! ஆயிரம் ரூபாய்க்குப் புத்தகங்களை என்னிடம் விற்கச் சொல்லித் தள்ளியிருந்தனர்!

டிக்கெட் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு வெளியே இறங்கினேன் !

ஃ ஃ ஃ

புது அனுபவம் அல்லவா? சற்றுப் பயமாகத்தான் இருந்தது ! மனத்துக்குள் ஒரு இடம் வேறு.

அட.... நமக்குக் குறைந்தது நூறு பேராவது தெரிய மாட்டார்களா! ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பத்து ரூபாய் டிக்கெட் !

ஆயிரம் ரூபாய் எளிதாகக் கிடைத்து விடும் ! முதலில் கமலாவைப் போய்ப் பார்த்தால் என்ன? ரொம்பத் தைரியமாகக் கமலாவின் வீட்டு வாசலில் போய் நின்றேன். என் போதாத காலம்.... நான் வீட்டில் நுழைந்தபோது கமலா இல்லை. கமலாவின் கணவர்தான். ''அடாடா...வாருங்கள்!... வாருங்கள்....'' என்று தடபுடலாய் வரவேற்றார். பாவம் மனிதர்.... விஷயம் தெரிந்தால் இவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பாரா என்று எண்ணிப் பார்த்துக் கொண்டேன் நான்!

வசூல் என்று போனால் ஒரு தடவைக்கு இரண்டு தடவை போகத்தான் நேரிடும். அதற்காகப் பார்த்தால் முடியுமா? — என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டு, ''கமலா வந்தால்சொல்லுங்கள்!''என்று கூறிவிட்டுக் கிளம்பிவிட்டேன்.

அடுத்தது....?

அம்புஜம் வீட்டுக்குள் நுழையும்போதே எனக்குள் தீர்மானம் செய்து கொண்டேன், விஷயத்தைச் 'சட்டுப்புட்டென்று' பேசி முடிவு செய்ய வேண்டும் என்று.

நல்ல வேளை அம்புஜம் வீட்டில் இருந்தாள்.

''அடேடே..... வா... வா'' என்று அவள் கூப்பிடுவதற்குள் அவள் அருமை நாய் ஓடி வந்து என்னைச் சுற்றிச் சுற்றிக் குரைத்தவண்ணம் வட்டமிட்டது.

''விமல்.... ரொம்ப நல்ல நாய். எத்தனை அறிவு என்கிறாய்.... ஒன்றும் பண்ணாது. பயப்படாதே!'' என்றவள், ''டாமி டாமி, உட்காரு!'' என்று கத்தினாள். அது கேட்டால்தானே? ''வள் வள்'' என்று குரைத்தபடி என் புடவை மடிப்புக்களைக் கடித்தது.

''விட்டுடு விட்டுடு'' என்றாள், அம்புஜம் கீச்சுக் குரலில். ஆனால் அது விட்டால்தானே!

''ரொம்பக் கிழிந்துவிட்டதா?'' அம்புஜம் அன்போடு தான் கேட்டாள்!

எனக்கு அழுகையாக வந்தது. என் கணவர் அன்புடன் வாங்கித் தந்த புடவையைச் சனி... இப்படி நாசம் செய்து



பம்பாய் சினிமாப் படம் ஒன்றுக்கு எவ்வளவு விளம்பரச் செலவு ஆகிறதோ, அந்தப் பணத்தில் கல்கத்தாவில் ஒரு திரைப்படமே எடுத்து விடுகிறார்கள்.



- 'முத்து'
'டைம்ஸ் ஆஃப் இந்தியா'

விட்டதே என்கிற கோபம்.... ஆனால் டிக்கெட் விற்க வேண்டுமே! புடவை கிழிந்ததைப் பெரிதாக நினைக்காமல், கடைசியாக நான் வந்த விஷயத்தைப் பற்றித் தைரியமாகப் பேச ஆரம்பித்த போது. "டிக்கெட்டா ?" என்று பிரமித்தாள் அவள்.

"எனக்கு நாடகம் என்றால் பிடிக்கவே பிடிக்காது. தவிர 'இவனை' (நாயை!) விட்டு விட்டு வெளியே கிளம்பினால் அவ்வளவு தான்.... கூடவே வருவேன் என்று பிடிவாதம் பிடிப்பான்! எதற்கும் நாளைக்கு வந்து பார். அவரிடம் கேட்டுச் சொல்லுகிறேன். இந்த மாதம் ஏகச் செலவு. 'இவனுக்கு' (!) வைத்தியச் செலவு, ஊசி அது இது என்று நூறு ரூபாய்க்கு மேலாகிவிட்டது!" நான் கிளம்பிவிட்டேன்! இனியும் 'அவனை'ப் பற்றி என்னால் கேட்க முடியாது!

போதாக் குறைக்கு இவர் வேறு!

"டிக்கெட் விற்பனை — எவ்வளவு?" என்று கேட்டு எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தார்!

"நூறு ரூபாய்தான் முடிந்தது இன்று" என்று ஒரே போடாகப் போட்டேன்! உண்மைதானே நூறு ரூபாய்ப் புடவையைத் தானே கிழித்து முடித்திருக்கிறேன்!

"பரவாயில்லையே! இந்த வேகத்தில் போனால் நீயே மூவாயிரம் ரூபாய்க்கு விற்று விடுவாய் போலிருக்கிறதே!"

இவர் 'சர்டிபிகேட்டை' ரஸிக்கும் நிலையில் இல்லை நான்.

மறு நாள் —

'நண்பர்களை' விட்டு விட்டுச் சொந்தக்காரர் வீடு நோக்கிப் படையெடுத்தேன்!

என் சித்தி என்னை அன்புடன் உபசரித்தாள். சித்தி பேரன், பேத்திகள் விஷயங்களை ரஸித்தேன். குழந்தைகளைக் கொஞ்சினேன். தாலாட்டுப் பாடித் தூங்க வைத்தேன். சித்தி நாட்டுப் பெண் தைத்திருந்த தலையணை உறையைப் புகழ்ந்தேன். பின்னே டிக்கெட் விற்பது என்றால் சும்மாவா?

சித்தப்பாவின் 'டயபடிக்' கோளாறுபற்றி முகம் கோணாமல் கேட்டேன்.

ஆயிற்று... வந்து இரண்டு மணி ஆயிற்று. இனியாவது விஷயத்தை ஆரம்பிக்க வேண்டாமோ?

நாடகம் என்று ஆரம்பித்ததும் —

"எனக்கு ரொம்ப நாளாக உன் நாடகத்தைப் பார்க்க ஆசை... அந்த 'டிக்கெட்' தா." — என்றாள் சித்தி.

எனக்குப் பெருமை பிடிபடவில்லை! முதல் 'போணி'!

'டிக்கெட் புக்கை' எடுத்தேன்.

சித்தப்பாவுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது.

"இதற்குப் பணம் உண்டா?" — என்று அவர் ஆரம்பிப்பதற்குள் —

"நன்னா இருக்கு, நீங்க பேசறது..... நம்ம விமலா போடற நாடகம்.... நம்மகிட்டேயே பணம் கேட்பாளா? 'காம்ப்ளிமெண்டரி' டிக்கெட் கொடுக்க வந்திருக்கா..." என்று சித்தி முடித்தபோது சித்தியின் நம்பிக்கையைத் தகர்க்க' எனக்குத் தெம்பில்லை.

போனால் போகிறது இருபத்தி ஐந்து ரூபாய்! நம் கைச்செலவிற்காக வைத்திருக்கிற பணத்திலிருந்து கொடுத்து விடலாம். யாருக்காகக் கொடுக்கிறோம்.....நம் சித்தியின் குடும்பத்துக்குத்தானே! அசைப்படாமல் டிக்கெட்டைத் தந்துவிட்டு வீட்டுக்கு வந்து விட்டேன்!

என் பணம் இருபத்தைந்து பழுத்தாலும் ஐந்து டிக்கெட்டுகள் கிழிந்த மகிழ்ச்சி அன்று முழுதும் இருந்தது.

மறு நாள் —

இனி சிநேகிதி, உறவு இந்த எல்லைகளைத் தாண்டித் தெரிந்த கடைகளில் புகுந்தால் என்ன?

'பாமா பிரதர்ஸ்' — எங்களுக்குத் தெரிந்த புடவைக் கடை. நான் அங்குதான் புடவை வாங்குவது வழக்கம்.

கடைக்குள் நுழைந்தேன். ஏக உபசாரம்.

"அம்மா வாங்க... அம்மா வாங்க."

அம்மா 'வாங்க' வரவில்லை என்பதை எப்படிச் சொல்லுவது? கடையில் ஏகக் கூட்டம்! எல்லோரும் என்னையே திரும்பிப் பார்த்தனர். இந்தச் சூழ்நிலையில் சும்மா டிக்கெட் மட்டும் விற்றால் நன்றாயிருக்குமா? ஒரு புடவை எடுத்து வைத்தால் ஒன்றும் குடி முழுகிவிடப் போவதில்லை.

கடையை விட்டு இறங்கிய போது புடவையில் நூறு ரூபாய் என் கையில் ஏறியிருந்தது!

பத்து ரூபாய்க்கு 'டிக்கெட்' விற்ற மகிழ்ச்சி இருக்கிறதே, அது போதும்!

எவர்சில்வர் பாத்திரக் கடையிலும் இதே கதைதான்! காரைக்குடி டப்பா ஐம்பது ரூபாய்க்கு வாங்கினேன். இருநூறு ரூபாய் டிக்கெட்டுக்களை விற்றேன்! 'ஜெனரல் ஸ்டோர்ஸில்' ஒரு ஹேண்ட் பேக்'... சில அழகுச் சாதனங்கள்...பில் இருபத்து ஐந்து...

டிக்கெட் ஐந்து!


கடைசியாகக் கணக்குப் பார்த்ததில் மொத்தம் பத்து டிக்கெட்டுகள் ஐம்பது ரூபாய்க்கு விற்றிருந்தேன்.

என் பங்குச் செலவு ஐந்நூறு ரூபாய்! பேசாமல் நூறோ, இருநூறோ என் பங்கு 'டொனேஷன்' என்று தந்துவிட்டு 'டிக்கெட்' விற்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமல் இருந்திருக்கலாம்!

இந்தப் பணியால் நான் இழந்த நண்பர்கள் அநேகம்! என்னைக் கண்டு பயந்தவர்கள் அதிகம்! ஆனால், ஒரு மாபெரும் உண்மையினைக் கண்டு கொண்டேன். ஆயிரம் ரூபாய் செலவழித்தாவது ஐம்பது ரூபாய்க்கு என்னாலும் 'டிக்கெட்' விற்க முடியும்! எனக்கும் பத்து நண்பர்கள் இருக்கிறார்கள்! வைத்தியக்காரனைச் சுற்றிப் பத்துப் பேர் அல்லவா?



"நான் இருக்க வேண்டிய இடமில்லை இது!
காடுதான் என் இருப்பிடம். சுதந்திரத்துடன் இருந்தேன் நான் அங்கே. ஒரு பாவமும் அறியேன் நான்.
இந்த மனிதனிடம் துப்பாக்கி இருந்தது. என் குட்டியுடன் நான் விளையாடிக் கொண்டிருந்தபோது என்னை நோக்கித் துப்பாக்கியைத் திருப்பினான். அசப்பில் என்னை வீழ்த்தினான்.
என்னுடைய குட்டி இப்போது வளர்ந்திருக்கும். மற்றொரு மூர்க்கனின் துப்பாக்கிக்கு அது பலியாகாமல் இருக்கவேண்டுமே! பெருமை மிகுந்த இனத்தவர் நாங்கள். சென்ற தலைமுறையினர் எங்களைக் கண்டு களித்தார்கள், இன்றோ? அழித்துக் கொண்டே இருக்கிறார்கள் எங்களை."
வனவிலங்குகளைக் காப்போம் —
இயற்கையின் செல்வம் அவை
davp 71/260




எங்கள் ஊரில் பெரியார் சிலை திறப்பு விழாவில் உணவமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசியபோது, 'சாராயக் கவிஞர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்' என்று கேலியாகப் பட்டம் சூட்டினார். ஓரிரு நாட்களில் மதுவிலக்குப் பிரசாரக் குழுவின் தலைவர் திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் பேட்டி ஒன்றில், குடியினால் ஏற்படும் நிலைமைகளைப் பற்றித் தாம் ஒரு திரைப்படம் தயாரிக்கப் போவதாகவும் அதற்கான கதையை மாண்புமிகு உணவமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் எழுதியிருப்பதாகவும் கூறியுள்ளார். குடியை எதிர்த்துக் கவிதை எழுதிய 'இராஜாஜி' அவர்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசிவிட்டுக் குடியினால் ஏற்படும் கேடுகள் பற்றிக் கதை எழுதத் துணிந்த இந்த அமைச்சருக்கு என்ன பட்டம் வழங்கலாம்?

ஈரோடு.
24–9–71 க. ரவீந்திரன்

கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியன், வேலையற்ற படித்த இளைஞர்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்ய விரும்புவோரை அழைத்து வந்து (தரகர் வேலை) சேர்ப்பதன் மூலம் பணம் பெறலாம் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். வேலை கிடைக்காததால் ஏற்கெனவே நொந்துபோயுள்ள உள்ளங்கள் மேலும் புண்பட்டன.

இந்தவிதமான தரகர் வேலையைத்தான் படித்த இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டுமா? வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருகும் விதத்தில் திட்டங்கள் தீட்டுவதை விடுத்து ஏதேதோ பேசுகிறார்களே.

திண்டுக்கல்
28-9-71 சி. அருணாசலம்

□ திரு அண்ணாதுரை பிறந்த நாள் விழாவை யொட்டிக் கடற்கரையில் நடந்த கூட்டத்தில் தமிழக முதல்வர் கூறியுள்ள சில வார்த்தைகள் ஆராயத்தக்கவை. ''கைபர் கணவாய் வழியாக வந்தவர்கள்'' என்று ஒரு குறிப்பிட்ட வகுப்பைக் குறித்துப் பேசிய முதல்வர்

□ இக்குறிப்பிட்ட கடிதம் ரூ. 15/- பரிசு பெறுகிறது.

அப்படி வந்தவர்கள் ஏதோ பேரரசுகளின் அழிவுக்குக் காரணமா யிருந்தவர்கள் என்று பேசியிருக்கிறார். ஆயிரமாயிரம் ஆண்டுகள் உருண்டோடிய பின் பழங் குப்பைகளை இப்படி அவர் கிளறக் கூடும் என்றால், அவருடைய திராவிட முன்னேற்றக் கழகம் குறித்தும் நான் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். பிரிவினைக் கொள்கையில் பிறந்து வளர்ந்தது தி. மு. க. என்பதும் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்காக ஒரு குறிப்பிட்ட வகுப்பை எதிர்த்து அவதூறாகப் பேசியே அது வளர்ந்ததும் மிகச் சமீப கால நினைவுகள். நாட்டைத் துண்டாக்கும் அந்தப் பிரிவினைக் கொள்கை இப்போது வேறுவிதமாக உருவெடுத்திருக்கிறது. ராஜாஜி ஒருவரை மனத்தில் கொண்டு, முதல்வர், குறிப்பிட்ட வகுப்பினரை நச்சுப் பாம்புகள் என வருணித்து அவற்றை அடக்குவேன் என்றும் கூறியுள்ளார். '67ல் ஆட்சியைக் கைப்பற்ற அந்த ராஜாஜிதானே அவருக்குத் தேவைப்பட்டார்? சமீபத்திய தேர்தலில்கூடக் குறிப்பிட்ட வகுப்பினரின் வோட்டுக்களைப் பெறுவதற்காகத் தி. மு. கழகம் எடுத்த பெருமுயற்சிகளையும், அவ்வகுப்பைச் சேர்ந்த ஒருவரையே தாம் வெளிநாடு பயணத்தின்போது உடன் அழைத்துச் சென்றதாக அவர் பொதுக் கூட்டங்களில் கூறியதையும் தமிழக மக்கள் அவ்வளவு சீக்கிரம் மறந்திருக்க மாட்டார்கள். காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளந்ததைத் தொடர்ந்து மத்திய அரசில் ஆளும் கட்சிக்கு ஆதரவு தந்து அரசு கவிழாமல் பார்த்துக் கொண்டதன் மூலம், இந்திரா காந்தி பிராமண வகுப்பைச் சேர்ந்தவர் என்பதைக் கருதாது அவருக்கு உதவி அளித்ததாகக் கூறியவர்கள் இன்று திடீரென்று பல்டி அடிப்பதைப் பார்க்கும்போது அவர்களிடம் இரக்கமே உண்டாகிறது.

சென்னை-8
25–9–71 ஆர். பார்த்தசாரதி

செப்டம்பர் 24ந் தேதி சென்னையில் வார்னிஷ் குடித்துக் குடிசைவாழ் மக்கள் இருபத்தாறு பேர் இறந்ததையும், 62 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதையும், அவர்களில் 12 பேர் நிலை கவலைக்கிடமாக இருப்பதையும் 'தினமணி'யில் கண்டு அதிர்ச்சியுற்றேன். மேலும் சமீபத்தில் நாட்டுச் சாராயத்தைக் குடித்த 55 பேர் பம்பாயில் மாண்ட செய்தியையும் செய்தித்தாளில் படித்தேன். மேற்கண்ட நிகழ்ச்சிகள் முதலமைச்சர் திரு கருணாநிதி அவர்களின் கவிதையில் 'வார்னிஷ் குடித்தது போதாதா? மக்கள் மாண்டது போதாதா?' என்ற வரிகளுக்கு விடையாக அமைந்து விட்டன.

திருநெல்வேலி-1
25–9–71 எம். பாலசுப்பிரமணியன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput Madras-31
Managing Editor · T Sadasivam




GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon